
கல்கி
KALKI 29.8.93 ரூ. 3.00
அமரர் கல்கி எழுதிய
தியாக பூமி
அடுத்த இதழில் ஆரம்பம்

RPS BENEFIT FUND LTD

(Declared as "NIDHI" by the Central Governemnt)

உங்களுக்கு வழங்குகிறது
20% வட்டி ...
கிடைக்கிறது 100%
நம்பகமான சேவை.

20% P.A.



பென்ஷனர் பெனிபிட் டெபாசிட் திட்டம்

(காலம் 12 மாதங்கள்)

ரூ. 12,000/- மற்றும் அதற்குக் கூடுதலான டெபாசிட்டுகளுக்கு	: ஆண்டுக்கு 20%
ரூ. 5,000/- லிருந்து ரூ. 12,000/- வரையிலான டெபாசிட்டுகளுக்கு	: ஆண்டுக்கு 19%
ரூ. 5,000/- க்குக் குறைவான டெபாசிட்டுகளுக்கு	: ஆண்டுக்கு 18%

வயதுமுதிர்ந்தோர், முன்னாள் ராணுவத்தினர், விதவைகள் மற்றும் உடல் ஊனமுற்றவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறலாம். பிரதி மாத வட்டிக்கான பின் தேதியிட்ட வாரண்டுகள் முன்னதாகவே வழங்கப்படும்.

இதர சேமிப்புத் திட்டங்கள்:
ஃபிக்சட் டெபாசிட்டுகள், குமுலேடிவ் டெபாசிட்டுகள் மற்றும் சேவிங்ஸ் டெபாசிட்டுகள்.

நகை மற்றும் அடமானக் கடன் :
தங்க ஆபரணங்கள் மீது உடனடியாக வழங்கப்படும் கடன் தவிர, சென்னை நகரில் அமைந்துள்ள அசையாச் சொத்துக்களின் மீதும் கடன் பெறலாம்.

P.G. சரண்யன்
எக்சிக்யூடிவ் பிரஸிடெண்ட்

உறுப்பினர்களுக்கு மட்டும்
வேலை நேரங்கள்

வார நாட்கள்	: காலை 9.30 முதல் மாலை 5.00 வரை
ஞாயிற்றுக்கிழமை	: காலை 9.00 முதல் 11.30 வரை

வெள்ளிக்கிழமை விடுமுறை.


தலைமை அலுவலகம்:
விஜயசாந்தி காம்ப்லக்ஸ், முதல் மாடி, 16, இராமநாதன் தெரு, தி.நகர், சென்னை-600 017. போன்: 441554

கிளை:
ஹார்மணி பில்டிங், 433-F, D.B. ரோடு, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர்-641 002. போன்: 43576.

வளரும் வட்டியுடன் வளரும் நம்பிக்கை

AKSHAR

சிரிப்புக் குண்டுகள்!


அந்த அரசுக் காரியாலயத்துல குண்டுப் புரளியாமே?
யாராவது பர்மிஷன் கேட்டிருப்பாங்க; கிடைச்சிருக்காது. அவர் தயவுல இப்ப எல்லாருக்கும் பர்மிஷன்!
கையெழுத்து படியணும்; குண்டு குண்டா இருக்கணும்னு நம்ம பையனை அடிக்கடி மிரட்டறீங்களாமே.... ஒங்க பேர்லு சந்தேகம் இருக்கு. இப்படி தடா புடான்னா....
ஐயோ! தடாவில உள்ளே தள்ளிடாதீங்க!
வெடிச் சவூருக்கு இதுதான் வழி; ஆனா இந்தப் பக்கம் ரோடெல்லாம் குண்டும் குழியுமா இருக்கும்....
ஜாக்கிரதையா பார்த்துப் போறோம்.
?!?!?
டேய் டேய்! என்னடா பண்றே?
நீ அமைச்சராச்சே! உன்னோட கார், குண்டு துளைக்காத கார்தானான்னு டெஸ்ட் பண்றேம்பா!
வயிற்றில் வெடிக்காதே! வேடிக்கை பார்க்காதே!
வேலை நிறுத்தம்
இப்பத் தானே ஸ்ட்ரைக் முடிஞ்சது; திரும்பவுமா?
இந்தத் தடவை வெடி குண்டு காம்பன்ஸேட்டரி அலவன்ஸ் கேட்கிறாங்க!

ராஜாளி

அலிபாபா குகை என்று செல்லமாக அழைக்கப்படும் அரக்கோணம் ரயில் பாலத்தின் அடி வழியே கடந்து சற்று தூரம் போக வேண்டும். மூன்றாள் உயர மதில் சுவரும் கோட்டை வாசல் கேட்டுமாக இடதுபுறத்தில் எதிர்ப்படுகிறது ஐ.என்.எஸ். ராஜாளி. இந்திய கப்பற் படையின் விமானதளம்.

ஹிந்தியில் வழிமறிக்கும் காவல்காரர். அறிமுகத்துக்குப் பின் செக்யூரிடி அறைக்கு அனுப்புகிறார். டெலிபோன் வழியே நமது வருகை தலைமை அதிகாரிக்குத் தெரிவிக்கப்பட்டு, காத்திருக்கும் நேரத்தில் பார்வையைச் சுழல விட்டால்...

நீண்ட பரந்த வெட்டவெளி. கம்பீரமான விமானங்கள். பளிங்கு வெள்ளைச் சீருடையில், தொப்பிக்குக் கீழ் நட்பான புன்னகையுடன் கடற்படை வீரர்கள் நடமாட்டம்.

அரக்கோணத்தில் இந்தியக் கடற்படைக்கு என்ன வேலை...? அதுவும் விமானதளம் அமைத்து...? இருக்கிறது - முக்கியப் பணி. பொறுப்பிலுள்ள அதிகாரிகள் விளக்குகிறார்கள்.


''இந்தியக் கடற்படைக்கு என்று தனியாக விமானங்கள் தேவை என்று 1953 இல் உணரப்பட்டது. தீபகற்பத்தின் இருபுறமும் விரியும் கடற்கரை சுமார் 6600 கி.மீ. நீளம். இதனை இடைவிடாது கண்காணிக்க வேண்டுமல்லவா? விமானங்கள் இருந்தால் நல்லதென்று கொச்சினில் முதன் முதலில் ''ஐ.என்.எஸ். கருடா'' என்ற கப்பற்படை விமான தளம் அமைத்தோம். தேவை அதிகரிக்க இத்தகைய விமான தளங்கள் கோவா, விசாகப்பட்டினம், போர்ட் ப்ளேர் என்று பாதுகாப்பு நோக்கில் முக்கியமான இடங்களில் முளைத்தவ. இவை யாவுமே பறவைகளின் பெயர்களைக் கொண்டிருக்கின்றன...''

''ஆனால் அரக்கோணம் கடற்கரை நகரம் அல்லவே...?''

''கோவாவில் (ஐ.என்.எஸ். ஹன்ஸா) விமானங்களும் பணிகளும் பெருகி விட, விஸ்தரிக்க வேண்டிய நிலை. எங்களிடம் உள்ள TU-142 ரக விமானங்களுக்கு மிக நீளமான ரன்வே தேவைப்பட்டது. இத்தேவைகளை அரக்கோணத்தில் பூர்த்தி செய்து கொள்ள முடிந்ததுடன், 1942 இல் ஆங்கிலேய விமானப் படை அமைத்த விமான தளம் ஏற்கெனவே இங்கு இருந்தது. எனவே அரக்கோணத்தில் 'ராஜாளி'க்கு '88இல் அடிக்கல் நாட்டினார் ராஜீவ் காந்தி. மார்ச் 11, 1992 அன்று அப்போதைய குடியரசுத் தலைவர் ஆர்.வி. ராஜாளியைத் தொடங்கி வைத்தார்...''







● டி.யு. விமானங்கள் ஆயுதங்களுடன் தயார்...

''இப்போது ராஜாளியின் பணி என்ன...?''

''பாதுகாப்புப் பணி தவிர, கடல் பயணத்தில் சிக்கல்களைச் சந்திக்கும் கப்பல்களுக்கு உதவும் கடமையும் இருக்கிறது. சக்திவாய்ந்த தொலைதூரத் தொடர்பு சாதனங்கள் மூலம் உதவிக் கோரிக்கைகள் எங்களை வந்தடையும். எந்நேரமும் பறந்து சென்று உதவத் தயார் நிலையில் இரண்டு விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர் படை. ஹெலிகாப்டர் ஓட்டுனர்கள் பயிற்சி மையமும் இங்கு செயல்படுகிறது...''

''போர் இல்லாத காலத்தில் பாதுகாப்புப் பணி என்பது அதிகம் இராதே...?''

''அப்படி கொட்டாவி விட முடியாது. எந் நேரமும் விழிப்புடன் இருக்க வேண்டும்... வாருங்கள் காட்டுகிறோம்...''

கூடாரங்களில் டீ குடிக்கும் சில வீரர்களைக் கடந்து விமான தளம் அடைகிறோம். சற்றே மூக்கு தூக்கிய நிலையில் வானத்தை விசாரிப்பது போல் நின்றிருக்கும் விமானங்களின் அருகே அழைத்துச் செல்கிறார்கள். ஒன்று புறப்படத் தயாராக இருக்கிறது. மற்றொன்று 'அடிவயிறு' திறந்த நிலையில் நிற்கிறது. அண்ணாந்து பார்த்தால் உள்ளே ராட்சஸ எலக்ட்ரானிக் காடு...!

"No photo please.... இதோ இருக்கிற இயந்திரங்கள் எல்லாம் கடலின் அடியில் நிகழும் ஒலி மாற்றங்களைக் கண்டுபிடித்து உணர்த்தி விடும். Sonobuoy என்ற கருவி விமானியின் வசம் இருக்கும். அதைக் கடலின் மேற்பரப்பில் செலுத்தி நீர்மூழ்கிக் கப்பல்களின் நடமாட்டத்தை அறியலாம். விமானத்தில் இணைந்துள்ள பீரங்கி, குண்டுகளை உமிழ வல்லது; இன்னும் விமானத்தின் உள்ளே ஏராளமான நவீன ஆயுதங்கள்... எல்லாமாகச் சேர்ந்து ஏகப்பட்ட கனம். அதனால்தான் மிக நீளமான ரன்வே தேவைப் படுகிறது... இந்தியாவின் எந்த விமானமும் எங்கள் ரன்வேயைப் பயன்படுத்த முடியும்; ஆனால் எங்கள் டி.யூ. விமானத்துக்குச் சென்னை விமான நிலைய ரன்வே கூட போதாது...''

''விமானத்தின் உள்ளே போய்ப் பார்க்கலாமா...? புறப்படத் தயாராக உள்ள விமானத்தில் ஏறலாமா...?''

''சாரி... அதற்கு அனுமதியில்லை. ஆனால் பயணம் எப்படி இருக்கும் என்று சொல்கிறேன். டேக் ஆஃப் நேரத்துக்குச் சுமார் நான்கு மணி நேரம் முன்னதாகவே பைலட்டும் அவர் குழுவினரும் கண்ட்ரோல் ரூமுக்குப் போக வேண்டும்....''

கண்ட்ரோல் ரூமுக்கு அழைத்துச் சென்று காட்டினார்கள். ஏ.ஸி. செய்த கண்ணாடி அறையில் திரைகளுடன் கண்ட்ரோல் பானல், கரகரப்பான கமறல்களுடன் வாக்கி டாக்கி சாதனங்கள்...

விமானக் குழுவுக்கு ஆகாயத்தில் ஏற்கெனவே பறந்து கொண்டிருக்கும் விமானங்கள் குறித்தும் வானிலை குறித்தும் இங்கு முக்கிய தகவல்கள் தரப்படும். அவற்றைக் குறித்துக் கொண்ட பைலட், விமானத்தில் ஏறி ஒவ்வொரு அங்கமாகப் பரிசோதிப்பார். விமானப் பராமரிப்புக் குழு கொடுத்துள்ள அறிக்கை திருப்தியாக இருக்கிறதா என்று பார்ப்பார். இதையெல்லாம் சரிபார்த்துப் பதிவு செய்து கொண்டு பறக்க ஆரம்பிக்க நாலு மணி நேரம் ஆகிவிடும். அப்புறம் கடல் கடந்து போய், ரோந்துப்



◆ வெள்ளை வெளேர்ச் சீருடை

பணியோ, உதவிப் பணியோ முடித்துத் திரும்ப மேலும் நான்கைந்து மணி நேரம். தரையிறங்கி, வானிலும் கடலிலும் கண்டது, கேட்டது, செய்தது எல்லாவற்றையும் ஒன்று விடாமல் எழுதிப் பதிவு செய்ய வேண்டும். இதற்கொரு மணி நேரம் பிடிக்கும். ஆக, சுமார் எட்டு முதல் பன்னிரண்டு மணி நேரம் வரை தொடர்ந்து கடுமையான உழைப்பு - இதில் ஒரு கணமென்றால் ஒரு கணம் கூட கவனம் பிசகக் கூடாது. விமானப் பயணத்தில் சொகுசு கிடையாது. சோற்று மூட்டையைக் கூட வீட்டிலிருந்து எடுத்து வர வேண்டும். விமானத்துள் கிடைக்கும் கொதிநீர் கொண்டு காப்பி மட்டும் தயாரித்துக் கொள்ளலாம்....''

அதிகாரி இதைச் சொல்லி முடிக்கும் தருணத்தில், பறக்கத் தயாராயிருந்த டி.யூ. விமானம் புறப்பட்டுக் கண்ட்ரோல் அறை முன்னதாக ரன்வேயைக் கடந்து ஒயிலாகத் தரை விட்டு எழுந்து 'ஜிவ்'வென்று உயரம் பிடித்தது...

''அந்த பைலட் எப்போது காப்பி போட ஆரம்பிப்பார்?'' என்ற கேள்வி அந்த மாலை நேரத்தில் நம்மைக் குடைந்தாலும் அதை ஒதுக்கி விட்டு மற்றொன்றைக் கேட்டோம் :

''இன்றைய இந்தப் பயணத்தில் என்ன பணி செய்யப் போகிறார்கள்...?''

''இது ஒரு பரிசோதனைப் பயணம். 'பைலட்டுக்குப் பிரமோஷன் கொடுக்கலாமா?' என்பதை இன்றைய அவரது செயல்பாடு நிர்ணயிக்கும்... ஹெலிகாப்டர்கள் பார்க்கலாமா...?''

ராட்சச கறுப்பு வண்டுகளைப் போல் பளபளவென்று மின்னிய ஹெலிகாப்டர்கள் அந்த உயரக் கூரை - சதுர அறையில் ஒழுங்காக நிறுத்தப்பட்டிருக்கின்றன. பின்னணி சுவரில் பராமரிப்பு, பாதுகாப்பு போன்றவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்தும் ஆங்கில வாக்கியங்கள். கண்ணை மூடிக் கொண்டால் பறக்கும் ஹெலிகாப்டர்கள் பங்கேற்கும் 'த்ரில்லிங்' காட்சிகள் மனத்திரையில் விரிகின்றன - கையுறை, கார்கிள்ஸுடன் ஜேம்ஸ் பாண்ட்...

''நேவி வாரம் கொண்டாடும் போது வாருங்கள். எல்லா சாகசங்களையும் பார்க்கலாம்...'' நம் மனத்தைப் படித்து விட்ட மேலதிகாரி சொல்கிறார்.

ராஜாளியில் தங்கிப் பணி யாற்றும் சுமார் ஆயிரம் பேருக்கான குடியிருப்பு வசதிகள், விளையாட்டு மைதானம், மருத்துவமனை, மினி சினிமா அரங்கம் எனச் சகல வசதிகளையும் உள்ளடக்கிய அந்த வளாகத்தை ஒரு ரவுண்ட் அடித்துத் திரும்பு கையில் இருள் கவிய ஆரம்பிக்கிறது.

''இதுவரை பார்த்ததில் இங்கே ராணுவம் மாதிரி ஒரு 'ஹோதா' இல்லையே. அதிகாரிகளைக் கண்டால் இயந்திர கதியில் 'அட்டென்ஷனாகி' சல்யூட் அடிக்கும் மரபுகள்...?''

''நேவியில் பரம்பரையாகவே அத்தனை கெடுபிடி கிடையாது. ஆதி காலத்தில் மரக்கலங்கள்தாம். இருநூறு மாலுமிகள் மரத் தரையில் விரைப்பாகக் கால் உதைத்து அட்டென்ஷனில் நின்றால் தரை என்னத்துக்காகும்? அதனால் அந்த வழக்கமே உண்டாகவில்லை. அதே போல் நேவி சல்யூட்டைக் கவனியுங்கள். விரல் நுனி நெற்றியைத் தொட முழங்கை தோளுக்குக் கீழே தாழ்ந்தே இருக்கும். அந்தக் காலத்தில் பெரிய கயிற்று வடங்களைக் கையாண்ட மாலுமிகளின் கை அழுக்காகவே இருக்கும். அதனால் யாரோ ஒரு மாலுமி ஒருமுறை இப்படி ஒரு அரை சல்யூட் வைக்கப் போக, அதுவே வழக்கமாகிப் போய் விட்டது...


''சரி உள்ளூர் மக்கள் 'ராஜாளி' பற்றி என்ன சொல்கிறார்கள்...?''

''ஆரம்பத்தில் நாங்கள் ஹிந்தி பேசிக் கொண்டு நகரத் தெருக்களில் நடந்தால் கேலி செய்வார்கள். இப்போது எங்களைப் பார்த்தால் அவர்களே 'ஆயியே சாப்' என்று ஹிந்தியில் வரவேற்கிறார்கள். இந்தப் பக்கமாகச் செல்லும் டூரிஸ்ட் பஸ்ஸுகளை நிறுத்தி அதன் கூரை மேல் பயணிகளை ஏற்றி, 'ஏரோப்ளேன்' காட்டி ஒரு ரூபாய் வசூலிக்கும் சில கில்லாடிகளும் இருக்கிறார்கள்...''

சிரித்தபடி விடைபெற்று அரக்கோணம் எல்லையைக் கடக்கும் போது டி.யு. விமானம் ஒளிரும் விளக்குகளுடன் எதிர்த் திசையில் தரையிறங்கத் தாழ்கிறது. அந்த விமானிக்குப் பணியுயர்வு கிடைத்திருக்குமா?...

- சீதா ரவி

ராஜாளி மற்றும் அரக்கோணம் தொடர்பான படங்கள் : **கோபிநாத்**



நேர்மையான ஒரு மந்திரி!

ராம் நிவாஸ் மிர்தா :

அண்மையில் புதுதில்லி சென்றிருந்த நமது நிருபர், ராம்நிவாஸ் மிர்தாவையும் வேறு சிலரையும் சந்தித்துப் பேசி விட்டு எழுதுகிறார்...

இன்றைக்கு நாட்டின் கவனம் பங்கு மார்க்கெட் ஊழல் பற்றி விசாரித்து வரும் நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் தலைவர் ராம் நிவாஸ் மிர்தாவின் பக்கமே திரும்பியிருக்கிறது! இந்த 69 வயது காங் கிரஸ்காரர், மற்ற காங்கிரஸ்காரர்களிடமிருந்து முற்றிலும் மாறு பட்டவர் என்பதைக் கடந்த ஒரு வருடத்தில் காண்பித்து விட்டார். எனவே காங்கிரஸ்காரர்களுக்குப் பயம். ''நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் தலைவர் என்றால் நடுநிலைமை வகிக்க வேண்டும். இவர் என்னடா என்றால் எதிர்க்கட்சி உறுப்பினர் மாதிரி செயல்படுகிறார்!'' என்று ஒரு காங்கிரஸ் எம்.பியே குற்றம்சாட்டினார். 'தாம் சார்ந்திருக் கும் கட்சி அபிமானம் இன்றிச் செயல்படுகிறார்' என்று மார்க்ஸிஸ்ட் கட்சி உறுப்பினர் நிபேன் கோஷ், பி.ஜே.பி.யின் ராம் நாயக் இரு வருமே சொல்லுகிறார்கள்.

போஃபர்ஸ் விசாரணைக் குழுத் தலைவர் சங்கரானந்த் மாதிரி அல்ல இவர். நுணுக்கமான விவரங்களுக்காகத் தகவல்களை சல்லடை போட்டுச் சலித்தெடுக்கிறார். மேலிடத்தைக் கண்டு துளியும் பயப்படு வதில்லை. ராஜீவ் காந்தி பிறந்த நாளுக்காக, ஒருநாள் ஜே.பி.ஸி. கூட்டத்துக்கு விடுமுறை விட வேண்டும் என்று மணி சங்கர் அய்யர் சொன்ன போது, அதை ஏற்காதவர். கூட்டு விசாரணைக் குழுவில் உள்ள காங்கிரஸ் உறுப்பினர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று துணை நிதியமைச்சராக இருந்த ராமேசுவர் தாக்கூர் உபதேசம் செய்ய முயன்ற போது, தாட்சண்யம் பார்க்காமல் நாடாளுமன்ற

உரிமைக் குழுவின் முன் அவரை நிறுத்தியவர். வி.சி. சுக்லாவின் எதிர்ப்பை அலட்சியம் செய்து, கோல்ட் ஸ்டார் மானேஜிங் டைரக்டரையும், பங்குத் தரகர் ஹர்ஷத் தலாலையும் ஜே.பி.சி. முன் இழுத்து நிறுத்தியவர். "பங்குச் சந்தை ஊழலில் சில பெரிய வியாபார நிறுவனங்கள் தம் கைவரிசையைக் காட்டியிருக்கின்றன" என்று சொல்லுகிறார் மிர்தா.

கமிட்டி அறிக்கையின் இறுதி வடிவம் எப்படி இருக்கப் போகிறது?

அதைப் பற்றிப் பேசவே மறுக்கிறார் மிர்தா. ஆனால் ஜனதா தளம், கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் மத்தியில், நிதியமைச்சகம் பற்றிய கடுமையான குற்றச்சாட்டுக்கள் இடம் பெறும் என்ற நம்பிக்கை நன்கு தெரிகிறது.

இல், முன்பு பிரணாப் முகர்ஜி நிதியமைச்சராக இருந்த போது, பம்பாய் பங்கு மார்க்கெட்டுக்காரர்கள் நடந்து கொள்ளும் முறைகேடுகளை அவருக்குப் பட்டியல் போட்டுச் சொல்லியிருக்கிறார் மிர்தா. யூனிட் டிரஸ்ட் போன்ற நிதி நிறுவனங்கள், ஷேர் விலைகள் ஏகத் தாறாக ஏற உதவுவதைக் கண்டித்தும் கடிதம் எழுதியவர்.


கூட்டுக் குழு அறிக்கைக்காகத் தினசரி பதினைந்து மணி நேரம் உழைக்கிறார் மிர்தா.

மிர்தா கலை ரசிகர். லலித் கலா அகடமியின் தலைவர். அடுத்த வருடம் நடக்க இருக்கும் ஓவிய - கலைநுட்பக் கண்காட்சிக்கு அரசு இன்னும் பட்ஜெட் ஒதுக்கீடு செய்யவில்லையே என்ற கவலை வேறு! பள்ளிக்கூடங்களில் ஓவிய வகுப்புக்கள் துவங்கப்பட வேண்டும் என்பது இவரது பெரிய ஆசை. இத்தனை வேலைகளுக்கு இடையிலும், லலித் கலா அகடமி, தில்லிக்கு அருகே நடத்தி வரும் ஓவியர்களின் ஸ்டூடியோக்களுக்கு விஜயம் செய்கிறார். சங்கீத நாடக அகடமி தலைவர் கிரீஷ் கர்னாட், மிர்தாவின் நெருங்கிய நண்பர். 69 வயதிலும் மிர்தாவிடம் அநியாயச் சுறுசுறுப்பு.

மிர்தா ஜெனிவாவிலுள்ள அமைப்பிலிருந்து சர்வதேசச் சட்டத்தில் பட்டம் பெற்றவர். தகவல் தொடர்பு, ஜவுளித் துறை அமைச்சராக இருந்தவர். ஜனதா ஆட்சியில், ராஜ்ய சபை துணைத் தலைவராக இருந்தவர். ஓவியங்கள் இவரைப் பெரிதும் ஈர்க்கின்றன. "அவற்றிலுள்ள நுணுக்கங்களைப் பெரிதும் ரசிக்கிறவன் நான்!" என்கிறார்.

அதில் மட்டுமா? நுணுக்கமான விவரங்களை, 3,000 பக்கங்களுக்கு மேல் இருக்கும் கூட்டுக் குழு விசாரணைக் குறிப்புக்களிலும் தேடி வருகிறார் மிர்தா!

– சித்தார்த்



PERFECT BENEFIT FUND LTD.
பர்பெக்ட் பெனிபிட் பண்ட் லிமிடெட்

வர்த்தக அலுவலகம் 50 ஹால்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை – 600 008.
தொலைபேசி : 8282702, 8284886

பதிவு அலுவலகம் : 74, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை – 600 008.

அலுவல் நேரம்: 8.30 a.m. - 5.30 p.m. ஞாயிறு : 8.30 a.m. - 12.30 p.m. வெள்ளி விடுமுறை

சீனியர் சிட்டிசன் வைப்புத்தொகைத் திட்டம்

ஒரு வருட காலரூ10,000/-வைப்புத் தொகைக்கு **20%** வட்டி.
மாத வட்டிக்கான காசோலைகள் முன்கூட்டியே வழங்கப்படும்.

பர்பெக்ட் பாண்ட்

அ) 5 வருட கால ரூ. 50,000/- FD க்கு **21%**+ ஊக்கத் தொகை ரூ.6000★

ஆ) 5 வருட கால ரூ. 25,000/- FDக்கு **20.5%**+ ஊக்கத் தொகை ரூ.3000★

இ) 5 வருட கால ரூ. 25,000/- FDக்கு ரூ.**72000**/ (ஊக்கத் தொகை ரூ.3000 ★ உள்ளடக்கம்)

★ ஊக்கத் தொகை கடன் பெறாமல் இருப்பின், திட்டமுடிவில் வழங்கப்படும்.

அமுதசுரபி திட்டம்

மாதம் ரூ 500 வீதம் 60 மாதங்களில் செலுத்தும் தொகை ரூ. **30000**

இரும்பப் பெறும் தொகை	6.ஆம் வருட முடிவில்	ரூ. 30000	
	10.ஆம் வருட முடிவில்	ரூ. 30000	
	14.ஆம் வருட முடிவில்	ரூ. 30000	
	21.ஆம் வருட முடிவில்	ரூ.180000	மொத்தம் ரூ. **2,70,000**

தனவிருத்தி மறுமுதலீடுத் திட்டம்

உங்கள் முதலீடு	**44** மாதங்களில்	**2** மடங்காகிறது
	66 மாதங்களில்	**3** மடங்காகிறது
	84 மாதங்களில்	**4** மடங்காகிறது

அக்ஷயா திட்டம்


வைப்புத் தொகை	இரும்பப் பெறும் தொகை 5.ஆம் ஆண்டு முடிவில்	10.ஆம் ஆண்டு முடிவில்	15.ஆம் ஆண்டு முடிவில்
ரூ. 6,000	6,000	6,000	58,200
ரூ. 10,000	10,000	10,000	97,000
ரூ. 25,000	25,000	25,000	2,42,500

கல்பதரு வைப்புத்தொகைத் திட்டம்

கால அளவு வருடங்களில்	1	2	3	4	5	6
ஆண்டொன்றிற்கு வட்டி	17.5%	18%	18.5%	19%	20%	20.5%
ஊக்கத்தொகை	–	–	0.5%	0.5%	1%	1%

கடன்

நகை மற்றும் சென்னை நகரில் உள்ள அசையா சொத்துக்களின் மீதும் குறைந்த வட்டிக்கு கடன் தரப்படும்.




இன்றைய வித்து நாளைய சொத்து

இயக்குநர் குழு .
K. Sundharam B.Sc., F.C.A., A.I.C.W.A. B.L.
R. Vivekanantan B.Com.,
S. Murali B.Com., F.C.A.,
K.Satyanarayana
Suresh Bhaiya

உறுப்பினர்களுக்கு

பஞ்சாப் கோட்டையைத் தகர்த்தவர்!



* அருள்



தினசரிப் பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள், அருள் என்கிற பெயரை. தேசிய பளு தூக்கும் போட்டிகளில் சேம்பியன். தமிழகத்தின் ஒரே பிரதிநிதி. தெனனக ரயில்வேயில் அரக்கோணம் டிவிஷனில் தலைமை டிக்கெட் பரிசோதகர் என்பது இவரது பிறிதொரு முகம்.

கோவில் சிற்பம் மாதிரியான கம்பீரத் தோற்றம், மாறாத உஜாலா புன்னகை, மென்மையான பேச்சு. இவைதாம் அருள்.

அரக்கோணத்தை அடுத்த லக்ஷ்மிவிலாசபுரம், அருளின் சொந்த ஊர்; கிராமம்.

எஸ்.எஸ்.எல்.ஸிக்கு மேல் படிப்பு ஏறாததால் கபடி, போல் வால்ட், ஃபுட்பால் என்று அலைந்து கொண்டிருந்தவரை பளு தூக்குதலில் திசை திருப்பி, கற்றுக் கொடுத்து இன்று தேசிய சாம்பியனாக (ஒரு முறையல்ல - தொடர்ந்து ஐந்து முறை!) ஆக்கிய பெருமை சர்வதேச பளு தூக்கும் சாம்பியன் எஸ். வெள்ளைச்சாமிக்கு.

விசேஷம் என்னவென்றால் பயிற்சி ஆரம்பித்த மூன்றே மாதங்களில் அருளின் முதல் தங்கப் பதக்க வேட்டை வெற்றி பெற்று விட்டது!

* சேடனா



அடுத்த இதழில்...

●● ''இனி நான் ஆடமாட்டேன்!''

- பிரபு தேவாவுடன் ஒரு சந்திப்பு.

முன்பெல்லாம் பளு தூக்குதல் என்றால் பஞ்சாபியர்களே நம் நாட்டின் சார்பில் எங்கும் கலந்து கொள்வார்கள். அவர்கள் உடல்வாகு, உணவு முறை, பயிற்சி - காரணம்! முதன் முறையாக அந்தக் கோட்டையைத் தகர்த்து ஒரு தமிழர் இன்று சர்வதேச அளவில் இந்தியா சார்பாக நிற்கிறார் - அருள்!

அதிகம் படிப்பு இல்லாமல், பெரிய குடும்பப் பின்னணியும் இல்லாது ஒரு குக் கிராமத்தில் பிறந்து இப்படி தேசிய அளவில் புகழ்பெற எப்படி முடிந்தது?

''பதினேழு வயதில் பளுதூக்க ஆரம்பித்தேன். ஆரம்பித்ததிலிருந்து அதைத் தவிர, வேறு சிந்தனையே எனக்குக் கிடையாது. பளு தூக்குவதற்கு அடிப்படைத் தேவை - உறுதிமிக்க உடல். என் கவனம் முழுக்க அதில்தான்! இயற்கையான உணவுகள் - கிராமத்தில் இருப்பதால் வெகு சாத்தியமாகிறது! அடுத்தது தீவிரமான பயிற்சி. ஒரு நாளில் ஏழெட்டு மணி நேரம் கூட இடைவிடாது பயிற்சி செய்வேன். இன்று தேசிய அளவில் பேசப்படுகிறேனென்றால் இவைதாம் காரணம்.

''இன்னொரு விஷயம். நமக்கு என்னதான் திறமை இருந்தாலும் அதை உணர்ந்து, வெளிப்படுத்த சகல வசதிகளையும் செய்து தரும் நபர்கள் கிடைக்க வேண்டும். 1981-ல் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளச் சென்ற போது, அப்போது விளையாட்டுத் துறை அமைச்சராக இருந்த பூட்டாசிங், ஒவ்வொரு வீரரிடமும் வந்து என்ன தேவை, ஏதாவது குறையா என்று கேட்டு உடனடியாக நிவர்த்தி செய்ததை மறக்கவே முடியாது. அதற்குப் பின் இப்படியான மனிதர்களைப் பார்ப்பதே அரிதாகி விட்டது.''


அருளின் சிஷ்யை சோபனா. பதினைந்து வயது. பத்தாங்கிளாஸ் மாணவி. அப்பா சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ஒரு கூலி. வாழ்வது அரக்கோணத்தை அடுத்த அம்மனூரில்.

டீவியில் பளு தூக்கும் நபர்களைப் பார்த்து ஆசை வந்து, எப்படியோ விசாரித்து அருளிடம் வந்து சேர்ந்து ஒன்றரை வருடங்கள் ஆகின்றன. மாநில அளவில் இன்று ஜூனியர் பளு தூக்கும் போட்டிகளில் குறிப்பிடத்தக்க சாதனைகள் நிகழ்த்தியிருக்கும் சோபனாவின் குடும்பம் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள சமூகத்தைச் சேர்ந்தது. தவழ்ந்து கொண்டு உள்ளே செல்ல வேண்டிய உயரக் குடிசை. உணவுப் பிரச்னையே பிரதான பிரச்னை. சத்துமிக்க உணவு வகைகள் உண்டாலொழிய பளுதூக்கும் போட்டிகளில் தேற முடியாது. அவ்வாறிருக்க சோபனாவால் எப்படி சோபிக்க முடிகிறது?

''வருமானம் குறைவுதான். ஆனாலும் என் பெற்றோர் எனக்கு எந்தக் குறையும் வைக்கிறதில்லை'' என்கிறார் சோபனா. இன்னொரு அமுதாவாகத் தோன்றுகிறதா?

சோபனாவின் கனவு - அர்ஜுனா விருது!


சந்திப்பு : பியார்



''இந்தக் கருவிகளில் எதை உபயோகிக்கப் போறீங்க... டாக்டர்...?''

''எதுக்கு அதிர்ஷ்டம் இருக்கோ... அதைத்தான்!''

- ராஜிராதா.



வாழ்க மணமக்கள்!

ஸ்ரீ டி. சதாசிவம் - ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மி தம்பதியரின் நல்லாசிகளுடன் கடந்த 20.8.93-ல் சௌபாக்கியவதி மைதிலிக்கும் செல்வன் சுப்பிரமணியனுக்கும் மிகச் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.


மணமகள் : கல்கி நிறுவனத்தின் எக்ஸிகியூடிவ் டைரக்டர் திரு வி. முரளி - திருமதி ஜனனி முரளி ஆகியோரின் புதல்வி.

மணமகன் : சுதந்திரப் போராட்ட வீரரும் ஓய்வு பெற்ற D.D.R.D- யுமான திரு நீலகண்டன் - திருமதி அன்னபூரணி நீலகண்டன் ஆகியோரின் மூன்றாவது புதல்வன்.

காலை முகூர்த்தத்தின் போதும் மாலை வரவேற்பின் போதும் சென்னை நகரப் பிரமுகர்கள், தொழிலதிபர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், விளம்பர ஏஜென்ஸி அன்பர்கள், கல்கி விற்பனை ஏஜெண்டுகள் என்று ஏராளமான அன்பர்கள் வருகை தந்து சிறப்பித்தனர்.

முதல் நாள் மாலை செங்காலிபுரம் பிரம்மஸ்ரீ பாபு தீக்ஷிதரின் உபந்நியாசமும் வரவேற்பின் போது ஸ்ரீமதி சுதா ரகுநாதனின் இன்னிசைக் கச்சேரியும் விருந்தினரை மகிழ்வித்தன.

வாழ்க மணமக்கள் - வாழ்க பல்லாண்டு.



ஐயையோ... இந்தம்மா வீட்டுலயே இடிக்கிறேன்-னாங்களே!...
தண்ணீர் ஊத்தி செடியை வளர்க்கறீங்க, விரிசல் விழுந்திடப் போகுது!...
காங்கிரஸ் பிரச்னை
பாஜக ஒருமைப்பாடு
தமிழனை இழுப்பேன், கொடி பறக்கும், பூப்பூவா கொட்டும் பாருங்க!...
ஆகஸ்ட்-15
எப்படி நம்ம ஐடியா ?...
தேர்தல் வாக்குறுதிகள்
என்ன போலீஸ் உத்யோகம்டா இது? ஆர்.டி.எக்ஸ். இல்லேன்னாங்க, இருக்குன்னாங்க... மாடியிலதான் வெடிச்சதுன்னாங்க, கீழேதான்னாங்க... யாரும் உள்ளே நுழைய முடியாத கோட்டைன்னாங்க, ஆனா, ரெண்டு பேர் நுழைஞ்சிட்டதா சொல்றாங்க... இதுல கம்ப்யூட்டர் படம் வேற... யாரைப் பார்த்தாலும் அந்த சிவராஜ் மாதிரியே தெரியுது!... கஷ்டம்டா சாமி!



கல்கி



1993
ஆகஸ்ட் 29
மலர் : 52
இதழ் : 5
ஸ்ரீமுக
ஆவணி13

பாய்ச்சல் காட்டுகிறார் வாழப்பாடி!

வாழப்பாடிக்கு இப்போதெல்லாம் ராத் தூக்கமே வரமாட்டேனென்கிறது. இரவு பகல் ஜெ. ஸ்மரணைதான்! சற்றே கண்ணயர்ந்தாலும் சொப்பனத்திலும் 'ஜெ' தோன்ற, மிரண்டு போய் விழித்துக் கொண்டு, 'விட்டேனா பார்' என்கிறார் தமிழக காங்கிரஸ் தலைவர்! ஜெ நின்றால் குற்றம், உட்கார்ந்தால் குற்றம், நடந்தால் குற்றம், பறந்தால் குற்றம், வாய் திறந்தால் குற்றம் என்று குற்றப் பத்திரிகைகள் தாக்கல் செய்வதிலேயே பொழுதைக் கழித்து வருகிறார்!

முதல்வரின் சுதந்திர தினப் பேச்சில் தீப்பொறி பறந்தது என்பது உண்மைதான். ஆனால் அது சுட்டெரிக்கும் தீப்பொறி அல்ல; எச்சரிக்கும் தீப்பொறிதான். வாழப்பாடியார் 'குய்யோ முறையோ' என்று கூக்குரலிடும் அளவுக்கு அதில் ஆபத்து ஒன்றுமில்லை. கொடியேற்றி வைத்துக் கோட்டையிலே பேசப்பட்ட அந்தப் பேச்சில் எல்லாமே நமக்குச் சம்மதமில்லை. அவரது உண்ணாவிரதம், ஆர்.எஸ்.எஸ். கட்டடத்தில் குண்டு வெடித்த சம்பவத்தை அவர் கையாண்ட விதம் போன்றவை நமது விமர்சனத்துக்கு ஏற்கெனவே உள்ளாகியிருக்கின்றன.

ஆனால், 'சில பிரச்னைகளில் மத்திய அரசு நடந்து கொள்ளும் போக்கு, இங்கு பிரிவினை சக்திகளுக்குத்தான் ஊக்கமளிப்பதாக இருக்கும்' என்று எச்சரிக்கும் உரிமை நிச்சயமாக முதல்வருக்கு உண்டு. அது மிகச் சரியான ஒரு கணிப்பும் கூட. இதற்காக வாழப்பாடியார் அலறுவதும், ஜெயந்தி நடராஜன் நாடாளுமன்றத்தில் பிரச்னை எழுப்புவதும், சவான், வீடியோ கேசட் அனுப்பி வைக்குமாறு உத்தரவு போடுவதும் கட்சிக் கண்ணோட்ட அரசியலேயன்றி வேறில்லை.

அப்படி என்னதான் சொல்லி விட்டார் ஜெ? 'காவிரியில் தண்ணீர் விடாமல் அடம்பிடிப்பது போன்ற காரியங்கள் கூட்டாட்சித் தத்துவத்தைக் காயப்படுத்தும்' என்று ரொம்ப நாசூக்காகத்தான் சொல்லியிருக்கிறார். இதில் தவறு என்ன? தமிழகத்தில் ஏற்கெனவே திராவிட கலாசாரமும் பிரிவினைவாதமும் வேரூன்றியிருப்பது அனைவரும் அறிந்ததே. அண்ணாதுரை பதவிக்கு வந்த பிறகுதான் பிரிவினைக் கொள்கை கைவிடப்பட்டது. அவ்வாறிருக்க ஹிந்தித் திணிப்பு, காவிரி பிரச்னை போன்றவை மறுபடி பிரிவினைச் சக்திகளைத்தான் உரமிட்டு வளர்த்து விடுவதாக முடியும். அச் சக்திகள் இவற்றைக் காரணம் காட்டி மக்களை உசுப்பி விடுவது எளிதாகிப் போகும். அப்படி யாருமே தூண்டி விடவில்லை என்றாலும் கூட, மக்களுக்கே மத்திய அரசு மீது வெறுப்பு வளர, அது இந்தியாவின் ஐக்கிய உணர்வுக்கு ஊறுவிளைவிக்கவே செய்யும்.

தேர்தல் கமிஷனும் மத்திய அரசும் ஏதோ கூட்டுச் சேர்ந்து சதி பண்ணி இங்கு தேர்தலை ஒத்திப் போட்டிருப்பது போல ஜெயலலிதா பேசியிருப்பது சரியல்ல. ஆனால் 'தேர்தல்கள் ஒத்திப் போடப்படுவது ஜனநாயகத்தின் அடித்தளத்தையே பாதிக்கும்' என்று அவர் கூறியிருப்பது நூறு சதவீதம் ஏற்கத்தக்கதே.

ஜெயலலிதா தலைமையை, அ.தி.மு.க. ஆட்சியை விமர்சிக்க வேண்டியதுதான். பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் காங்கிரஸுக்கு அந்தக் கடமையும் உண்டு. ஆனால் இதற்காக வாழப்பாடியார் மாமியாராக மாற வேண்டியதில்லை; ஜெயலலிதாவை மருமகளாகக் கற்பனை செய்து கொண்டு 'தாம் தூம்' என்று குதிக்க வேண்டியதுமில்லை.

காவிரி நதிநீர்ப் பிரச்னையில் நடுவர் மன்றத் தீர்ப்பு, உயர்நீதிமன்றத் தீர்ப்பு முதலியவற்றை மதிக்காமல் நடந்து கொள்ளும் கர்நாடக அரசைத் தட்டிக் கேட்கத் திராணியற்ற மத்திய அரசு, இங்கு ஜெயலலிதாவை அவரது சுதந்திர தின பேச்சுக்காகத் தட்டிக் கேட்க எண்ணினால், தமிழக மக்கள் இங்கு காங்கிரஸையும் அத்துடன் சேர்த்து மத்திய அரசையும் தட்டிக் கேட்க அதிக நாள் ஆகாது.

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. – பாரதியார்.



... பருகுவீர் பரிபூரண உணவை

ஆம், பருகுவீர் காம்ப்ளான். உங்கள் உடலுக்குத் தேவையான அனைத்து 23 இன்றியமையாத ஊட்டச்சத்துக்களும் விஞ்ஞான ரீதியில் திட்டமிட்ட விகிதங்களில் அடங்கியுள்ள திட்டமிட்ட பரிபூரண உணவாகும் காம்ப்ளான்.



23
மூலாதார
சத்துணவுகள்
திட்டமிட்ட
விகிதங்களில்

பால் சேர்க்கத்
தேவையில்லை

காம்ப்ளான்®

திட்டமிட்ட பரிபூரண உணவு.



GX/20/202 TAM R2



பிரச்னைக் குள்ளான துரியன் சிலை

துரியோதனன் விவகாரம்!

பனப்பாக்கம்.

அரக்கோணத்திலிருந்து அரைமணி பிரயாண தூரம். சற்றே பெரிய கிராமம். பெரும்பாலும் நெசவாளர்கள். சிறுபான்மையினர் விவசாயம், ஏனைய தொழில்கள். பனப்பாக்கத்தில் ஒரு பிரச்னை. ஊரே இரண்டு பட்டு நிற்கிறது. விஷயம் இது தான்:

பனப்பாக்கத்தில் 100 வருடம் பழைமையான திரௌபதி அம்மன் கோயில் ஒன்று இருக்கிறது. வருஷா வருஷம் பாரதக் கதை 28 நாள் சொல்வது, தீமிதி, தெருக்கூத்து இவையெல்லாம் இங்கு நடக்கும். பொது மக்களால் நன்கொடை வசூலித்து நடத்தப்படுவது.

மகாபாரதத்தில் துரியோதனன் மரணச் சம்பவம் வருகிற போது 'துரியன் படுகளம்' என்று மண்ணாலான பெரிய துரியோதனன் சிலை செய்து வைப்பது கிராமாந்திர வழக்கம். அன்றே தீ மிதியும் நடக்கும். மறுநாள் தருமர் பட்டாபிஷேகத்துடன் திருவிழா நிறைவுறும்.

கடந்த வருடம் இந்தத் திருவிழாவின் போது துரியன் படுகள நிகழ்ச்சிக்கென 110 அடி நீளத்திற்குப் பிரும்மாண்டமான, சிமெண்டாலான துரியோதனன் சிலை ஒன்றை அமைத்து விட்டனர்.

ஊருக்குப் பொதுவான புறம்போக்கு நிலத்தில், கோயிலுக்கு எதிரே வானம் பார்த்துப் படுத்துக் கிடக்கும் இச்சிலை, அந்தக் குட்டிக் கிராமத்தில் ஒரு பெரும் புயலையே கிளப்பி விட்டிருக்கிறது.

''துரியோதனன் சிலை, 'அதர்ம அழிவின்' ஒரு குறியீடாக மண்ணால் செய்யப்பட்டு - அன்று ஒருநாள் மட்டும் பார்வைக்கு வைக்கப்படுவது. அதை சிமெண்டால் செய்து நிரந்தரமாக ஒரு பொது இடத்தில் வைப்பதென்பது ஊருக்கு ஆகாது'' என்பது ஒருதரப்பு வாதம்.

''வருஷா வருஷம் மண்சிலை செய்வதற்கு ரூ. 2000/- வரை செலவாகிறது. கோவில் வருமானம் முழுக்க நன்கொடைகளைச் சார்ந்தே இருக்கிற நிலையில் வருஷம் தோறும் சிலைக்காக மட்டும் ரூ. 2000/- செலவழிப்பது சரியல்ல. அதனால்தான் நிரந்தரமாகச் சிலை செய்ய முடிவு செய்தோம்!'' என்கின்றனர் சிலையை அமைத்த, கோவில் நிர்வாகிகள்.

துரியோதனன் சிலையை அப்புறப்படுத்த கலெக்டரிடம் மனு கொடுத்திருக்கின்றனர், ஒரு சிலர்.

''கிராமத்து விவகாரத்தை நாமே தீர்த்துக் கொள்ளாமல் கலெக்டரிடமும் தாசில்தாரிடமும் போய்ச் சொல்வது அவமானமில்லையா?'' என்பது எதிர்தரப்புக் கேள்வி.


சிறு பொறியை ஊதிப் பெரிதாக்குவானேன்? 'சிலை வேண்டுமா, வேண்டாமா?' - பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண முடியாவிட்டால் வோட்டெடுப்பு நடத்தலாமே?

– நியூஸ்மேன்

● திரௌபதி அம்மன் கோயில்



அரக்கோண அவியல்!



* பாலதிரிபுரசுந்தரி




* சுந்தரம்

●● 'சுந்தர் லஞ்ச் ஹவுஸ்' என்றதுமே அரக்கோணத்தில் நாக்கைச் சப்புக் கொட்டுபவர்கள் ஏராளம். நாம் சென்ற வேளையில் உண்ணக் கிடைத்த ஒரு புதுவித தோசை பற்றி க.ல.ஹ. உரிமையாளர் சுந்தரத்திடம் கேட்ட போது விவரம் தந்தார். (சுந்தரம் பற்றி ஒரு அவசரக் குறிப்பு : பால் வியாபாரத்தில் ஆரம் பித்து படத் தயாரிப்பு வரை பல்துறை வித் தகர். கலா ரசிகர். இலக்கியப் பித்தர். ''அண்ணன், தம்பி மொத்தம் இருபத்தி நாலு பேர். நான் ஒன்பதாவதோ, பத்தாவதோ!'' - சுந்தரம்.)

இனி அந்த தோசை : 2:1:1 என்கிற விகிதத்தில் முறையே மைதா, அரிசி, கடலை மாவு. தோசை மாவு பதத்தில் சேர்த்துக் கரைக்கவும். தோல் சீவின தக்காளிப் பழத்தை மசித்து அதன் தலையில் போடவும். (சற்று சிவப்பு நிறம் மாவில் தெரிகிற அளவுக்கு.) மறக்காமல் உப்பு. தோசை வெந்ததும் பொடித்த மிளகுத் தூளை மேலாகத் தூவி, பின் உண்டு பார்க்கவும்.

இந்த 'வெஜிடபிள் ஆம்லெட்டு'க்குத் தொட்டுக் கொள்ள புதினா, கொத்துமல்லி, தேங்காய் - ஏதாவது ஒரு சட்டினி இருந்தால் சௌகர்யம். எல்லாமும் இருந்தாலும் உத்தமம். எதுவுமே இல்லாவிட்டாலும் சுவைக்குப் பஞ்சமில்லை.



* 70 வேளாளர் தீக்குளித்த இடம்

●● அரக்கோணத்திலிருந்து சுமார் பத்து கி.மீ. தூரத்தில் தமது விவசாயப் பண்ணையில் தெளிப்பு நீர்ப் பாசனக் கருவி ஒன்றை நிறுவியிருக்கிறார் தட்சிணாமூர்த்தி. இதில் சக்கரம் பொறுத்தப்பட்ட பகுதி சுற்றிய படி வரும். நடுவில் நீண்டுள்ள 'பைப்' வழியே தண்ணீர் சப்ளை. ஆங்காங்கே ஷவர் மாதிரி தெளிக்கப்படுவதால் எல்லா இடங்களிலும் நீர் சமமாகப் பாய்கிறது. குறைந்த அளவு நீரில் அதிகபட்ச பாசனம்.

●● அரக்கோணத்தைச் சுற்றியுள்ள கிராமங்களுள் பழையனூரும் ஒன்று. பழையனூர் நீலி கதை கேள்விப்பட்டிருப்பீர்கள். சந்தேகப்பட்ட புருஷனை, ஆவியாக வந்து கொன்ற பெண்ணின் கதை. 'நீ கொல்லப் பட்டால் நாங்களும் தீக்குளிப்போம்' என்று சொல்லி சொல்காக்க அந்தக் கணவனுக்காக 70 வேளாளர்கள் தீக்குளித்த இடம் படத்தில் நீங்கள் பார்ப்பது.

பழையனூரில் வேறொரு கதையும் சொல்கிறார்கள். காரைக்கால் அம்மையார் இங்கிருந்துதான் தலைகீழாகத் திருவாலங்காடு சிவன் கோவிலுக்குப் போனதாக வரலாறு.

●● நெமிலியில் பாலதிரிபுர சுந்தரி பீடம் வெகு பிரசித்தம். மூல விக்ரகம் மிகுந்த சக்தி வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. நவராத்திரி சமயத்தில் இக்கிராமத்தில் நிற்க இடமில்லா அளவுக்குக் கும்பல். பீடம் அமைந்திருக்கிற இடத்தைச் சுற்றி குசஸ்தலை ஆறு போகிறது. தண்ணீர்தான் இல்லை.

- நிருபர்


WHICH MAGAZINE GIVES YOUR CHILD THE BEST OF
INFORMATION
STORIES
AND FEATURES?
GOKULAM
The monthly magazine for children
OF COURSE!
BUY YOUR CHILD A COPY TODAY!
SEPTEMBER '93 ISSUE
ON SALE
OR WRITE TO 'GOKULAM' (ENGLISH), 47 JAWAHARLAL NEHRU ROAD, EKKADUTHANGAL, MADRAS - 600 097 FOR A SUBSCRIPTION.
96 pages for just Rs. 3!

கல்கி அவதாரம்

யதா யதாஹி தர்மஸ்ய
க்லானிர்ப் பவதி பாரத ।
அப் ப்யுத்தானம் அதர்மஸ்ய
ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம் ॥
பரித்ராணாய ஸாதூனாம்
விநாசாய ச துஷ்க்ருதாம் ।
தர்மஸம்ஸ்தாபனார்த்தாய
ஸம்பவாமி யுகே யுகே ॥

– பகவத் கீதை

கலியுகத்தில், எப்போது தர்மத்துக்கு அழிவு வருவது போல தோன்றுகிறதோ, எப்போது மக்கள் நியாய தர்மங்களை மறக்கிறார்களோ, எப்போது உலகமே அழிவுப் பாதையில் செல்கிறதோ, அப்போது,

பூமித் தாயின் பாரத்தைக் குறைக்கும் பொருட்டு, கடவுள் வானத்திலிருந்து, கையில் வாளுடன், குதிரையில் வந்து, கல்கி அவதாரம் எடுத்து உலகத்தை அழிப்பார்.

மறுபடியும் புதிய உலகம் படைப்பார்.

எச்சரிக்கை!

முடிவுக்கு வந்தாயிற்று.
அதிகம் போனால் ஆறு நிமிடம்.
அதற்குள் மனசாரக்
கடவுளிடம்
சரணடைவோம்.

ஆத்மாக்களை
ஜுலா வரவேற்கும்

அத்யம் – **ஔ**

ஔவையார் நெல்லிக்கனி பெற்று அமரத்துவம் அடைந்தது போல சாகாவரம் பெற்று, உலகம் பூராவும் குரு ஹீரோவாகி இருந்தான். அவனைத் தெரியாதவர்களை ஒரு கை விரல் விட்டு எண்ணி விடலாம். தாங்கள் கடவுளாக மதித்த ஆத்மாவால், குருவின் மர்மம் காண முடியாததால், ஆத்மா பேரில் நம்பிக்கையிழந்தார்கள். உலகில் இரண்டு பேர் பேச நேர்ந்தால் அது குரு பற்றினதாகவே இருந்தது. துணிகளுக்கு குரு என்று பெயரிட்டார்கள். பொருட்களுக்கு குரு என்று பெயரிட்டார்கள்.

குருவை விவியில் காட்டச் சொல்லி மக்கள் வேண்டினார்கள். அதற்காக உண்ணாவிரதம் இருந்தார்கள்.

குரு வேறு உலகத்தில் இருந்து வந்த கடவுள் என்றும் அவனை சரிவர உபசரிக்காத குற்றத்துக்குத் தண்டனையே மக்கள் மறைவு என்றும் தொடர்ந்து துன்புறுத்துவதை நிறுத்தாவிட்டால் வானத்திலிருந்து வந்த கடவுள்கள் பூமியை அழித்து விடுவார்கள் என்றும் எரிக்வான் டானக்கினின் சிஷ்யர்கள் ஹேஷ்யம் சொன்னார்கள். ஆதாரம் காட்டினார்கள்.

அரசு எதிர்ப்பு இயக்கங்கள் குருவை தங்கள் தலைவனாக ஏற்றுக் கொண்டன. ஆத்மாவை அழித்து உலகாளும் தலைவனாக குருவை கட்டியங் கூறினார்கள். ஆதர்ஸ புருஷனாக்கினார்கள்.

ஸ்ரீநிவாஸ குருவைப் பற்றிய விவரங்களை அறிவதே வாழ்க்கையின் குறிக்கோள் என்பதாக ஓர் ஆர்வம், ஜுரமாக மக்கள் மத்தியில் பற்றிக் கொண்டது.

அன்று உலக மக்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத தினம். காரணம் இரண்டு நிகழ்ச்சிகள்.

1. சந்திரனில் அமைத்த சொர்க்க நகரில் புதிதாக உயிர் குடியேற்றம். 'அப்பல்லோ 600'.

2. குருவை உலக ஹிப்னாடிஸ வல்லுநர்கள், பொது மக்கள் மத்தியில் சோதித்து மர்மம் உடைக்கப் போகிறார்கள்.

இரண்டு நிகழ்ச்சிகளும், ஒரே சமயத்தில் விவியின் வெவ்வேறு சேனல்களில்.

ஆத்மாவுக்கு ஆபத்து

ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டதால் 'அப்பல்லோ 600' தேதியை ஒத்திவைக்க முடியவில்லை. குரு தேதி, ஒத்திவைத்தால் மக்கள் மத்தியில் பிரளயமே தோன்றி விடும்.

இரண்டு நிகழ்ச்சிகளையும் ஒரே சமயத்தில் ஒலிபரப்பியும் விவி வைத்திருந்த மக்கள் அத்தனை பேரும் குருவின் ஹிப்னாடிஸ நிகழ்ச்சியையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். விவி இல்லாதவர்கள் பக்கத்து வீடுகளிலும் பொது இடங்களில் அமைக்கப்பட்ட விவிகளிலும் பார்த்துக் கொண்டிருந்தனர். உலகின் ஓரிடத்தில் காலையிலும், பிறிதோர் இடத்தில் மதியமும், இன்னொரு இடத்தில் இரவிலும் என்று வெவ்வேறு நேரமானாலும் ஒரே சமயத்தில் விவி முன் விழித்திருந்தார்கள்.

10,

9,

8


என்று கௌண்ட் டவுனுக்குக் காத்திருந்தது ''அப்பல்லோ 600''. பூமி போலவே சீதோஷ்ணம், காற்று, நீர் அமைக்கப்பட்ட சந்திரனின் சொர்க்க நகரில் புதிய மனித இனத்தை உருவாக்கும் திட்டத்தின் முதல் கட்டமே 'அப்பல்லோ 600' பயணம்.

உலக ஜீவராசிகளில் ஒவ்வொரு இனத்திலும் இரண்டு வீதம் முற்கட்ட குடியேற்றம் தொடங்கும். ஓர் ஆண் - ஒரு பெண், நவீன ஆதாம் - நவீன ஏவாள்.

ஆதாம் முத்தமிட,

''ஹெவனில் போய், படைப்பது தானே நம் தொழிலே. இங்கேயே ஆரம்பிக்கணுமா... போறு'' என்றாள் ஏவாள்.

மிருக இனங்கள் அழிந்து அரிதாகிப் போனதால், சாஸ்திரத்துக்காக ஓர் ஆண் குரங்கு, ஒரு பெண் குரங்கு மியூஸிய உடல்கள்,



ஆண் நாய், பெண் நாய், மற்றும் அனைத்துத் தாவர விதைகள், ஒரு வருடத்துக்குத் தேவையான உணவு மாத்திரைகள், மருந்துகள்...

இவற்றுடன் புதிய மனித இனம் விதைக்க அப்பல்லோ 600 விண்ணில் சீறியதைக் கோடிக்கணக்கான கண்கள் விவியின் முதல் சேனலில் பார்க்காமல் அடுத்த சேனலில் டாக்டர்கள் குருவிடம் பேசியதை மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த மாபெரும் திறந்த வெளித் திடல் மைக்ரான் இடைவெளி இல்லாமல் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. திடலின் நடுவில் உயரமான மேடையில் குரு அழைத்து வரப்பட்ட போது, கைதட்டல் ஆரவாரம். வானத்திலிருந்து வந்தவனைப் பார்க்கப் பரவசம் உண்டானது.

பல நாடுகளில் இருந்து வந்த தலைசிறந்த ஹிப்னாடிக் வல்லுனர்கள் கை உயர்த்திக் கூட்டத்தினரை அமைதிப் படுத்த, மயான அமைதி நொடியில் உருவானது.

ஆங்காங்கே, ஆயிரக்கணக்கான விவிகளில் கூட்டத்தினர் கண்கள் ஒட்டிக் கொண்டன. இமைக்க மறந்த கண்கள்.

நளினி சாஸ்திரி

அகலத் திறந்த காதுகள்.

அடுத்த பத்தாவது நிமிடம், குரு ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கினான். வயதில் பின்னோக்கிப் பயணித்து 12 வயதில் புதுச் சத்திரம் பள்ளியில் உமாவைக் காதலித்தான்.

அடுத்த பத்தாவது நிமிடம் இருபது வயதாகிப் பாரதியாரிடம் பைத்தியமாகி, அச்சமில்லை, அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்று உணர்ச்சியுடன் பாடினான்.

தொடர்ந்த அரைமணியில் 25 வயதுக்குப் போய், தான் மாட்டிக் கொண்ட தலைகால் புரியாத பத்தாம் அத்தியாயம் விவரித்தான்.

''அது ஒரு புது உலகம். ஜுலா. உருவமற்ற அருவ உலகம். அ பொருள் உலகம். The world of souls. ஆத்மாக்கள் மட்டுமே நிரம்பிய உலகம். மனோசக்தியால் காலங்களை வளைக்குமளவு முன்னேறிய உலகம்.

''இருந்தும் ஒரு கறுப்புத் துவாரா, பிளாக் ஹோல் உறிஞ்சலில் அவ்வுலக ஆத்மாக்களுக்கு ஆபத்தாகி, மீளாதபடி அழிந்து விட்டன. ஜுலாவில் ஆத்மாக்களுக்குப் பஞ்சம். அவர்கள் விஞ்ஞானத்தால் ஆத்மாக்களை உருவாக்க இயலவில்லை.

''ஆத்மாக்களுக்காகப் பல உலகங்களைத் தேடி, கடைசியில் நம் பூமி அவர்கள் கவனம் கவர்ந்தது. நம் உயிர்கள் அவர்கள் உலகத்துக்கு ஏற்றதா என்று பரிசோதிக்க சில உயிர்களை ஈர்த்துக் கொண்டார்கள். அதில் நானும் ஒருவன்.''

''ஐநூறு வருடமாய் அங்கு என்ன செய்தாய்?''

''ஒளியை விட வேகமான ஜுலாவினை நாம் பார்க்க முடியாது. அந்த உலகைக் காண வேறுவித வடிவமாக நாம் மாற வேண்டும். அப்போதுதான் இல்லாத அந்த உலகை நாம் காணலாம். அதாவது உணரலாம். ஒளியை விட வேகமான உலகமானதால் நான் அங்கிருந்த சில வருடங்களில் பூமியில் சுமார் 500 வருடங்கள் ஓடி விட்டன. அங்கிருக்கும் பரமாத்மாவிடம் ஜீவசக்தி பெற்று மனத்தளவில் உழைத்தேன்.''

''ஜுலாவில் இருந்து உன்னால் எப்படித் தப்பி வர முடிந்தது?''

''நமது உடம்பு பலவித அணுக்களால் ஆனது. அவை குறிப்பிட்ட அமைப்பில் கவர்ச்சி விசையால் இணைந்திருப்பதால் நம் உடல் இப்படி காணப்படுகிறது. இந்த அணுக் கட்டமைப்பை மாற்றி அமைக்கையில் கண்ணுக்குத் தெரியாத ஒரு நிலையை உடல் அடைகிறது. அந்

நிலையில் நம்முடல் அணுக்கள் ஒளியை மிஞ்சும் வேகத்தில் அதிர்வதால் நாம் காலம் கடந்த ஜூலாவை அடையலாம். அங்குள்ள பரமாத்மா ஒளி மின்னல் நம்மை ஈர்த்துக் கொள்ளும்.

''நான் ஜூலாவில் இருந்து தப்பி வரவில்லை. தப்பவும் முடியாது. நம்முயிர்கள் - நினைக்கத் தெரிந்த - மனோசக்தி பயன்படுத்தத் தெரிந்த உயிர்கள் அவர்களுக்குத் தேவைப்பட்டதால் என்னைத் திரும்ப பூமிக்கு அனுப்பினார்கள், மேலும் உயிர்களுக்காக.

''அ பொருள் உடலுடன் இருந்த என் உடல் அணுக்களை சில அபூர்வ ஒலியலைகள் மூலம் அதிரச் செய்து, பழைய உருவம் கொடுத்தார்கள்.

''சுயரூபம் பெற்ற நான் பூமியின் ஏதோ பகுதியில் இருந்தேன். 500 வருடங்கள் ஓடியிருந்தது. பூமியின் சீதோஷ்ணத்துக்கு ஏற்ப என் உடலில் மாறுதல்கள். பழைய நான். பசி தாகம் கொண்ட பழைய குரு.''

''என்றால் பூமியில் பிரஜைகள் மறையக் காரணம் நீதானே. மறைந்தவர்கள் அருவ உலகத்தில் தான் இருக்கிறார்களா?''

பில்லியன் பில்லியன் கண்கள் பசி மறந்து, விழியில் குருவைப் பார்த்திருக்க, அவன் தொடர்ந்து சொன்னான்.

''ஆமாம், அவர்கள் ஜூலாவில்தான் இருக்கிறார்கள்.''

''எப்படிப் போனார்கள்? உன் பங்கு என்ன?''

''பூமிக்கு வந்த நான் உயிர்களைக் கவரும் எண்ணம் கை விட்டேன். ஆனால், மக்கள் மனத்தளவில் மாறி விட்டார்கள். இரக்கம், கருணை போன்ற ஆதார குணங்களை இழந்து, அழிவுப் பாதையில் இருந்தார்கள். மனிதாபிமானம் மறந்து மனிதம் மாண்டிருந்தது.

''தாக உயிர்க்குத் தண்ணீர் தராத மக்கள் இருப்பதை விட இல்லாமலிருப்பதே மேல் என்று தோன்றியது. என் ஆதர்ஸக் கவிஞன் பாரதியாரின் வரிகள் நெஞ்சில் தீ மூட்டியது. தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம். எனவே முடிவு செய்தேன். அதற்குத் தகுந்தாற்போல என்னில் சில மாறுதல்களைச் செய்திருந் தார்கள்...''

என்ற குரு தன் நெற்றியைத் திறந்து காட்டினான்.

நெற்றிக்குள்ளிருந்த ஒரு பட்டனை அழுத்தினான்.

ஞீஞீ ஞீஞீஞீ ஞீஞீ ஞீஞீஞீ ஞீஞீ

உடனே, இதுவரை யாரும் கேட்டுணராத ஒருவித விசேஷ ஒலி நெற்றியிலிருந்து வெளிப்பட ஆரம்பித்தது. குரு தொடர்ந்தான்.

''இந்த ஒலியைக் கேட்கக் கேட்க அந்த அதிர்வில் உடல் அணுக்கள், இடம் மாறி, தூண்டல் காரணமாகவும், சங்கிலித் தொடர் மாற்றம் காரணமாகவும் வேகம் அடையும். ஒரு அணு வேகமடைந்தாலே மற்ற அணுக்களும் சிறிது நேரத்தில் தூண்டப்பட்டு விடும். நம்முடல் பூமியைப் பொறுத்தவரை மறையும். ஆனால் அ பொருள் உடலுடன் நமது ஆத்மா ஜுலாவில் சஞ்சரிக்கும்.''

ஸ்ரீநிவாஸ குருவின் திறந்த நெற்றியில் உண்டான நவீன ஒலி அலைகள் நிற்காமல் அதிகரித்தது.

அந்தப் பொது இடத்தில் கேட்டுக் கொண்டிருந்த மக்கள் அனைவரும் உடல் அதிர பரவசமாகி பரமானந்த நிலையில் மறைந்து கொண்டிருந்தார்கள்.

மறைந்து கொண்டிருந்தார்கள்.

விவிக்களில் இதனைப் பார்த்துக் கொண்டிருந்த, கேட்டுக் கொண்டிருந்த ஏறத்தாழ உலக மக்கள் அத்தனை பேரும், ஏறத்தாழ ஒரே சமயத்தில், நவீன ஒலி யதிர்வில் அணுப்பெயர்ச்சி அடைந்து, ஜுலாவுக்கு இடப்பெயர்ச்சி அடைய, உலகில் -

கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து கொண்டிருந்தார்கள்.

உலகமெங்கும் ஒரே ஒலி.

எல்லாரும் மறைந்து கொண்டிருந்தனர்.

எல்லாரும்.
உலக மக்கள் அனைவரும்.
இதை எழுதும் நானும்.
இதைப் படிக்கும் நீங்களும்.
எல்லாரும் மறைந்...
முற்......

பின்குறிப்பாய்,
பிள்ளையார் சுழி போடும்,

அத்யயம் - ஃ

ஃப்ளையிங் கண்டிஷன் புரியாமல் திணறினார்கள் ஆதாமும் ஏவாளும். திடீரென்று பூமியில் மக்கள் அழிய, மாஸ்டர் கண்ட்ரோல் நிலைய கட்டளைகள் வராமல் போக, திகைத்து, நிலைப்பட்டு, செய்வதறியாது திரும்ப பூமிக்கே வந்து இறங்கியது 'அப்பல்லோ 600'.

ஆதாமும் ஏவாளும் பூமியில் கால் வைத்த போது, பூமியில் ஓர் உயிரும் இல்லை.

''பசிக்கிறது'' என்றாள் ஏவாள்.

''படைக்கலாம் வா'' என்றான் ஆதாம்.

(படைப்பு தொடரும்)

டீ கடை கிளப்

''ஏப்பா முன் சாமி... குடிக்கற தண்ணி புட்சிருந்தா ஒரு கொடம் தாப்பா... வேலாயி ரேஷனாண்ட பூட்டா... நா வேலமேல பூட்டேன்... அந்த அர அவர்ல தண்ணி லாரிக்காரன் வந்துட்டுப் பூட்டாம்பா...''

''சர்தான், சர்தான்... குந்து. ஸிங்கிள் டீ அடிக்கட்டு, ஒரு நூஸ் கேட்டுக்கினு போவே....''

''அப்பாடி இன்னாபா நூசு...?''

''திருவனந்தபொரத்துக்கு ஒரு பொம்மனாட்டி ரயில்ல வந்து எறங்கிக்கினு, வூட்டுக்கு இட்டுக்கினு போவ யாராச்சும் வந்திருக்காங்களான்னு சுத்தி சுத்திப் பார்த்திருக்கா. அந்த நோட்டம் வுட்டுக்கினு மூணு பன்னாடைங்க, 'தோம்மா.... நாங்க உங்க பக்கத்து வூட்லதான் கீறோம். இப்ப நாங்களும் வூட்டாண்டதான் போறோம்'னு சொல்ல, பாக்கறதுக்குக் கவுரத்தையா கீறாங்களேன்னு அந்தப் பொம்பளையும் நம்பிக்கினு போவ.... போவ எட்த்துலதான் அவங்க கந்த பம்மாத்து ஆளுங்கனு தெரிஞ்சிருக்கு.....''


''இது இன்னாபா நூசு.... கழிசடைங்க எல்லா வூர்லயுந்தான கீறாங்க...''

''மெய்தாம்பா. ஆனாக்க, அந்தப் பன்னாடைங்கள்ல ஒருத்தன் ஒரு மந்திரியோட பி.ஏ.பா!''

''படா அசிங்கமா கீதே!''

''அப்பால இன்னொரு நூசு... எர்ணாகொளத்துல ஜார்ஜ்னு ஒருத்தர் டெலிபோனுக்குத் திடுதிப்புனு லட்ச ரூவாய்க்கு மேலே பில்லு வந்திச்சாம். அந்தாளுக்கு ஒரே ஷாக்கு! கோர்ட்டுக்குப் போய்ட்டார். கேஸப் பார்த்த ஜட்ஜே அசந்து போய்ட்டு, ஒடனடியா டெலிபோன் டிபார்ட்மெண்ட் மேல சி.பி.ஐ. வெசாரணையே நடத்தணும்னு உத்தரவு போட்டாராம்!''

''இத்தப் போயி ஒரு நூஸ"ன்னு சொல்றியே... நா சொல்றதைக் கேட்டாக்க நீ இன்னாதான் சொல்லுவியோ... சொல்றங் கேளு... கேரளாவுல அம்பலப்புழைன்னு ஒரு வூரு... ஆலப்புழை ஜில்லாவுல கீது. அந்த வூருக்கு ஸ்ரீகண்டன் நாயர்னு பேர் போட்டு ஒரு லட்டரு அனுப்ச்சாரு ஜில்லா கலெக்டரு. அந்த வாங்கிப் பிரிச்சிப் பார்த்தாங்க அந்த நாயரோட சம்சாரம் மகேஸ்வரி. அவங்களுக்குத் தலை 'கிர்' அடிச்சுருச்சி!''



''அட அந்தக் கட்தாசிலே அப்படி இன்னாதாம்பா எழுதியிருந்தாங்க?''

''எல்லாம் நல்ல சமாசாரந்தான். ஸ்ரீ கண்டன் நாயரு சுதந்திரப் போராட்டத்திலெல்லாம் இருந்தவராச்சே.... அத்தொட்டு, இப்போ ஆலப்புழை டவுனு ஹால்ல நடக்கப்போற 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தோட பொன்விழாக் கொண்டாட்டத்தில கலந்துக்கினு அவரோட சுதந்திரப் போராட்ட அனுபவங்களையெல்லாம் சொல்லணும்னு எழுதியிருந்தாங்க.''

''தியாகிக்கு நல்ல மருவாதிதானே.... கம்முனு போவ வேண்டியதுதானே!''

''அதெப்படிப்பா போவ முடியும்? ஸ்ரீ கண்டன் நாயர் பத்து வருசத்துக்கு முந்தியே செத்துப் பூட்டாரேப்பா....''

– திருவனந்தபுரத்திலிருந்து எஸ். எஸ். மணி அனுப்பிய தகவல்களின் அடிப்படையில்.



சுத்தம் என்றால் என்ன? இன்று முதல்
NEW
RIN
SOLAROX 3
LINTAS RIN PR 2432 TM

கண்டுணருங்கள்!

அறிமுகப்படுத்துகிறோம் இந்தியாவின் மிகச்சிறந்த டிடர்ஜெண்ட். புதிய ரின் ஸோலரக்ஸ் 3. வேறெந்த இதர பவுடர்கள், வில்லைகளையும் விட மிக மிக சக்தி வாய்ந்த டிடர்ஜெண்ட். மிகச் சமீபத்திய சர்வதேச டிடர்ஜெண்ட் தொழில் நுட்பத்துடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எனவே சுத்தம் என்கிற வார்த்தைக்கு உங்களுக்கு முதன் முதலாய் முழு அர்த்தம் புரியும். மேலும் **3 புரட்சிகர பலன்களை** இது அளிக்கிறது... ஒவ்வொரு முறை பயன்படுத்தும் போதும்! பாருங்கள் இதன் மூன்று பலன்களை :


1

கடினமான கறைகளை அகற்றுகிறது... துருக் கறைகளையும் கூட! மற்ற சிறந்த டிடர்ஜெண்ட்டுகள் துருக்கறையை இலேசாக்க மட்டுமே செய்யும். ஆனால், துருக்கறையை இருந்த இடம் தெரியாதவாறு **முற்றிலுமாக அகற்றிவிடும் ரின் ஸோலரக்ஸ் 3. துருக்கறையே அகல்கிறதெனில் மற்ற கறைகள் எம்மாத்திரம்?! இதென்ன மந்திரமா, மாயமா? இல்லை. இதுதான் ரின் ஸோலரக்ஸ் 3.**



2

நிறத்திற்கும் பாதுகாப்பு. மற்ற டிடர்ஜெண்ட்டுகள், நிறத்தை மங்கச் செய்து விடுகின்றன. ஆனால், நிறத்தை பாதுகாப்பதற்கென்றே விசேஷமான ஃபார்முலாவுடன் தயாரிக்கப் பட்டிருக்கிறது ரின் ஸோலரக்ஸ் 3. எனவே, எத்தனைமுறை வெளுத்தாலும் நிறம் பிரகாசமாய் விளங்குகிறது. **இதென்ன மந்திரமா, மாயமா? இல்லை. இதுதான் ரின் ஸோலரக்ஸ் 3.**



3

கைகளுக்கும் பாதுகாப்பு. கடுமையான ஃபார்முலாக்களைக் கொண்டு தயாரிக்கப்படும் டிடர்ஜெண்ட்டுகளிடமிருந்து உங்களுக்கு விடுதலை! ஆம். உங்கள் கைகளுக்கு எந்தவிதமான கெடுதலையும் விளைவிக்காமல், மிகச் சரியான சலவையைத் தருகிறது ரின் ஸோலரக்ஸ் 3. **இதென்ன மந்திரமா, மாயமா? இல்லை. இதுதான் ரின் ஸோலரக்ஸ் 3.** இன்றே கொண்டு வாருங்கள் உங்கள் இல்லத்திற்கு, புதிய ரின் ஸோலரக்ஸ் 3-யின் சக்தியை. இதுவரை கிடைக்காத ஸோலரக்ஸ் 3-யின் சுத்தத்துடன் பெறுவீர், மூன்று மிகப்பெரிய பலன்களை... ஒவ்வொரு முறையும்.



இதென்ன மந்திரமா, மாயமா?
இல்லை. இதுதான் ரின் ஸோலரக்ஸ் 3



இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

பரிசுக் கதை சிற்பிகள்



✱ குருநாதன்

"என் கிராமத்து மக்களின் ஒவ்வொரு பிரச்னையையும் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கதை வடிவம் தருகிறேன்!" என்று கூறும் வே. குருநாதன், இந்த ஆண்டு நடைபெற்ற அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றவர். அப்படியென்றால் இவர் இதுவரை ஏராளமான சிறுகதைகள் எழுதியிருக்க வேண்டுமல்லவா! அதுதான் இல்லை; இவர் ஓர் அறிமுக எழுத்தாளர்!

ஆச்சரியமாக இருக்கிறதல்லவா! "இதில் ஆச்சரியம் ஏதுமில்லை. நான் சிறு வயது முதற் கொண்டே கதை, கவிதைகள் எழுதுவதில் ஆர்வம் கொண்டு எழுதிக் கொண்டுதான் இருக்கிறேன். ஆனால் நான் எழுதிய ஒவ்வொன்றையும் இன்னும் பத்திரிகையில் பிரசுரமாகிற அளவுக்கு முதிர்ச்சி பெறவில்லை என்று எனக்கு நானே சுய விமர்சனம் செய்து அப்படியே வைத்து விடுவேன். கல்கியில் முதல் பரிசு பெற்ற 'ஒரு குடும்ப அட்டையைத் தேடாதீர்கள்!' என்ற சிறுகதையை எழுதி முடித்த பிறகு, எனக்கே ஒரு திருப்தி. அதனால்தான் அனுப்பி வைத்தேன்!" என்கிறார் இந்த முப்பத்தைந்து வயது இளைஞர்!

இவரது படிப்பு பத்தாம் வகுப்புவரைதான் என்றாலும் பார்வை மிகவும் நுணுக்கமானது. இவரது கதையில் வரும் மருதாயி, ஆரம்பத்தில் ஒரு சாதாரண இந்தியப் பெண்ணைப் போல் தோற்றமளித்தாலும் இறுதியில் சிறுமை கண்டு சீறியெழுகிற போது, ஒரு புதுமைப் பெண்ணாக மட்டுமல்ல; புரட்சிப் பெண்ணாகவும் விஸ்வரூபமெடுக்கிறாள். நமது இந்திய கிராமங்களிலுள்ள பல கோடிப் பெண்களுக்குத் தன்னம்பிக்கை ஒளியூட்டும் கலங்கரை விளக்காகத் திகழ்கிறாள்!

இரண்டாம் பரிசுக் கதையான 'ஞானத் தீ'யை எழுதிய தேவகாந்தன் கடந்த இருபத்தைந்து வருடங்களாக எழுதி வருபவர். ஆயினும் இதுவரை சுமார் எழுபத்தைந்து சிறுகதைகளும் ஒரு நாவல் - இரண்டு குறுநாவல்களும்தான் எழுதியிருக்கிறார் என்பது நம்பமுடியாத விஷயம்!

"எழுத்து என்பது ஒரு தொழில் மாதிரி தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் விஷயமல்ல!" என்கிறார் தேவகாந்தன். இவரது பிறப்பு-வளர்ப்பு எல்லாமே இலங்கை மண்ணில் நிகழ்ந்தவை. இலங்கைக் கலவரத்தைத் தாக்குப் பிடிக்க முடியாமல் 86 - ல் சென்னைக்கு வந்து செட்டிலாகி விட்டார். டெய்லரிங் தொழில் தெரியும் என்பதால் குடும்ப வண்டி ஏதோ ஓடிக் கொண்டிருக்கிறது.



✱ தேவகாந்தன்

"அண்மையில் பிரேமதாசா கொல்லப்பட்டபோது மீண்டும் ஓர் இனக்கலவரம் வெடிக்கும் என்றுதான் என்னைப் போல்

பலர் அஞ்சிக் கொண்டிருந்தோம். ஆனால் அப்புஹாமி மாதிரி சில சிங்களவர்களும் இருந்ததால் தான் அம்மாதிரியான ஒரு நிகழ்வு தடுக்கப்பட்டது. இதைத்தான் நான் கதையாக்கினேன். சொல்லப் போனால், ஜாதி, மதம், இனம், மொழி, நாடு என்று எல்லாவற்றையும் கடந்து நிற்பதுதான் மனித நேயம். அது ஒவ்வொரு மனிதருக் குள்ளும் இருக்கிறது. நேரம் வரும் போது வெளிப்படவும் செய்கிறது. அப்படி வெளிப்படும் சூழ்நிலைகளைத்தான் நான் சிறுகதைகளாகச் சித்திரிக்க முயற்சி செய் கிறேன்!'' என்கிறார் தேவகாந்தன்.

இலக்கியச் சிந்தனைப் பரிசுக்குப் பிறகு, கல்கியில்தான் மீண்டும் பரிசு பெறு கிறார் தேவகாந்தன். தொடர்ந்து பல பரிசு களைப் பெற நமது வாழ்த்துக்கள்!



✱ பூர்ணகுமார்

மூன்றாவது பரிசு பெறும் இரு கதைகளில் ஒன் றான 'ச(ா)த்தியம்' எழுதிய பூர்ண குமார் என்கிற ச. ஞானசம்பந்தனுக் கும் இதுதான் முதல் சிறுகதை. ஆயினும் மதுரை வானொலியில் முதுநிலை அறிவிப் பாளரான இவர், ஏராளமான வானொலி நாடகங்கள் எழுதியிருக்கிறார். இவர் எழுதி யமைத்த, 'திங்கட்கிழமை செப்டம்பர் ஏழில்' என்கிற அறிவியல் நாடகம் முதற் பரிசு பெற்றதோடு கழற்கோப்பையையும் பெற்றிருக்கிறது.

நடைமுறை வாழ்க்கையில் லஞ்சம் எந்த அளவுக்கு ஊடுருவிப் போயிருக்கிறது என்பதைத் தெள்ளத், தெளிவாக விளக்கு கிறது, இவரது 'ச(ா)த்தியம்'.

இன்றைய சூழ்நிலையில் சத்தியம் எந்த அளவுக்கு சாத்தியம் என்று யதார்த்தமாகக் கதை சொல்லத் தெரிந்திருக்கிறது, பூர்ண குமாருக்கு! அவர் ஆற்றல் மேலும் சிறக்க நமது வாழ்த்துக்கள்.



✱ ரவிகுமார்

மற்றொரு மூன்றாவது பரிசுக் கதையை எழுதிய ப. ரவிகுமார் மிக வும் இளையவர். இருபத்தி யொரு வயதேயான பட்ட தாரி இளைஞர். இந்த அறிமுக இளைஞருக்கும் கதை சொல்லும் உத்தி இயல்பா கவே வந்திருக் கிறது.

''எழுத்தில் சத்திய வேட்கையும் ஆத்ம சக்தியும் ஒளிர வேண்டுமென்பதுதான் என் நோக்கம்!'' என்று கூறும் இவரும் இன்றைய நடுத்தரவர்க்கப் பெண்களின் பிரச்னைகளைத்தான் ''என்று தணியும்?'' என்று சிறுகதை வடிவத்தில் கேள்வி கேட்டிருக்கிறார்.

கதைகள் சமுதாயத்தைப் பிரதிபலிக்க வேண்டும் எனில் பிரச்னைகளை வைத்துத் தான் எழுத முடியும். 'பிரச்னைகளைச் சொன்னால் ஆயிற்றா? தீர்வு என்ன?' என்று சிலர் கேட்கிறார்கள். 'தீர்வுகள் சொல்வது கலைஞனுக்குக் கட்டாயமல்ல' என்பதே இதற்குப் பதில். எழுத்தாளன் கலை உணர் வோடு கதை வடிவில் பிரச்னைகளை அலசும்போது, வாசகர்கள் உணர்ச்சிவசப் படுகிறார்கள். ஒரு விழிப்புணர்ச்சியைப் பெறுகிறார்கள். இந்த விழிப்புணர்ச்சியே பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கான அடிப்படை.

– பிரின்ஸ்

இவரா இப்படிச் சொன்னார்!



''என் தந்தைக்கு சமஸ்கிருத மொழி தெரியும். அவரிடமிருந்து நான் சில வார்த்தைகளைக் கற்றுக் கொண்டுள்ளேன். எனக்குச் சின்ன வயதிலிருந்தே நிறைய இந்திய நண்பர்கள் இருக்கிறார்கள். இந்திய நண்பர்கள் வீட்டுக்கு அடிக்கடி போகிறேன். இந்தியர்கள் நெருங்கிய குடும்ப உறவோடு வாழ்க்கை நடத்தும் விதம் எனக்கு மிகவும் பிடிக்கிறது.

- இப்படி கூறிய இந்த விளையாட்டு வீராங்கனை யார்? ஊகிக்க முடிகிறதா? ஸ்டெஃபி கிராப்தான்!

ஆதாரம் : சண்டே தகவல் : இந்தலார் எஸ். ஆலன்.



நாளைய தலைவர்கள்

பெரியசாமி, மெதுவாய்க் காலை இழுத்து இழுத்து நடந்து வந்து வாசற்திண் ணையின் வழுவழுப்பான சிமெண்ட் சாய் மானத்தில் சாய்ந்து கொண்டார்.

இந்த மூட்டு வாதம் வந்த பிறகு, சில வருஷங்களாகவே இயலாமை அவரைத் திண்ணையோடு உட்கார வைத்து விட்டது. உண்ணும் உறங்கும் நேரந்தவிர மற்ற நேர மெல்லாம் திண்ணையில்தான் வாசம். கழனிப் பக்கமெல்லாம் போகவே முடி யாமல் போய் விட்டது.

காலை மாலை வேளைகளில் அவர் வயதொத்த கிழங்கட்டைகள் பேச்சுத் துணைக்குத் திண்ணையில் அமருவார்கள். மற்ற நேரங்களில், சுதந்திரப் போராட்ட வீர ரான பெரியசாமிக்கு அந்த காலத்திய நினை வுகள்தான் துணை. அந்த நாளைய நினைவு களை அசைபோட ஆரம்பித்தாரானால், பொழுது போவதே தெரியாமல் நினைவு களின் சுவாரஸ்யத்தில் லயித்துப் போய் அமர்ந்திருப்பார்.

அந்தக் காலம் போல் வருமா? எப் பேர்ப்பட்ட தலைவர்கள்! எப்படிப்பட்ட பேச்சாற்றல்! அவுங்க பேசற வார்த்தைக ளெல்லாம் அப்படியே நம்ம மனசுக்குள்ள வந்து புகுந்துக்கிட்டு நம்ப உத்வேகத்தைக் கிளப்புமே! மாபெரும் மக்கள் சக்தியை ஒரு முகமாய்த் திரட்டிப் போராடி, நாட்டுக்குச் சுதந்திரம் கண்டவர்களாயிற்றே! தம்மைப் போன்ற எத்தனை இளைஞர்களுக்குப் பாதை காட்டி வழிப்படுத்தினார்கள்! இப் பொழுது நினைத்தாலும் உடல் புல்லரிக் கும் கிழவருக்கு.

சாப்பிட்டு முடித்துத் திண்ணையில் அமர்ந்தவருக்கு நிறைந்த வயிறும் நினைவு களின் சுகமும் தந்த போதையில் தொடர்ச்சி யான நினைவுகளினூடே எப்போது வந்தது என்றே தெரியாமல் நழுவலாய்க் கண்களை யமர்த்திய உறக்கம்... பள்ளி விட்டு வந்த பேரப் பிள்ளைகளின் இரைச்சலில்தான் கண் விழிப்புக் கொடுத்தது.

பெரிய பேரன் வரும்போதே,

ரேவதி பாலு

''தாத்தா!'' என்று கத்திக் கொண்டே ஓடி வந்து, புத்தகப் பையைத் திண்ணையில் வீசி விட்டு அவர் மடியில் ஏறியமர்ந்தான்.

தாத்தா பரிவாய் முதுகைத் தடவ, ஓடி வந்த இரைப்பு அடங்குமுன்பே பேச ஆரம் பித்தான்.

''தாத்தா! தாத்தா! இன்னைக்கு எங்க ஸ்கூலுக்கு கல்வி அதிகாரி வந்திருந்தாரு. அவுரு எங்களையெல்லாம் பார்த்து, நீங்க எல்லாம் நல்லா படிக்க, நாளைய தலைவர் களா வரணும்னு சொன்னாரு. அப்படின்னா என்ன அர்த்தம் தாத்தா?''

நாலாங்கிளாஸ் படிக்கும் பேரன் கேட்ட கேள்வியைத் தாத்தாவும் ஒருமுறை மனத்திற்குள் கேட்டுக் கொண்டார். உடனே அவருக்கு, 'நான் இந்தக் கட்சியின் வட் டாரத் தலைவன். நான் அந்தக் கட்சியின் மாவட்டத் தலைவன் என்றெல்லாம் சொல்லிக் கொண்டு தஞ்சாவூரிலிருந்து வந்து கருப்பூரில் துண்டேந்திக் குழை யடித்து வசூல் செய்யும் 'தலைவர்களும்', அவர்கள் வசூலித்த பணத்தை 'எப்படி யெல்லாம் செலவு செய்'கிறார்களென்று தாம் கேள்விப்பட்டதும்தான் நினைவுக்கு வந்தது.

அவரும்தான் தம் பிள்ளைகளுக்கு ஆசை ஆசையாய்த் தலைவர்களின் பெய ரைச் சூட்டி ''டேய்!'' என்று கூடக் கூப்பி டாமல் அந்தப் பெயர்களின் மீதுள்ள மதிப் பினால் 'அய்யா!' என்றே அழைக்கிறார். பெயர் சூட்டப்பட்டதினாலேயே ஒருவன் தலைவனாகிவிடுவானா? இல்லை, நன் றாகப் படித்தவர்கள்தான் தலைவர்களா கிறார்களா?

எல்லாம் சுயநலவாதிகள்!

பெரியவன் பகத் தஞ்சாவூரில் ஒரு வங்கியில் வேலை பார்க்கிறான். அவனுக் குக் கருப்பூரிலிருந்து தினமும் தஞ்சாவூர் போய் வருவது கஷ்டமாயிருக்கிறதாம். அங் கேயே போய் விடலாமென்று பார்க்கிறா னாம். பசங்களையும் அங்கேயே 'கான் வென்டில்' சேர்க்கலாமாம்.

அடுத்தவன் 'திலக்'கிற்கு படிப்பும் ஏற வில்லை. பயிர்த் தொழில் செய்யவும் வணங்கவில்லை. யார் யாரையோ பிடித்து இருசம்பட்டி பஞ்சாயத்து ஆபீசில் வேலை வாங்கிக் கொண்டு விட்டான்.

''என்ன இருக்குன்னு இந்த கருப்பூர்ல குந்திக்கிட்டு இருக்கீங்க அப்பா?'' என் கிறான், தட்டுத் தடுமாறி பத்தாங்கிளாஸ் வந்திருக்கும் கடைக்குட்டிப் பையன் காந்தி. இந்த வீட்டுக்காகவும் அல்ப சொல்ப நிலத்திற்காகவும் இந்த குக்கிராமத்தி விருப்பது வீணாம். அவனுக்கும் தஞ்சாவூர் போனால் பரம சௌகரியம். பள்ளி போய் வரும் நேரந்தவிர மற்ற நேரம் சினிமா கொட்டகையில் 'குஜாலாக'க் கழிக்கலாம்.

இவுங்களுக்கெல்லாம் என்ன தெரியும் பிறந்த மண்ணின் அருமையைப் பற்றி?

மெதுவாய்த் திண்ணை ஏறி அவ ரெதிரே அமர்ந்து கொண்ட எதிர் வீட்டு வீர பத்திரன் அவர் நினைவோட்டத்தை அறிந் தாற்போல் கேட்டார்.

''நம்ம காலம் போல இல்லாம ஏன் இப்படி ஜனங்க தான், தன் சுகம்னு இவ்ளோ புத்தி குறுகிப் போயிட்டாங்க?''

கிழவர் மௌனம் சாதித்தார்.

''எம் மருமவ தெனம் ஒரே நச்சரிப்பு. பட்டணத்துக்குப் போயிடணுமாம். அங்க போயி டீச்சர் வேலை பார்க்கப் போவு தாம்!'' வீரபத்ரன் தம் ஆவலாதிகளைத் தொடர்ந்தார்.

''ஏன்? அந்த வேலைய நம்ப இருசாம் பட்டியிலேயே செய் யறது?''

''அங்க இஸ்கூல் நல்லா இல்லியாம். கட்ட டமில்லையாம்! பெஞ்ச்சி இல்லியாம்!''

''இப்படி ஒவ் வொருத்தரா அதில்லை



இதில்லைன்னு போய்க்கிட்டிருந்தா, அந்த வசதிகளெல்லாம் என்னைக்கு கிராமத்துக்கு வரும்?''

இரண்டு பேரும் பதில் தெரியாத பெருமூச்சோடு உட்கார்ந்திருந்தார்கள். அப்போது -

''அப்பா!'' என்று ஒரே துள்ளலாய் ஓடி வந்து திண்ணையில் ஏறினாள் வெற்றிச் செல்வி.

''என்னம்மா?'' என்று அன்பொழுகக் கேட்டார் அருகிலமர்ந்த அருமை மகளை.

ஒரே பெண்!

மனைவி, பிள்ளைகள் எல்லோர் பேச்சையும் மீறி ஒரே பிடிவாதமாய் காலேஜில் சேர்த்திருக்கிறார்.

'இவ்வளவு சின்ன வயசில எதுக்குக் கல்யாணம்? நல்லா படிக்குதே! மேலே படிக்கட்டுமே' என்றால் எல்லோரும் முதுகுக்குப் பின்னே கேலி பேசுகிறார்கள்.

'சீக்கிரம் கல்யாணத்தைப் பண்ணி பெண் பிள்ளையைக் கழட்டி விடாமல்... அப்பாவுக்கு புத்தி பொரண்டுதான் போயிட்டது' என்று ஜாடை மாடையாய்ப் பேசிக் கொள்கிறார்கள்.

''அப்பா! இன்னிக்குக் காலையில என்னாச்சு தெரியுமா? இனிமே தஞ்சாவூர் பஸ் நம்ம ஊருக்குள்ளே வராதுன்னு சொல்லிட்டாங்க.''

''அப்ப நீ எப்படியம்மா காலேஜு போயிட்டு வந்தே?'' என்றார் பெரியசாமி பதற்றத்துடன்.

''விசயத்த கேளுங்கப்பா! நா வழக்கம் போல ஏழரை மணி பஸ்ஸுக்கு போனேனா, அப்போ பஸ் இனிமே இந்தப் பக்கம் வராதுன்னு சபாபதி மாமா, அதான் பஸ் ஸ்டாண்ட்கிட்ட சோடா கடை வச்சிருக்காரே, அவுரு சொன்னாரு. அது மாதிரியே பஸ் இந்தப் பக்கம் வரவேயில்லை. மணி எட்டு கூட ஆயிட்டுது. எங்களுக்கு ஒரே ஆத்திரம்! என்னையும் சேர்த்து இருவத்து மூணு பேரு நிக்கிறோம் அந்த பஸ்ஸுக்கு. வேலை பார்க்கிறவங்க, படிக்கிறவங்க, ஜோலி மேல தஞ்சாவூர் போறவங்கன்னு இங்கன பஸ் பிடிக்கிறதுக்கே ஏழுக்கு ரெடியாக வேண்டியிருக்கு. இன்னும் நாலு மைல் தொலைவு உள்ள இருசம்பட்டிக்குப் போய் பஸ் பிடிக்கணும்னா இருட்டோட கௌம்பினாத்தானே சரியாயிருக்கும்? நானு, முத்தம்மா, தமிழரசி மூணு பேரும் கூடிப் பேசி ஒரு தீர்மானம் பண்ணினோம். தலையெழுத்தேன்னு இருசம்பட்டி பக்கம் நடக்க ஆரம்பிச்சவங்களைத் திருப்பிக் கூட்டியாந்தோம். கருப்பூருக்குள்ள பஸ் வரலைன்னாலும், ஊருக்கு வெளியே இருக்கிற மெயின் ரோடு வழியாத்தானே இருசம்பட்டியிலிருந்து பஸ் தஞ்சாவூருக்குப் போயாகணும்? எல்லோரும் அந்த ரோட்டில போய் அடுத்த பஸ் வர்ற நேரத்துக்கு பாதையை மறிச்சிக்கிட்டு நின்னுக்கிட்டோம்...'' மூச்சு வாங்குவதற்குப் பேச்சை நிறுத்திய மகளை -

''ஊம்.... அப்புறம்'' என்றார் பெரியசாமி ஆவலை அடக்க மாட்டாமல்.

''வேற வழி? மரியாதையா பஸ்ஸை நிறுத்தினான். நாங்க என்னம்மா செய்ய முடியும்? மேலிடத்து உத்தரவுன்னான். எல்லோரையும் ஏறி கலெக்டர் ஆபீசுக்கு டிக்கெட் எடுக்கச் சொன்னேன்.

''கலெக்டர் ஆபீஸ் வாசல்ல ரெண்டு மணி நேரம் தங்கியிருந்து ஒரு மனு குடுத்தோம் கையெழுத்து, கைநாட்டெல்லாம் போட்டு. ஒரு கிராமத்து ஜனங்க கூட்டமா வந்திருக்காங்கன்னு கேள்விப்பட்டு கலெக்டரே வெளியே வந்தார்.

''வீறாப்போடு வந்த எல்லாருக்கும் திடீர்னு ஒரு அச்சம்! அவ்வளவு பெரிய பதவியிலிருக்கிறவரு, அவுருகிட்டப் போயி நாம்ப பேசறதாவதுன்னு. நாந்தான் தைரியமா முன்னே போய் மனுவை நீட்டினேன். படிச்சுப் பார்த்தார். 'கொறச்ச பேரு இருக்கிற ஊர் வழியா எல்லாம் பஸ் போனா, நேரந்தான் வீணாகும்'னார், மெதுவாக. 'அப்ப, ஜனங்க கொறைவா இருக்கிற ஊர்ல உள்ளவங்க படிக்க வேண்டாம், வேலை பார்க்க வேண்டாம்னு சொல்றீங்களா?'ன்னு கேட்டேன் படபடப்பாய். அவர் நிதானம் இழக்காம 'நா அப்படிச் சொல்லலம்மா! இருசம்பட்டி பக்கத்தில்

அருள்வாக்கு

எல்லா வஸதியும் படைத்த ஒருவர் இருக்கிறார். அவருக்கு நல்ல தேஹாரோக்யமிருப்பதற்காக 'எக்ஸர்ஸைஸ்' செய்ய வேண்டியிருக்கிறது. இதைச் செய்வதில் இரண்டு விதங்கள் இருக்கின்றன. ஒன்று, அவர் தேஹாப்யாஸம் என்று சொல்லப்படும் எக்ஸர்ஸைஸ்கள் பண்ணலாம் - தண்டால் எடுக்கலாம், ஸர்வாங்காஸனம் போடலாம். அல்லது ஸகல அவயவங்களுக்கும் நன்றாக வேலை கொடுக்கும் விதத்தில் ஓடி ஆடி, வெட்டிக் கொத்தி ஏதாவது பண்ணலாம். இப்படி இரண்டாவது விதத்தில் அவர் ஓடி ஆடிப் பண்ணுகிறாரென்றால், அப்போது மற்றவர்களுக்கு ப்ரயோஜனமாகப் பழத் தோட்டம் போடுவது, அதற்காக வெட்டுவது கொத்துவது, ஜலம் இழுத்து வந்து கொட்டுவது என்று பண்ணுவதே ச்லாக்யமாகும். இவருக்குப் பண வசதி, ஆள் வஸதி எல்லா வஸதியும் இருக்கிறது; அதனால் இவரே உழைத்துத் தோட்டம் போட்டுப் பயிர் பண்ண வேண்டுமென்றில்லை. இவருக்குப் பழமும் வேண்டுமென்றில்லை. இருந்த

தானே இருக்கு. முன்னேயெல்லாம் அங்கே யிருந்துதானே வந்தீங்க?'ன்னார்.

''அந்தக் கஷ்டம் தாங்காம நாங்க கேட்டுக் கேட்டு வாங்கின வசதிதான் இந்த வழித்தடம். புதுசா எங்க கிராமத்துக்கு ஒரு வசதி செஞ்சு தராட்டியும் எப்பிடி இருக்கிற ஒரு வசதியை அரசாங்கம் கொறைக்கலாம்? இல்லே... நாங்க எல்லாம் ஊரைக் காலி பண்ணிக்கிட்டு இருசம்பட்டிக்கு, தஞ்சா வூருக்குன்னு, பஸ் ஓடற இடமாப் பார்த்துப் போயிடணுமா சொல்லுங்க! போயிட றோம்! ஆனா பயிர் வைக்க ஊரில ஒரு ஆளு இருக்க மாட்டாங்க'' என்றேன் ஆவேச மாய்.

''கலெக்டர் கொஞ்ச நேரம் ஏதோ யோசிச்சார். பிறகு அவர் முகத்தில் ஒரு புன்சிரிப்பு. 'உன் பேர் என்னம்மா?'ன்னார். சொன்னேன். 'பேரிலேயே வெற்றியை வச்சிருக்கியே, உனக்கில்லாத வெற்றியா?'ன்னாரு. 'பேரு எப்பிடியிருந்தாலும் கோரிக்கை நியாயமாயிருந்தா வெற்றி நிச்சயந்தான் சார்!'ன்னேன்.

''எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம்! நம்ப சிங்கமுத்து அண்ணன், இசக்கி அண்ணன் இன்னும் எத்தெத்தனையோ பெரியவங்க எல்லாம் தயங்கித் தயங்கி நின்னுக்கிட்டிருந்தப்ப, நா எப்படி 'டாண்' 'டாண்'னு பேசினேன்னு. எனக்கே தெரிய லேப்பா! எனக்கு எங்கேயிருந்து அவ்வளவு தைரியம் வந்ததுன்னு. கிராமத்தோடு தலை முறை தலைமுறையாய்க் கிடந்து பயிர்த் தொழில் செய்யற குடும்பங்களைப் பழி வாங்கறாங்களேன்னு ஒரு ஆவேசம், அவுங்க பண்றது அநியாயங்கிற தெளிவு, இதைத் தட்டிக் கேட்டே ஆகணுங்கிற நீர் மானம்... இந்த மாதிரி எண்ணங்களுக்கு முன்னே எதிர்க்க நிக்கிறவங்களோட பதவி கூட கண்ல படலப்பா...'' என்று வெற்றிச் செல்வி உணர்ச்சிப் பெருக்கோடு சொல்லி முடிக்க, கிழவர் நெகிழ்ந்து போனார்.

அவர் நிமிர்ந்த போது அவர்களைச் சுற்றி வாண்டுகளும் பெரியவர்களுமாக ஒரு கூட்டமே கூடி வெற்றிச் செல்வி சொன்ன வற்றைக் கேட்டுக் கொண்டு நின்றிருந்தது. செல்வியோடு கலெக்டர் ஆபீஸ் போனவர் களும் கூட்டத்தில் இருந்தார்கள்.

''நம்ப உரிமைகளுக்காக மனசில உத் வேகத்தோட போராடறதுக்கு இத்தனை பேருங்க நம்ம ஊரில இருக்கிறப்ப, நாளையத் தலைவர்களுக்கென்னடா பஞ்சம்? சொல்லேண்டா வீரபத்ரா? நாம ஏண்டா பிறந்த மண்ணை விட்டு ஓட ணும்?'' என்று ஆவேசமாய்க் கேட்ட அந்த சுதந்திரப் போராட்ட வீரர், தம் காலத்தி லேயே அடுத்த தலைமுறையின் நம்பிக் கைக் கிரணங்களைக் கண்ணாரக் கண்டு விட்ட பெருமகிழ்ச்சியில் கசிந்த கண்ணோ ரங்களைத் துடைத்துக் கொண்டார்.

போதிலும் இவருக்கு மட்டும் ப்ரயோஜ னப்படும்படி தண்டால் போடுவதை விட, அல்லது எங்கேயோ நிர்மாநுஷ்ய மான காட்டிலே மேட்டிலே போய் எதையோ வெட்டி, கொத்தி, முறித்துக் கொண்டிருப்பதை விட, நாலு ஜனங்க ளுக்கு உதவும்படியான பரோபகாரமாகத் தோட்டப் பணி செய்வதுதானே ச்லாக்யம்? பழம் என்ற பலன் இவருக்கு வேண்டாம். ஆனால் தேஹாரோக்யம் வேண்டும். அதற்காக இவர் செய்வதே பழம் வேண்டிய வேறு யாருக்கோ உதவி பண்ணுகிறது.

இந்த மாதிரிதான் கர்மாவைக் கழித்துக் கொண்டு பரமாத்மாவிடம் சேர விரும்பு கிறவர்களுக்கு சாஸ்த்ர கர்மா உள்பட அதனால் ஏற்படுகிற பலனும் வேண்டி யதில்லை. ஆனாலும், பரமாத்மாவிடம் சேருவதற்குண்டான பக்வத்தைப் பெறு வதற்காக மனலை நாலா திசையிலும் ஓடாமல் சுத்தி செய்வதற்கு, ஆரம்ப தசை யில் ஏதாவது கார்யத்தில் ஈடுபட்டால் தான் முடியுமென்றிருக்கிறது. அவர் எப்படி தனக்கான எக்ஸர்ஸைஸாகவே லோகோபகாரமாகவும் தோட்டம் போட் டாரோ, அதே மாதிரி இவன் தன் சித்த



சுத்திக்காகச் செய்யும் கர்மாவே லோகோ பகாரமாகவும் இருக்க வேண்டும் என்று அபிப்ராயப்பட்டு சாஸ்த்ரங்கள் ஒவ் வொருவனுக்கும் ஸ்வதர்மா என்று ஒவ் வொரு விதமான கர்மாவை வகுத்துக் கொடுத்திருக்கிறது.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச் சார்ய சுவாமிகள்.

தலைவர்களை தீக்கு



ன்னைத்
விடலாமா?



முதல்வர் ஜெயலலிதா 'சாகும் வரை உண்ணாவிரதம்' என்று அறிவித்து விட்டு மெரீனாவில் உட்கார்ந்த இரண்டாம் நாள்... திடீரென்று 'புரட்சித் தலைவி வாழ்க' என்று கத்திக் கொண்டு எரியும் தீப்பிழம்பாக, ஓர் உருவம் ஓடி வருகிறது. ''அவரைப் பிடியுங்க... பிடியுங்க...'' என்று கத்தியபடி போலீஸ்காரர்கள், கட்சித் தொண்டர்கள் விரைந்து செயல்படும் முன், மயங்கிக் கீழே விழுகிறது அந்த உருவம். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றும் பயனில்லை.

முதல்வரின் மேலுள்ள பற்றால் தீயின் ஜ்வாலைக்கு தன்னைப் பலி கொடுத்துக் கொண்டவர் பெயர் தோபல். சென்னை டி.பி. சத்திரம் பகுதியைச் சேர்ந்தவர். முதல்வர் உண்ணாவிரதமிருந்த போது தீக்குளித்து இறந்த மற்றொருவர் ராசிபுரம் பழனிவேலு. இவர்கள் தவிர ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த வேல்முருகன், மதுரையைச் சேர்ந்த முருகன், சேலம் அன்னதானப்பட்டியைச் சேர்ந்த பெண்களான வயலட், பராசக்தி ஆகியோரும், முதல்வருக்காகத் தீக்குளித்தார்கள். ஆனால் அதிர்ஷ்டவசமாகப் பிழைத்துக் கொண்டார்கள்.

இப்போதெல்லாம் சாதாரண விஷயத்துக்குக் கூட தீக்குளிக்கும் நபர்கள் அதிகமாகிக் கொண்டே வருகிறார்கள். 'தமிழ்நாட்டுக்கு மத்திய போலீஸ் வந்தது' என்ற தகவலைக் கேள்விப்பட்டுக் கூட தீக்குளித்திருக்கிறார் அ.தி.மு.க. தொண்டர் ஒருவர்!

''தீக்குளிப்பில் இவ்வாறு இறங்குவது தனிமனித வழிபாட்டின் உச்சகட்ட பித்துக்குளித்தனம்'' என்று சாடுகிறார் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் தொழிற்சங்கத் தலைவருமான உ.ரா. வரதராஜன்.

''ஒரு லட்சியத்துக்காகத் தியாக உணர்வோடு உயிரை அர்ப்பணித்துக் கொள்வதென்பது வரலாற்றில் பல கட்டங்களில் நடந்திருக்கிறது. ஒரு மனிதன் புரியக்கூடிய பெரிய தியாகம் உயிர்த் தியாகம். இந்த நூற்றாண்டில் பார்த்தால் வியட்நாமில் அமெரிக்க ஆக்ரமிப்பு, தாக்குதல்களை எதிர்த்துப் புத்த பிட்சுக்கள் தீக்குளித்து இறந்திருக்கிறார்கள். சுதந்திரப் போராட்டத்தில் தலைமறைவு இயக்கத்தில் ஈடுபட்ட தீவிரவாதிகள் அந்தமான் சிறையில் உண்ணாவிரதம் இருந்த போது அதை முறியடிக்க, அவர்களுக்குக் கட்டாயமாகப் பால் புகட்டப்பட்ட போது, நுரையீரலுக்குள் அந்தப் பாலை வாங்கிக் கொண்டு நாட்டிற்காக உயிரைத் தியாகம் செய்தவர்கள் ஜதீன்தாஸ் போன்றோர்...

''சுதந்திரத்துக்குப் பிறகு மொழிவாரி மாநில கோரிக்கைக்காக உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்தவர் பொட்டி ஸ்ரீராமுலு. தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்று தன்னை வருத்திக் கொண்டு உயிர் விட்டவர் சங்கரலிங்க நாடார். ஆனால் தமிழ்நாட்டில் கால் நூற்றாண்டு காலமாக நடைபெற்று வரும் தீக்குளிப்பு முயற்சிகள் மேலே சொல்லப்பட்ட உயிர்த் தியாகங்களோடு ஒப்பிடக்கூடியவை அல்ல.

''அரசியல் காரணங்களுக்கான தீக்குளிப்புகள் காங்கிரஸ் ஆட்சியில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது தான் துவங்கின என்று கூறலாம். அப்போதுதான், சின்னசாமி, சிவலிங்கம், அரங்கநாதன் போன்றோர் தமிழ் மொழியைக் காப்பதற்கும், இந்தியைத் தமிழகத்தில் நுழைய விடாமல் தடுப்பதற்கும் தங்களுயிரை அக்னிக்குப் பலிகொடுத்துக் கொண்டனர். பின்னால் வந்த தி.மு.க. அரசு, மொழிப் போர் வீரர்களின் தியாகத்தை அங்கீகரிக்கும் விதத்தில், சில பாலங்களுக்கு அவர்கள் பெயரை வைத்தது.

''இந்த உயிர்த் தியாகங்களைக் கூட, ஒரு போராட்டத்தோடு - கொள்கையோடு - சம்பந்தப்பட்டது என்ற முறையில் மதிக்கக்கூடிய வீரத் தியாகச் செயலாகக் கருதலாம். ஆனால் அதற்குப் பிறகு தமிழ்நாட்டில், நடந்துள்ள தீக்குளிப்புச் சம்பவங்கள் பாராட்டக்கூடியவையாகக் கருத முடியாது. இதுபோன்ற தீக்

குளிப்புகளை தலைவர்களே விரும்ப வில்லை என்பதற்குக் கடந்த காலத்தில், கருணாநிதியும் மறைந்த எம்.ஜி. ஆரும், வேண்டுகோள் விடுத்ததை நினைவுகூர லாம்.''

இந்தத் தீக்குளிப்புகள் வரம்பு மீறும் போது வன்முறையாகவும் மாறி விடுகின்றன என்பதை மண்டல் கமிஷன் எதிர்ப்புப் போராட்டங்களின் போது நடந்த தீக்குளிப்புகளிலிருந்து புரிந்து கொள்ளலாம். அப்போது தீக்காயத்துடன் ஆஸ்பத்திரியில் இருந்த மாணவர்கள் சிலர், ''வேண்டுமென்றே என் மீது மண்ணெண்ணெய் ஊற்றித் தீக்குச்சியை வீசியெறிந்தார்கள் என் சக மாணவர்கள்'' என்று வாக்குமூலம் கொடுத்தனர்.

''நீ முழுசாக எரிந்து போக நாங்கள் விடுவோமா... லேசா பற்றவைச்சுக்கிட்டு ஓடு! உனக்கு நல்ல விளம்பரமும் கிடைக்கும் என்று நண்பர்கள் ஆசைகாட்டவே இந்தச் செயலில் ஈடுபடத் துணிந்தேன்'' என்று ஒரு மாணவர் சொன்னார். ஆக, உயிர்த் தியாகம் என்று ஆரம்பமானதே சுய நல உணர்ச்சிகளின் உந்துதலில் உயிர் பறிப்பாகவும் மாறி விடுகிறது.

தமக்காகத் தீக்குளித்தவர்களின் குடும்பங்களுக்குப் பெருந்தொகையை நிதியாகக் கொடுப்பது, அதற்கு படாடோபமான விளம்பரம் செய்வது ஆகியவையெல்லாம் முதல்வர் ஜெயலலிதா போன்ற தலைவர்கள் தீக்குளிப்புகளுக்கு மறைமுகமாக அளிக்கும் ஊக்கம் ஆகிவிடும் என்ற கவலையும் சமுதாயப் பிரக்ஞை உள்ளோரிடம் ஏற்பட்டுள்ளது.

''தீக்குளிப்பில் ஈடுபடுவோர் சிலர் மன நோயாளிகளாக அல்லது மன உறுதியற்றவர்களாக இருந்திருக்கிறார்கள். மன உறுதியோடு, உயிர்த் தியாகம் புரிவதென்பது வேறு; மன உறுதி குன்றிய நிலையில் தீக்குளித்து மாய்வதென்பது வேறு. பின்னது தோல்வி மனப்பான்மையையும் தாழ்வுணர்ச்சியையுமே உணர்த்தும். தீக்குளிப்புகளை மறைமுகமாகக் கூட ஊக்குவிக்காமல் இருப்பது அரசியல் தலைவர்களுக்கு மட்டு

சினிமாவில் தீக்குளிப்பு!

பார்த்திருப்பீர்கள், உடம்பு முழுக்க மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்தியபடி மாடியிலிருந்து குதிப்பதும், எரிந்த நிலையிலேயே மோட்டார் பைக்கிலிருந்து எகிறுவதும். சமீப கால சினிமாக்களில் இவை வெகு சாதாரணம். நெருப்போடு விளையாடும் இந்த ஸ்டண்ட் கலைஞர்களின் உயிருக்கு எப்போதும், எந்த கேரண்டியும் இல்லை!

இந்த சினிமா தீக்குளிப்பு எப்படி சாத்தியமாகிறது? ஸ்டண்ட் மாஸ்டரும் ஸ்டண்ட் நடிகர்கள் சங்கத் தலைவருமான மலேஷியா பாஸ்கரனை இது குறித்துக் கேட்ட போது சொன்னார் : ''சினிமா ஸ்டண்ட்களிலேயே மிகவும் கஷ்டமானது தீப்பிடித்த நிலையில் நடிப்பதுதான். உடம்பு முழுக்கத் தீப் பற்றிய நிலையில் - என்னதான் பாதுகாப்புக் கவசங்கள் இருந்தாலும் ஓரளவுக்கு மேல் கை, காலை ஆட்டவோ, உடல் குலுங்கவோ கூடாது. மாஸ்டர்கள் நிர்ணயித்துள்ள குறிப்பிட்ட அசைவுகளை மீறி ஏதாவது செய்தால் அவ்வளவுதான்! கடவுளால் கூடக் காப்பாற்ற முடியாது.



மலேஷியா பாஸ்கரன்

நெருப்பு சீன்களுக்கென்று பிரத்யேகமாக Fire Proof ஆடைகள் உண்டு. கல்நாரால் தயாரிக்கப்பட்டவை அவை. ஆனால் குறிப்பிட்ட நிமிடங்களுக்கு மேல் அவற்றால் பாதுகாப்புக் கிடைக்காது.

எனவே, முதலில் உடல் முழுதும் வாழைச் சாற்றைப் பூசி, அதன் மேல் சில இஞ்ச்கள் கனத்திற்கு பர்னாலைத் தடவி விடுவோம். அதற்கு மேல் கனமான காட்டன் ஆடை.. அதன் மேல் இந்த கல்நார் உடை.. முகத்திற்குத் தனியாக 'மாஸ்க்' போட்டு விடுவோம். பிரத்யேக உடை அணிவிக்கப்பட்டு அதன்மேல் தீப்பிடிக்கக்கூடிய 'டன்லப்' ரப்பர் சொல்யூஷன் என்கிற திரவம் பூசப்படும். எத்தனை நேரம் தீப்பிடித்தாற்போல நடிக்க வேண்டுமோ, அதற்கேற்றாற்போல சொல்யூஷன்.

சொல்யூஷன் முழுவதும் உருகி எரிகிற வரை வெப்பம் உடம்புக்குத் தெரியாது. அதற்குள் 'ஷாட்' முடித்துவிட வேண்டும். இல்லையென்றால் ஆபத்துதான்! மறுபடி அணைத்து, மறுபடி சொல்யூஷன் போட்டு, மறுபடி நெருப்பு வைத்து...

இந்த மாதிரி சமயங்களில் விபத்துக்கள் ஏற்பட்டால் ஃபயர் இஞ்ஜினால் உபயோகமில்லை. நாங்கள் நம்பி இருப்பது கோணிச் சாக்குதான்! இன்னொரு விஷயம். சீன், லாங் ஷாட்டில் எடுக்கப்படுவது என்றால் கவலையில்லை. க்ளோஸப் என்றால், நாம் செய்திருக்கும் 'பேக்கிங்' வெளியே தெரியாதபடி இருக்க வேண்டும். என்னதான் நடிகர் தத்ரூபம் காட்டினாலும், நிஜமாகத் தீ பற்றவில்லை என்று படம் பார்ப்பவனுக்குத் தெரிந்து விட்டால் அவ்வளவுதான்! படம் நாலு நாள் கூட ஓடாது.

தனியே எரிவது, பைக்கில் எரிவது இவற்றை விட குடிசையோடு எரிவது போன்ற காட்சிகள் மிகவும் ரிஸ்க். வெப்பம் அபரிமிதமாக இருக்கும்.

நாமாக எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன், அபாரமான தன்னம்பிக்கையும், மனோபலமும் இருந்தாலொழிய 'இந்தத் தீக்குளிப்பு' விஷயம் சாத்தியமேயில்லை.''

சந்திப்பு : பா.ரா.

புகைப்படம் : கோபிநாத்

மல்ல; சமுதாயத்துக்கும் நல்லது'' என்று சொன்னார் வரதராஜன்.

''அரசியல் தீக்குளிப்புகள், கவனத்தைக் கவரும் ஆயுதமாகவும் அங்கீகாரத்தைப் பெறும் ஒரு வழியாகவும் மாறி விட்டன'' என்று சொல்கிறார் மனநல மருத்துவர் டாக்டர் ருத்ரன்.

''தீக்குளிப்பு என்பது மிக அதிகபட்சமான ஒரு செயல் என்பதில் சந்தேகமில்லை. இந்த முயற்சியில் இறங்கி உயிர் பிழைத்துக் கொண்டால் தற்கொலை வழக்கு போடப்படும். 'இதற்கு மேல் இந்த விஷயத்தை என்னால் தாங்க முடியாது' என்ற மனநிலைக்குத் தள்ளப்படும் போது ஒருவர் தீக்குளிப்பு முடிவுக்கு வரலாம். அல்லது, ''நாம் இப்படிச் செய்தால் நமக்கு இது கிடைக்கும்'' என்று ஆதாயத்தை எதிர்பார்க்கும் மனநிலை காரணமாகவும் ஒருவர் இம்முயற்சியில் இறங்கலாம்.

''மேலைநாடுகளில் இதுபோன்ற மூடப் பழக்கங்கள் இல்லை. சில தென் கிழக்கு ஆசிய நாடுகளிலும், இந்தியாவிலும், அதிகமாக நடைபெறக் காரணம், கலாசார பின்னணிதான். ஹிந்து, மற்றும், பௌத்த கலாசாரப்படி, 'அக்னி' என்பது புனிதமானது. யாகங்கள் நடத்தி, அக்னிக்கு சகலத்தையும் தாரை வார்ப்பது என்பது தொன்றுதொட்டு வரும் பழக்கம். தீயில் குளித்துத் தனது பரிசுத்தத்தை நிரூபித்தாள் சீதை. கண்ணகி, மதுரையை எரித்து விட்டுத் தானும் தீயில் மாண்டு போனாள். இந்த ரீதியில் பார்க்கும் போது, தீயில் உயிர் விடுவது என்பது மிக மிக அதிகபட்சமான தியாகமாகக் கருதப்படுகிறது. ஆனால் தற்போது நடக்கும் தீக்குளிப்புகள் அந்த வகையில் சேர்ந்தவைதானா?

''ஒரு கட்சியில் தொண்டனாக இருப்பவன், ஏதாவது செய்து தலைவரின் கவனத்தைக் கவர முயலுகிறான். அதற்காக மண்ணெண்ணெய் டப்பா, தீப்பெட்டியைத் தேடத் தொடங்குகிறான். உண்ணாவிரதம் இருக்கும் அல்லது சிறைபுகும் தலைவரின் மீது உண்மையிலேயே பற்று இருந்தால் வீட்டிலேயே தீக்குளிக்கலாமே? எதற்காகத் தெருவில், கூட்டத்தின் முன்னிலையில் இந்த முயற்சியில் இறங்குகிறான்? கவனத்தைக் கவர்ந்து விளம்பரம் பெறுவது மட்டுமல்ல; பார்த்துக் கொண்டிருப்பவர்கள் தன்னைக் காப்பாற்றி விடுவார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும்தான் இவ்வாறு செயல்படுகிறான். இறந்தாலும் குடும்பத்துக்குக் கட்சி கண்டிப்பாக உதவி செய்யும். பிழைத்தால் அவன் தியாகம் அங்கீகரிக்கப்பட்டு, கட்சியில் ஒரு அந்தஸ்து வரும். நிதியுதவி கிடைப்பது பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.

''தீக்குளித்து மரணமடைந்தவர்களைப் பற்றி வசீகரமாகவோ, வீரமாகவோ, வெற்றிகரமாகவோ காட்டுவதற்குத் தற்போது பத்திரிகைகளும் போட்டி போடுவது மிகவும் வருத்தத்தக்கது. இதுபோன்ற செயல்களால் பிரச்னையைத் தீர்க்க முடியாது என்பதையும், இது ஒரு முட்டாள்தனமான விஷயம் என்பதையும்தான் மக்கள் மனதில் பதியும்படி பிரசாரம் செய்ய வேண்டுமே தவிர, இதை ஒரு வீரசாகசமாகப் பறைசாற்றவே கூடாது'' என்கிறார் டாக்டர் ருத்ரன்.

- ப்ரியன்



சென்னையில் தீக்குளித்து உயிர்நீத்த நோபல், டி.பி. சத்திரத்தில் அவர் அக்கா முனியம்மாவுடன் வசித்து வந்தார். வயது 24. எட்டாவது வகுப்பு வரை படித்தவர். நிரந்தரமான வேலை இல்லை. சாய்பாபா பக்தர். அக்காள் முனியம்மா, வட்ட மகளிர் அணிச் செயலாளர் என்பதால் போலீஸ் ஸ்டேஷன், கலெக்டர் ஆபீஸ், மெட்ரோ ஆபீஸ் என்று பொது ஜனங்களின் பிரச்னைகளுக்காக அக்காவுடன் செல்வாராம். ஜெ பெயரில் மன்றம் வைத்திருந்தாராம். 'அம்மா (ஜெ) தலைமையில்தான் கல்யாணம்' என்றும் சொல்லிக் கொண்டிருந்தாராம்.

'அம்மா' உருவம் அழியாமல்...

அக்காள் முனியம்மா, 'நாங்கள் கல்கி பத்திரிகையிலிருந்து வந்திருக்கிறோம்' என்றவுடன் ''டேய் பாஸ்கர்... 'கல்கி' அம்மாவை எதிர்க்கிற பத்திரிகையா, ஆதரிக்கற பத்திரிகையாடா?'' என்று இன்னொரு சகோதரரிடம் விவரம் கேட்டுக் கொண்டுதான் பேச ஆரம்பித்தார்.

''தீக்குளிச்ச அன்னிக்கு என்னிடம், 'என்னக்கா... ரெண்டு பொண்ணுங்க கூட அம்மாவுக்காகத் தீக்குளிச்சிட்டாங்க. இந்த உயிர் எதுக்குக்கா?'' என்று பொலம்பிக்கிட்டே இருந்தான். நான்தான், 'டேய்... உன்னை மாதிரி தொண்டர்கள் தீக்குளிக்க நினைச்சா, அப்புறம் 'அம்மா'வுக்கு எவனுமே மிஞ்ச மாட்டான்டா' என்று அடக்கி வைத்தேன். 'உண்ணாவிரதத்தால அம்மா படற சோதனை தாங்க முடியலக்கா...' என்று சொன்னவன் இரவு பத்து வச்சுக்கிட்டான்' என்று சொல்லிக் கலங்குகிறாள் முனியம்மா.

உடம்பு முழுவதும் தீப்பிடித்தாலும் கையில் பச்சை குத்தியிருந்த ஜெ உருவம் மட்டும் அழியாமலிருக்க அந்தப் பகுதியை ஒரு கையால் மறைத்துக் கொண்டிருந்தாராம்.

''அக்கா... அம்மா ரூவா கொடுத்தா வாங்காதே.. பணத்துக்காக நான் இதைச் செய்யல... அம்மாவுக்காகத்தான் செஞ்சேன்' என்று கடைசி வரை சொல்லிக்கிட்டு இருந்தான்...''

கடைசியில் தீக்குளிப்புக் காயங்களுடன் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நோபல், கட்சியில் இருந்து வற்புறுத்திக் கொடுக்கப்பட்ட ஒரு லட்ச ரூபாயை, பத்துப் பேர் கொண்ட அக்கா, தம்பி, தங்கைகளுக்குக் கொடுக்கச் சொல்லி விட்டாராம்.

சந்திப்பு : தில்லப்பா

பாண்டியன் மகள்

33. நிலவில் பறந்த செண்டு!

மேகங்கள் சதா உலவியதால் குளிர்ச்சி அதிகமாக நிலவிய அந்தப் பகுதியில், மலைத்தொடர் சற்று இடைவெளி கொடுத்து விலகியிருந்தது. வேங்கைகள் அதிகமாக உலவியதால் புலியாரா என்று வழங்கிய அந்த இடத்திலிருந்து தொடங்கிய மலைக்கணவாய், சதா சர்வகாலமும் மேற்கத்திக் காற்று பலமாகச் சீறியதால் அதிகம் பயன்படுத்தப்படாமல், வெறும் காட்டு வழியாகவே இருந்தது.

மலைப் பாறைகள் சற்று உள்ளடங்கி ஏற்படுத்தியிருந்த வளைவில், கூடாரங்கள் பல தெரிந்தன. அவற்றின் முகப்பில், வீசிய குளிர்காற்றில் விற்கொடிகள் படபடத்தன. இரண்டாயிரத்துக்குக் குறையாத அந்த சேர வீரர்கள் அங்கு வந்து பத்து நாட்களாகியும் அங்கிருந்து நகர உத்தரவு வராததால் அந்த நிலைக்குக் காரணமான பாண்டியரை சபித்துக் கொண்டிருந்தனர். வாட்களையும் அம்புகளையும் பாறைகளில் தீட்டிக் கொண்டிருந்த வீரர்களிடையே சலிப்பே தென்பட்டது. குளிர் நிரம்பிய காற்றில் சிலிர்த்துக் கொண்டன புரவிகள்.

வாட்களையும் வேல்களையும் தவிர சேர வீரர்கள் கச்சையில் தரித்திருந்த செண்டாயுதங்கள் பளபளத்து, பார்வைக்கு அச்சமேற்படுத்தின. கூரிய வளைந்த முனையும் உறுதியான தண்டும் கொண்ட அந்த ஆயுதம், உடலில் பாய்ந்ததும் உயிரைக் குடிக்க வல்லது என்பது முதல் பார்வையிலேயே புரிந்தது. எட்ட நின்ற மரங்களின் மீது அவற்றை எறிந்து பழகிக் கொண்டிருந்த வீரர்களின் சலிப்பு, அதிவேகமாக அந்த ஆயுதத்தை அவர்கள் வீசியதிலிருந்து தெரியவந்தது.

தனது வீரர்களின் சலிப்பையும் சினத்தையும் சேரர் படைத் தலைவன் கங்காதரன் கவனிக்கவே செய்தான்.

சதா வீசிக் கொண்டிருந்த கடுங்குளிர் காற்றும், திடீர் திடீரெனப் பெய்த ஆலங்கட்டி மழையும், எதிர்பாராது தாக்கிய வேங்கைகளும், அங்கு வீரர்களை அதிக நாட்கள் தங்க வைப்பது அத்தனை விரும்பத்தக்கதல்ல என்பதை அவனுக்கு உணர்த்தவே செய்தன.

கொங்கு மன்னனைக் காணச் சென்றுவிட்ட மார்த்தாண்டனும் மாறவர்மனும் அதுவரை செய்தியேதும் அனுப்பாததோடு சேரர் உதவிப்படை வருமுன்னரே சோழன் எல்லைப் புறத்தில் தாக்குதலைத் துவங்கி விட்டதாக வந்த செய்தியும் சேர்ந்து, அவன் சித்தத்தைக் குழப்பிக் கொண்டிருந்தது.

படையை நடத்திச் செல்ல சேரலாதன் அனுமதியைப் பெற வந்த போது மன்னன் கேட்ட கேள்விகளும் அவனைக் குடைந்து கொண்டிருந்தன.

கொல்லத்தின் மயக்கம் தரும் மாலை நேரத்தில் அத்தாணி மண்டபத்தில் கங்காதரனை நோக்கிய மன்னனது விழிகளில் கடுமை காணப்பட்டது. அருகில் நின்ற அமைச்சரின் பார்வையும் நம்பிக்கை தருவதாகத் தோன்றவில்லை.

''கங்காதரரே, நாம் அரியணையேறி இன்னும் ஓராண்டு கூட முடியவில்லை.''

''ஆம் மன்னவா.''

''நம்மை ஸ்திரப்படுத்திக் கொள்ளாத நிலையில் சோழருடன் போர் அவசியமா?''

சற்றுத் தயங்கிய படைத்தலைவன், துணிவை வரவழைத்துக் கொண்டு மெல்ல விளக்க ஆரம்பித்தான் :

''மன்னவா! குலோத்துங்கன் சாளுக்கியருடன் தொடுத்த போர் தொடர்ந்து



விஷ்வக்சேனன்

கொண்டிருக்கிறது. விக்கிரமாதித்தனது பெரும்படையை வென்று திரும்புவது அத்தனை எளிதல்ல. அவன் திரும்புமுன் மாறவர்மர் மதுரையைக் கைப்பற்ற எண்ணு கிறார். நாம் இப்போது செய்யும் உதவியால் சோழன் பார்வை தென்திசைப் பக்கம் திரும்பாதிருக்கப் பாண்டிய நாடு நமக்கு நல்ல அரணாக அமையும். பாண்டியர் இந்தப் போரில் வென்றதும் குமரி உள்பட உத்தமபாளையம் முதல் மலைக் கணவாய் வரையிலும், நமக்களிப்ப தாகப் பட்டயம் எழுதிக் கொடுத்திருக்கிறார்.''

அமைச்சர் குறுக்கிட் டார் : ''நீங்கள் கூறுவது உண்மைதான், படைத் தலைவரே! ஆனால் போரில் வென்றாலும் மாறவர்மர் அரியணை யில் அமர மக்கள் ஒப்ப வேண்டுமே?''

''அமைச்சரே, பாண் டியன் மகளைப் பற்றி உல வும் வதந்திகளில் ஏதும் உண்மை இருப்பதாகத் தெரியவில்லை. அதைப் பற்றி நமக்குக் கூறிய ச மு த் தி ர ப ந் த னை யும் பிறகு காண வில்லை.''

அமைச்சரின் முகத் தில் சிந்தனை படர்ந்தது. ''நமது கோட்டைகளில் உபதலைவர்களை விசா ரித்தீர்களா?''

''இறந்து போன பொதிகைக் கூற்றத்துத் தலைவனைத் தவிர்த்து அனைவரையும் விசா ரித்து விட்டேன். இனி சமுத்திரபந்தன் திரும்பி வந்து விளக்கமளித்த பிறகே இதைப் பற்றி மேலும் விசாரித்து அறிய வேண்டும்.''

படைத்தலைவன் பதிலைக் கேட்ட அமைச் சரின் முகத்தில் மெல்லிய முறுவல் ஒன்று படர்ந் தது. ஓலைக் குழ லொன்றை எடுத்து நீட்டி யவர், ''இதைப் படித்துப் பாரும்'' என்றார்.

ஓலையைப் படித்த கங்காதரன் மு க த் தி ல் வியப்பு படர்ந்தது. சேர லாதருக்கு சமுத்திரபந்தன் எழுதிய ஓலை அது. காஞ்சியிலிருந்து ஈழத்து ஒற்றன் ஒருவன் தப்ப உதவியதால் சந்தேகத்துக்குட்பட்ட அனைத்து வணிகரை யும் சோழன் சிறை செய்ததாகவும், வேங்கி யின் சிறையில் அடைபட்டுக் கிடந்த சமுத் திரபந்தன் தற்போது தப்பித்து மீண்டும் சேர நாடு வருவதாகவும் எழுதியிருந்தான்.

போர்மூளக்கூடிய அந்த நேரத்தில் சமுத்திரபந்தன் உடனிருப்பது நலம் என்று எண்ணிய கங்காதரன், ஐந்தாறு நாட்கள்



காத்திருந்தும் அவன் வராமற் போகவே, படைகளை நடத்திக் கொண்டு கணவாயை அடைந்திருந்தான்.

கூடாரங்களைப் பார்த்தபடி சிந்தனையில் ஆழ்ந்திருந்த கங்காதரனை அணுகிய அவன் உபதலைவன், ''படைத்தலைவரே!'' என்று அழைத்தான்.

பார்வையை உபதலைவன் மீது திருப்பிய கங்காதரனுக்கு அவன் கேட்க விரும்புவது புரிந்தாலும், ''என்ன ரவிசேகரா?'' என்றான்.

ரவிசேகரன் என்று அழைக்கப்பட்ட அந்த சேரர் உபதலைவன், வயதில் இளையவனாகவும், சிவந்த திடமான சரீரத்துடனுமிருந்தான். அவன் இடையில் வாளைத் தவிர பெரும் செண்டாயுதமொன்றும் இருந்தது.



"இந்தத் தண்ணிப் பாலை இன்னும் எத்தனை நாளைக்குத்தான் வாங்குவீங்க?"

"பாங்க் மானேஜர்ங்கிற முறையில மாடு வாங்க அவனுக்கு நான் தந்த வங்கிக் கடனை அவன் அடைக்கிற வரைக்கும்!"

- கே. வி.

''படைத்தலைவரே! நாம் இன்னும் எத்தனை நாட்கள் இங்கேயே காத்திருக்க வேண்டும்?'' என்றான் ரவிசேகரன்.

கங்காதரன் உபதலைவனைப் பார்த்த பார்வையில் பரிவிருந்தது.

''ரவிசேகரா, வீரர்களின் நிலை எனக்குப் புரிகிறது. ஆனால் நாம் அவசரப்பட்டு கணவாயைக் கடந்து சோழன் எல்லையில் புகுவது அபாயகரமானது. விக்கிரமன் எங்கே, எப்போது தோன்றுவான் என்பது எளிதில் அறிய இயலாத விஷயம். எனவே மாறவர்மரிடமிருந்து ஓலை வந்த பின்பே புறப்படுவது நல்லது.''

''நாம் ஒரு வீரனை மாறவர்மரிடம் அனுப்பி, நிலைமையை அறிந்து வரச் செய்தாலென்ன?''

''நானும் அதைப் பற்றித்தான் சிந்தித்தேன். இன்று இருள் கவியத் தொடங்கியதும் நீயே சென்று மாறவர்மரைக் கண்டு நிலையறிந்து வா'' என்று உத்தரவிட்டான் படைத்தலைவன்.

இருள் கவியத் தொடங்கியதும் ரவிசேகரன் பயணத்திற்குத் தயாராக நின்றான். மலைக்கணவாய் முடியும் வரை தானும் வருவதாகக் கூறிய படைத்தலைவனும் தன் புரவியில் ரவிசேகரனுடன் கிளம்பினான்.

மலையின் வளைந்த பாறைப் பகுதியை விட்டுப் பாதையை அடைந்ததும் முகத்தில் அறைந்த குளிர்காற்று, புரவிகளையும் சிலிர்க்க வைத்தது. கரடு முரடாக வளைந்து வளைந்து சென்ற அந்தப் பாதையில் காட்டுக் கொடிகளும் மூலிகைகளும் நிறைந்து கிடந்ததால் காற்றில் ஒருவித மணம் கமழ்ந்தது. இரவின் அமைதியைக் கிழித்த காட்டு மிருகங்களின் கர்ஜனைகளும் உறுமல்களும் ரத்தத்தை உறைய வைத்தன. கிரீச்சிட்ட பறவைகளின் ஒலிகளும் மலைப் பகுதியில் எதிரொலித்தன. நிலவு தன் கதிர்களை மலைமுகடுகளினூடே பாய்ச்ச முயன்றது.

புரவியைச் செலுத்திக் கொண்டிருந்த படைத்தலைவன் சட்டென்று நின்றான்.

''என்ன படைத்தலைவரே?'' - ரவிசேகரன் வினவினான்.

பதிலுக்குக் கையை உயர்த்திச் சைகை செய்த கங்காதரன், எதையோ உற்றுக் கேட்டான். மலைப்பாதையில் எதிர்த்திசையில் தொலைவில் புரவியொன்றின் குளம்பொலி ஒலித்துப் பின் சட்டென்று நின்றது.

சற்றுப் பொறுத்து புரவியை நடத்திய கங்காதரன் மீண்டும் நின்றான். மறுபடியும் ஒலிக்கத் தொடங்கிய அந்தக் குளம்பொலி மீண்டும் நின்றது!

அபாயங்கள் நிறைந்த அந்த மலைப் பாதையில் தனித்து வருபவன் யாராக இருந்தாலும் சாமானிய வீரனாக இருக்க முடியாது என்பதையும் அபரிமிதமான துணிவும் திறமையும் கொண்டவனாக இருக்க வேண்டும் என்பதையும் புரிந்து கொண்ட கங்காதரன், தன் உபதலைவனுடன் பாறையின் மறைவு ஒன்றில் நிழலடித்த பகுதியில் புரவிகளைச் செலுத்தி நிறுத்தினான்.

நீண்ட நேரம் அமைதி நிலவிய அந்தப் பகுதியில் மீண்டும் அந்தக் குளம்பொலி மெல்ல ஒலிக்கத் தொடங்கியது.

எதிரில் தெரிந்த வளைவான பாதையை உற்றுநோக்கிய படைத்தலைவன், வருபவன் யாராக இருந்தாலும் அந்த வளைவைத் தாண்டியதும் நிலவொளி பாய்ந்த அந்த

இடத்தில் நேர் எதிரே தென்பட்டாக வேண்டும் என எதிர்பார்த்துக் காத்திருந்தான். ஆனால் வந்தவனோ அவ்வளவு எளிதில் ஏமாறுகிறவனாகத் தெரியவில்லை.

வளைவுக்கு மறுபுறத்தில் அந்தப் புரவி நின்று விட்டதாகத் தோன்றியது. நிலவொளி அங்கு நேராகப் பாய்ந்ததை வந்தவனும் கவனித்திருக்க வேண்டும்!

கங்காதரனும் உபதலைவனும் அரை இருளில் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். கண்களை மேலும் கூர்மையாக்கிக் கொண்ட இருவரும் நிழலிலேயே காத்திருந்தனர்.

சற்றுக் கழித்து குளம்பொலி மீண்டும் சீராக ஒலித்தது. வந்தவன் ஒரு முடிவுக்கு வந்து முன்னேறுவதாகப்பட்டது.

பாறைகளின் மறைவில் நின்றவர்களின் நேர்ப் பார்வையில் நிலவொளியில் ஒருவன் புரவி மீது வெகு எச்சரிக்கையுடன் வருவது தெரிந்தது. ஒரே சீராக நடந்த அந்தப் புரவியில் வந்தவன் அசாத்திய உயரமாயிருந்தான். திடமாக அவன் புரவியில் அமர்ந்திருந்த முறையும் பட்டையான அவனது யவன வாளும் கங்காதரனின் கவனத்தை ஈர்த்தன.

உபதலைவன் ரவிசேகரனது விழிகள் வந்தவனது உடையைக் கவனித்தன. அது சோழ வீரர் உடை என்பதைப் புரிந்து கொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை அவனுக்கு. ரவிசேகரனின் வலது கரம் மெல்ல பக்கவாட்டில் நகர்ந்து செண்டாயுதத்தின் பிடியை இறுகப் பற்றியது.

கங்காதரனும் வந்தவனது உடையைக் கவனிக்கவே செய்தான். ஆனால் வருபவனது தோற்றமும், புரவியில் அவன் அமர்ந்திருந்த விதமும் அவனை இதற்கு முன் எங்கோ எப்போதோ பார்த்திருப்பதான நினைவை உண்டாக்கின.

எதிரில் வந்தவன் சீரான வேகத்தில் முன்னேறிக் கொண்டிருந்தான். அவனது இடது கரம் கடிவாளத்தைப் பிடித்திருக்க, பக்கவாட்டில் தொங்கிய வலது கரம் எந்த வினாடியிலும் செயல்படத் தயாராக இருப்பது படைத்தலைவனுக்குப் புரிந்தது.


புரவியில் வந்தவனது தோரணையையும், முகவாயின் முன்புறத்தில் நீண்டிருந்த தாடியையும், நிலவொளியில் பளிச் பளிச் சென்று மின்னிய கூரிய விழிகளையும் கண்டுவிட்ட கங்காதரனின் நினைவில் அவன் யாரென்பது மின்னலாகப் பளிச்சிட்டது.

கங்காதரன் முகத்தில் வியப்பு விரிந்தது. பல நாட்களுக்கு முன்னர் தன்னை விழிஞத்தில் சந்தித்து, சோழ நாட்டின் நிலையையும் மாறவர்மன் உரிமையைப் பறிக்கத் தோன்றியிருக்கும் பாண்டியன் மகளைப் பற்றியும் வெகு சாதுரியத்துடன் விவாதித்தவனும், மன்னருக்குத் தனது ஓலையை. எடுத்துச் சென்றவனுமான ஒற்றன் சமுத்திரபந்தன் தான் அவன்! அந்த இரவில், வேங்கைகள் உலவும் அபாயமான அந்தக் கணவாயின் சிக்கலான பாதையில், திடீரென்று சமுத்திரபந்தன் தோன்றுவானென்பதைக் கங்காதரன் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

உபதலைவன் ரவிசேகரனது உணர்ச்சிகளோ வேறுவிதமாக இருந்தன. வருபவன் சோழ வீரன் உடையில் இருப்பதைக் கண்டு கொண்டவன், மலைக்கணவாயின் முகப்பிலிருக்கும் சேரர் படைப் பிரிவை வேவு பார்க்க வந்திருக்கும் சோழ ஒற்றன் அவன் என்றே தீர்மானித்தான். ஆனால் படைத்தலைவன் வாளாவிருப்பதன் காரணம் புரியவில்லை அவனுக்கு.

"இருந்தாலும் பக்கத்து வீட்டில் குடியிருக்கிற டாக்டர், பேஷண்டுக்காக ரொம்ப அலையறார், போங்க!"
"ஏன்... என்னாச்சு...?"
"நேத்து ராத்திரி ஒரு மணிக்கு எங்க வீட்டுக் கதவைத் தட்டி, யாரோ இருமினாற்போல இருந்ததேன்னு விசாரிக்கிறார்!"

– வேதபுரி எல். ரமேஷ்



தங்களைக் கடந்து அவன் சென்றுவிட்டால் தப்பி ஒளியவும் மறைந்திருந்து போராடவும் பாறைகள் ஏராளமாக இருப்பது அவன் கவனத்தைக் கவர்ந்ததால் அதற்கு மேல் பொறுக்காத ரவிசேகரன், தனது புரவியின் பக்கப் பகுதியில் கால்களால் உதைத்துப் புரவியை அதிவேகமாகக் கிளப்பிப் பாய்ந்தான்.

சேரநாட்டின் நிகரற்ற வீரனும், என்றும் குறி தவறியறியாதவனுமான ரவிசேகரனது கையிலிருந்த அந்தச் செண்டாயுதம், நிலவொளியில் பளபளத்து, இம்மி பிசகாமல் சமுத்திரபந்தனின் மார்பை நோக்கிப் பாய்ந்தது.

(தொடரும்)

பகவத் கீதை படம் தமிழில் டப் செய்யப்பட்டு, விரைவில் வெளிவரவிருக்கிறது. 1992-ஆம் ஆண்டின், சிறந்த திரைப்படத்துக்கான தேசிய விருது பெற்ற படம். வீடியோ கேஸட்களை வெளியிடுவதற்காக இயக்குனர் ஜி.வி. அய்யர் சென்னை வந்திருந்த போது பேசிக் கொண்டிருந்தோம். அவர் சொன்ன சில விஷயங்கள் :

● இந்துமதம் சம்பந்தமாய் நான் ஏற்கெனவே ஆதிசங்கரா, மத்வாச்சார்யா, ராமானுஜர் ஆகிய படங்களை எடுத்திருந்தாலும், அவற்றை எல்லாம் எடுப்பதற்கு முன்பே, என் மனத்தில் துளிர்த்த விஷயம், பகவத் கீதையைத் திரைப்படமாக எடுக்க வேண்டும் என்பது. என்னுடைய வாழ்க்கையின் லட்சியம் அது என்று கூடச் சொல்லலாம்.

● பகவத்கீதையின் ஸ்லோகங்களையும், பல அறிஞர்களுடைய விளக்கங்களையும் நான் படித்தபோதிலும், எனக்கு பகவத் கீதையின் திரை வடிவத்தை உருவாக்க உடுப்பி மடத்தைச் சேர்ந்த சுவாமிஜி பேஜாவர்ஜி கோவிந்தாசாரிதான் பேருதவி புரிந்தார்.

● "பகவத்கீதையை சினிமாவாக எடுப்பதாவது? முடியாத காரியம்" என்று தான் பலரும் கூறினார்கள். அதுவே ஒரு தூண்டுகோலாக அமைந்தது.

● திரை வடிவத்துக்கான ஸ்கிரிப்டைத் தயார் செய்ய ஏறத்தாழ பத்து வருடங்கள் எனக்குத் தேவைப்பட்டது. இடைப்பட்ட இந்த பத்தாண்டுகளில் நிறையப் படங்கள் எடுத்து விட்டேன்.

● சுமார் இருநூறு சமஸ்கிருத பண்டிதர்களுக்கும், கீதா போதகர்களுக்கும் என்னுடைய ஸ்கிரிப்டின் பிரதியை அனுப்பி வைத்து, அவர்களைக் கருத்துக் கேட்டேன். பெரும்பான்மையானவர்கள், அற்புதமாய் இருப்பதாய்ச் சொல்லி ஊக்கம் அளித்தார்கள்.

● ஸ்கிரிப்ட்டை தேசிய திரைப்பட வளர்ச்சி நிறுவனத்துக்கு அனுப்பி வைத்து, படம் எடுக்க நிதி உதவி கோரினேன். அவர்கள் பதினைந்து லட்சம் ரூபாய் தருவதாகக் கூறினார்கள். என்னுடைய பட்ஜெட் முப்பது லட்சம். மீதிப் பணத்துக்கு என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்த போது, தெலுங்குப் படத் தயாரிப்பாளர் சுப்பராம ரெட்டி எனக்கு உதவ முன்வந்தார். "ஆசைக்காக இந்தப் படத்தை எடுக்க நினைக்கிறேன். பாராட்டு, பரிசு கிடைக்கலாம். ஆனால் உங்களுக்குப் போட்ட பணம் கிடைக்காது" என்று வெளிப்படையாகவே சொன்னேன். "பகவத்கீதையைப் படித்தால் புண்ணியம்; கேட்டால் புண்ணியம் என்பார்கள். நான் சினிமாவாக எடுத்து, அந்தப் புண்ணியத்தைத் தேடிக் கொள்ளுகிறேனே!" என்றார் அவர். போட்ட பட்ஜெட் முப்பது லட்சம்தான் என்றாலும், படத்தை முடிக்க மேலும் ஐந்து லட்சம் செலவாகிற்று.

● பகவத்கீதை படத்தின் காட்சிகளை இந்தியாவின் பல இடங்களிலும் எடுத்திருக்கிறேன். திரௌபதி சுயம்வரக் காட்சி, அம்பாசமுத்திரத்தில். வேலூரிலும் சில காட்சிகள். படத்தின் இரண்டாம் பகுதியில் பல காட்சிகள் இமய மலையில் எடுக்கப்பட்டன. பகவத்கீதையின் கதை மனிதனின் அகப் பயணம் பற்றியதுதானே? அந்தப் பயணம் மேல்நோக்கித்தானே அமைய வேண்டும்? அதற்கு ஏற்ற சூழ்நிலை இமயத்தை விட்டால் வேறு எது?

ஜி.வி. அய்யரின் அடுத்த படம் விவேகானந்தர். இந்தி, ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் எடுக்கிறார். நஸ்ருதீன் ஷா, ராமகிருஷ்ண பரமஹம்சராய் நடிக்கிறார்.

"உங்கள் படங்களை மக்கள் அறிந்த மொழியில் எடுக்காமல், சமஸ்கிருதத்திலேயே பெரும்பாலும் எடுப்பதேன்?"

"சமஸ்கிருதம் இன்று பல பேருக்குப் புரியாத மொழியாக இருக்கலாம். ஆனால் அதற்கு அகில உலக அளவில் அங்கீகாரம் உண்டு. இன்று கம்ப்யூட்டர்களுக்கு மிகவும் ஏற்றது சமஸ்கிருதம் என்று கூடச் சொல்கிறார்கள்! சமஸ்கிருதத்துக்கு நல்ல எதிர்காலம் இருக்கப் போவது நிச்சயம்."

ஜி.வி. அய்யர் :

மாட்டுக்காரவேலன் முதல்

(பகவத்கீதை படத்தைக் கூட தெலுங்கிலும், தமிழிலும் டப் செய்து வெளியிடுவதில் இவருக்கு பூரண உடன்பாடு இல்லையாம். அது தயாரிப்பாளர் சம்பந்தப்பட்ட விஷயம் என்பதால், இவர் தலையிட விரும்பவில்லையாம்)

''சினிமா என்பது ஒரு மாஸ் மீடியம். அதை ஜனங்களுக்குப் புரிகிற பாஷையில் எடுக்க வேண்டாமா?''

''நான் எடுப்பது 'mass'க்காக இல்லை, class க்காக. நான் இல்லாது போனாலும், என் படங்கள் எனக்குப் பின்னால் நிலைத்து நிற்க வேண்டும்.''

''உங்களுக்கு வெகுஜன சினிமா என்றால் வெறுப்பா?''


''நானும் ஒரு காலத்தில் வெகுஜன சினிமா எடுத்துக் கொண்டிருந்தவன்தான். சுமார் 85 படங்களில் முக்கால் வாசிக்கும் மேல் கமர்ஷியல் சினிமாக்கள் தான். எம்.ஜி.ஆர். நடித்து, 'மாட்டுக்கார வேலன்' என்று ஒரு படம் வந்ததே ஞாபகமிருக்கிறதா? அதை, கன்னடத்தில் ராஜ்குமாரை நடிக்க வைத்து எடுத்திருக்கிறேன். ஒரு கால கட்டத்தில், ''நான் யார்? இந்த உலகில் எனக்கு இடப்பட்ட பணி என்ன?'' என்ற கேள்விகளை எனக்கு நானே கேட்டுக் கொண்டேன். அவற்றுக்கு விடை காணும் முயற்சியாகத்தான் ஜனரஞ்சகமான படங்களை விட்டு விலகினேன்.''

அதன் பின் விருது பெறத்தக்க படங்களை எடுக்க ஆரம்பித்தார் அய்யர். ''ஒரே விஷயத்தை வெவ்வேறு நபர்கள் சினிமாவாக எடுத்தால், ஒவ்வொரு படமும், எடுத்தவரது பாணிக்கேற்ப மாறுபடும்'' என்று கூறும் ஜி.வி. ஐயர், இதற்கு ஒரு உதாரணமும் தருகிறார் :

''நான் எடுத்த 'ஹம்ஸகீதே' என்கிற கதையை 'கமர்ஷியலாக' எடுக்க விரும்பினார் டைரக்டர் கே. விஸ்வநாத். சம்மதமளித்தேன். பிரமாதமான வெற்றியைப் பெற்ற அந்தப் படம்தான், ''சங்கராபரணம்!''

சந்திப்பு : எஸ். சந்திரமௌலி

வண்ணப்படம் : யோகா



● ஜி.வி. அய்யருடன் இருப்பவர்கள் மகன் ராகவேந்திரா (பகவத்கீதையில் அர்ஜுனனாக நடித்தவர்) மகள் கல்பனா (ராமானுஜர் படத்தின் ஹீரோயின்.)

பகவத் கீதை வரை...

நாஞ்சில்மகன்

கிராமத்து நிஜங்கள்



கிராமத்து உயர்நிலைப் பள்ளி.

ஒன்பதாம் வகுப்பு ஆங்கில ஆசிரியர், 'வோர்ட்ஸ்வொர்த்'தின் 'சாலிட்டரி ரீப்பர்' நடத்திக் கொண்டிருந்தார்.

''மே ஐ கமின் சார்?''

இனிய ஆங்கில உச்சரிப்பைக் கேட்டு, திடுக்கிட்டுத் திரும்பினார் ஆசிரியர்.

''எஸ்...எஸ்...யூ...யூ... மே கம் இன்...'' தடுமாறி ஆங்கிலத்தில் சொல்லி விட்டு, வாசலில் நின்ற பையனைக் கூர்ந்து நோக்கினார். நறுவிசாக டிரஸ் செய்திருந்தான். சுத்தமான வெள்ளைச் சட்டை, காக்கி நிக்கர், காலில் வெள்ளை ஷூ. முகத்தில் ஆங்கிலக் களை.

''தாங்க்யூ சர்'' என்று பணிவுடன் சொல்லி விட்டு, முன் பெஞ்சை நோக்கி நடந்தான். முன் பெஞ்சில் இடத்துக்கு அடி போடும் மாணவர்கள், அவர்களை அறியாமலேயே ஒதுங்கி இடம் கொடுத்தனர். மாணவர்கள் கண்கள் அனைத்தும் அவன் மேல் விழுந்தன.

ஆசிரியர் அவனைக் கேள்விக்குறியுடன் பார்க்க, அவனாகவே எழுந்து, ''எக்ஸ்க்யூஸ் மி சர். அயாம் ரமேஷ் ஃப்ரம் மெட்ராஸ். அட்மிட்டட் ஒன்லி திஸ் மார்னிங்'' என்று சொல்லிக் கொண்டே, கையிலிருந்த 'பீஸ்' கட்டிய ரசீதை அவரிடம் நீட்டினான்.

ரசீதை வாங்கிப் பார்த்தவர், ''எஸ்... ஓகே... சிட்டவுன்'' என்று சொல்லி விட்டு, ஆங்கிலத்தில் பேசியதை நினைத்துத் திருப்திப்பட்டுக் கொண்டார். மற்ற மாணவர்கள் வியந்தனர்.

பாடத்தைத் தொடர்ந்தார். ''நவ்... நான் எங்க நிறுத்தினேன். எஸ்... எஸ்... வோர்ட்ஸ்வொர்த் அந்த சாலிட்டரி ரீப்பரைப் பார்க்கிறார்'' என்று சொல்லி விட்டு முன் வரிசையில் இருந்த மாணவனைப் பார்த்து, ''முருகா, நீ சொல்லு. 'சாலிட்டரி'ன்னா என்னடா அர்த்தம்?'' என்று கேட்டார். முருகன் 'திருதிரு'வென்று விழிக்கவே, ''கமலா, நீ சொல்லும்மா'' என்று கேட்டார். அவளும் விழித்தாள்.

''ரமேஷ். நீ சொல்லு. வாட் ஈஸ் த மீனிங் ஆஃப் சாலிட்டரி?''

''இட் மீன்ஸ் லோன்லினஸ் சர். ஹியர் அஸ் இட் இஸ் யூஸ்ட் அஸ் அன் அட்ஜக்டிவ். இட் மீன்ஸ் 'லோன்லி' சர்'' என்று சொல்லி விட்டு அமர்ந்தான்.

அவன் என்ன சொல்கிறான் என்பதை கிரகிக்க ஓரிரு வினாடிகள் எடுத்துக் கொண்டு 'லோன்லி'க்கும் 'லோன்லினஸ்'க்கும் அப்படி என்ன வித்தியாசம்... என்னவோ 'அட்ஜக்டிவ்' என்று சொல்கிறானே என்று மனதுள் திகிலுடன் வியந்து, ''எஸ்... ஓகே... யூ ஆர் ரைட்... சிட் டவுன்'' என்று வெற்றிப் புன்னகையுடன் சொன்னார். ஏற்கெனவே அவன் உட்கார்ந்து விட்டதைக் கவனித்த மாணவர்கள் 'கொல்'லெனச் சிரித்தனர்.

அந்த உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குத் தமிழே சரியாக வராது. ரமேஷ் வந்து சேர்ந்தவுடன் அவனை அதிசயப் பொருளைப் பார்ப்பது போல் பார்த்தனர் மாணவர்கள். நுனி நாக்கில் அவன் பேசும் ஆங்கிலம் அவர்களுக்குப் புரியாவிட்டாலும் அவன் மேல் மதிப்பை உண்டாக்கியிருந்தது.

அவன் சென்னையில் உயர்தர மெட்ரிகுலேஷன் பள்ளியில் பயின்றவன். வீட்டிலும் பள்ளியிலும் ஆங்கிலம் மட்டுமே பேசிப் பழகியதால் ஆங்கிலத்தைத் தாய் மொழி போல் சரளமாகப் பேசுபவன். தமிழில் தடுமாறுவான். மற்ற வகுப்புகளில் தமிழில் கற்பிப்பதால் புரிந்து கொள்ளச் சிரமப்பட்டான். ஆங்கில வகுப்பாவது எளிதாக இருக்கும் என்று எதிர்பார்த்தால் அங்கும் தமிழ் ஆட்சி புரிவதைக் கண்டு, புரிந்து கொள்ளத் திணறினான்.

'ஹை சொசைட்டி' பெற்றோருக்கு ஒரே மகனாகப் பிறந்தவன் அவன். தாய் தந்தைக்கு இடையே உள்ள சிறு சிறு பூசல்கள் பெரிதாகி, விவாகரத்து வரை சென்று விட,



இருவராலும் கைவிடப் பட்டு கிராமத்தில் உள்ள தாத்தா வீடே கதி என்று நெஞ்சு நிறைய பாரத்தைச் சுமந்து கொண்டு வந் தவன். பாசம் மிகுந்த தாய் வழி தாத்தா அவனை கிராமப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டார்.

ஒருநாள் ஆசிரியரிடம், ''சர், ஷல் ஐ ஆன்ஸர் திஸ் கொஸ்ச்சன்?'' என்று கேட்க, அதற்கு உடனடியாக ஆங்கிலத்தில் பதில் சொல்ல முடியாத ஆசிரியர் எரிச்ச லடைந்து, ''உக்கார்ல, அதிகப்பிரசங்கி. உங்கிட்ட கேக்கறப்போ ஆன்ஸர் சொன்னா போதும்'' என்று 'பட்'டென்று சொன்னார். இம்மாதிரி பதில்களுக்குப் பழக்கப்படாத அவன் உடைந்து போனான்.

மற்றுமொரு நாள் அவன், ''சர், ஒய் டஸ் 'வொர்ட்ஸ்வொர்த்' போர்ட்ரே...'' என்று கேட்க ஆரம்பிக்குமுன் வெடித்தார். ''உக்கார்ல, தொரை இப்பதான் லண்டன் லருந்து எறங்கி வாராரு. எப்பவும் இங்கி லீஸ்லதான் கிழிப்பாரு'' என்று கேலியாகச் சொல்ல, மற்ற மாணவர்கள் வகுப்பே அதிரும்படி சிரித்தார்கள். ரமேஷ் முகம் சிவந்து, அவமானத்தில் குன்றிப் போனான்.


''நான் எழுதிப் போட்ட கொஸ்ட்டீன், ஆன்ஸரப் படிச்சாப் போரும். அதிக வெளச் சல்லாம் வேண்டாம்'' என்று கத்தினார்.

ரமேஷ் இந்தப் பள்ளிச் சூழ்நிலைக்குத் தன்னை ஓரளவு தயார் செய்து கொண்டான் காலப் போக்கில். உடைகள் 'டிரிம்' ஆக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. காலில் ஷு தேவை இல்லை - புத்தகங்கள் தினமும் கண்டிப்பாகக் கொண்டு வர வேண்டு மென்பதில்லை. இலக்கணப் பிழையுடன் ஆசிரியர் பேசும் ஆங்கிலத்தைக் கேட்டு முகம் சுளிப்பது பெரும் தவறு - என்று ஒவ்வொரு படியாகத் தேறினான்.

''டேய், ஆல் ஆப் யூ ஒரு பேப்பர எடுங்கடா. 'சாலிட்டரி ரீப்பர்' சம்மரிய பாக்காம எழுதணும்.''

மாணவர்கள் நோட் புக்கிலிருந்து பேப் பரைக் கிழித்து எழுத ஆரம்பித்தனர். டெஸ்க்கின் அடியிலுள்ள நோட்டைப் பார்த்தும், பக்கத்து மாணவர்களைப் பார்த் தும் எழுதினார்கள். ஸ்பெல்லிங் மிஸ்டேக் குக்கு அளவே இல்லை. ரமேஷ் எந்த நோட் டையும் பார்க்கவில்லை. பேப்பரை எடுத் தான். சரசரவென்று எழுதினான். முதலில் ஆசிரியரிடம் கொண்டு நீட்டினான்.

ஆசிரியர் வாங்கிப் பார்த்தார். முதல் வாக்கியத்தைப் படித்தார். 'வொர்ட்ஸ் வொர்த் டிஃபைன்ஸ் பொயட்ரி அஸ் இமோஷன் ரிக்கலெக்டட் இன் டிரான்குவி லிட்டி அன்ட் அஸ்...' என்ன எழுதியிருக்



கிறான் இவன். கோபத்தில் முறைத்து விட்டு "வாடா, இங்க..." என்று கடுமை யாக அழைத்தார். பணிவுடன் வந்து நின் றான் ரமேஷ்.

"என்னடா எழுதியிருக்கே?"

"சம்மரி சர்."

"எதப் பாத்துப் படிச்ச?"

"இட்ஸ் மை ஓன் சம்மரி சர். இட்ஸ் ஜஸ்ட் அன் அப்ரிசியேஷன் ஆஃப் த போயம் சாலிட்டரி ரீப்பர், சர்."

"நான் எழுதிப் போட்ட நோட்டைப் படிச்சியாடா?"

"நோ சர்."

"ஒய்டா?"

"இட்ஸ் நதிங் பட் எ ஸ்டிரியோ டைப்ட் சம்மரி காப்பீடு வெர்பாட்டம் ஃப்ரம் த மாஸ்டர்ஸ் கைடு, சர்."

"நீ எந்த 'கைட' பாத்துடா படிச்சே?"

"ஐ யூஸ்ட் டு ரெஃபர் டு மோர் தன் ஒன் கைடு, கம்பேர் இட் வித் த டெக்ஸ்ட் அன்ட் அலிமிலேட் த பாயிண்ட்ஸ்..."

"நிறுத்துடா நாயே. நான் கேட்டுக் கிட்டே இருக்கேன் நீ பதில் சொல்லிக் கிட்டே இருக்கியாடா. நான் எழுதிப் போட்ட நோட்டப் படிக்கத்தான் எழு தணும். நோட்டக் கொண்டா."

"ஐ ஹேவ் நாட் ரிட்டன், சர்."

"ஒய்?"

"இட்ஸ் ஆஃப் நோ யூஸ் சர்."

"நோ யூஸா? லீடர். அந்த பெரம்ப எடுத்துட்டு வாடா" என்று கத்தினார்.

லீடர் குஷியாகச் சென்று பிரம்பைக் கொண்டு வந்தான்.

"இங்கிலீஸ் நோட்டு எழுதாம தொரை சொந்தமா எழுதுறாராம். நீட்டுடா கைய" என்று ஆவேசம் வந்தவர் போல் கத்தி, ஓங்கி ஓங்கி அடித்தார். வலியால் துடித் தான். கை சிவந்து ரத்தம் கன்றிப் போய் நெருப்புத் துண்டை வைத்தது போல் எரிந் தது. ஏன் இப்படி அடிக்கிறார்? என்ன தப்பு செய்தோம்? என்று அவனுக்குப் புரிய வில்லை. சொந்தமாக 'சம்மரி' எழுதினால் தப்பா? அவன் படித்த பள்ளியில் ஒரே மாதிரியான 'சம்மரி' எழுதினால் தண்டிப் பார்கள். நேர் மாறாக இருக்கிறதே இங்கு.

பெற்றோர்களால் கைவிடப்பட்டு அனாதையாக நின்றானே! அன்று நெஞ்சில் விழுந்த அடியை விடவும் அதிகமான வேத னையைக் கொடுத்தது இந்த அடி.

அன்றைய அடிக்குப் பிறகு அவன் எந்தக் கேள்வியும் கேட்பதில்லை. அமைதி யாக இருந்தான். ஆங்கிலத்தைத் தவிர்த்து தமிழிலேயே பேசக் கற்றுக் கொண்டான். ஆங்கிலம் அவனை விட்டு மெதுவாக வில கிச் செல்ல ஆரம்பித்தது.

அரக்கோணம் பிரச்னைகள்

பிரசித்தி பெற்ற தக்கோலப் போர் ஆறு கோணங்களில் வியூகம் வகுத்து நடைபெற்றதாம். அதன் காரணமாகவே, அறுகோணம் என்பது அரக்கோணம் என்று வழங்கப்படலாயிற்று என்கிறார்கள் அரக்கோணம்வாசிகள். அன்றைக்கு வியூகம் வகுத்துத் தாக்கியது சிப்பாய்கள் என்றால் இன்றைக்குப் பிரச்னைகள்!

''உதாரணத்திற்குக் காந்தி ரோடை எடுத்துக் கொள்ளுங்கள்... இதுதான் அரக்கோணம் நகரின் முக்கிய சாலை. மிகவும் குறுகலான சாலை என்பதால் இரண்டு பஸ்கள் எதிரும் புதிருமாக வருகிற போது போக்குவரத்தே ஸ்தம்பித்துப் போய் விடுகிறது. போதாததற்கு இந்தச் சாலையை ஒட்டித்தான் மார்க்கெட்டும் இருக்கிறது. அங்கும் இட நெருக்கடி. சுற்றுவட்டாரங்களிலுள்ள சுமார் இருநூறு கிராம மக்களும் காந்தி ரோடில்தான் நடக்க வேண்டும்; இந்தக் குறுகலான மார்க்கெட்டில்தான் பொருள்களை வாங்கிச் சென்றாக வேண்டும் என்கிற நிலையில் அனைவரும் மூச்சுத் திணறாத குறைதான்.

''குறைந்தபட்சம் காந்தி சாலையை ஒரு வழிப் பாதையாக்குங்கள்; மார்க்கெட்டில் தினசரி விழும் குப்பை கூளங்களைத் தினசரி அகற்ற ஏற்பாடு செய்யுங்கள் என்று நகராட்சியிடம் நாங்கள் பலமுறை எடுத்துச் சொல்லியும் பயனில்லை!'' என்கிறார் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த எம். ரவிச்சந்திரன்.

''பஸ் நிலையத்தின் இட நெருக்கடியைக் குறைப்பதற்காகத்தான் புதிய பஸ் நிலையம் ஒன்று கட்டப்பட்டது. ஆனால் அதற்கு எந்த பஸ்ஸும் செல்வதேயில்லை. ஆண்டுக்கு ஒருமுறை வரும் ஆடிக் கிருத்



* சும்மா கிடக்கும் மேல்நிலை நீர்த் தொட்டி



* எப்போதும் திறந்திருக்கும் அலிபாபா குகை...

அலிபாபா குகை மர்மங்கள்!



* நெருக்கடியான காந்தி சாலை



* வரதராஜன்

* கன்னையா



நிகை சமயத்தில் மட்டும்தான் புது பஸ் நிலையத்துக்குப் பஸ்கள் வருகின்றனவே தவிர, மற்ற சமயங்களில் அது வெறுமனேதான் கிடக்கிறது. அதனாலேயே பல சமூக விரோத செயல்களுக்கும் அந்த இடம் தோதாக அமைந்து விடுகிறது!'' என்கிறார்கள் கவியரசு கண்ணதாசன் கலை மன்றத்தைச் சேர்ந்த சம்பத்தும் சத்திய நாராயணனும்.

அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். ''இங்கு துவங்கப்பட்ட 'ரயில்வே இன்ஜினியரிங் ஒர்க் ஷாப்' காரணமாகத்தான் அரக்கோணமே விரிவடைந்தது. ஆனால் அந்த ஒர்க் ஷாப்பில் முழுமையாக வேலை நடை பெறுவதில்லை. பல வேலைகளைத் தனியாரிடம் காண்ட்ராக்ட் விட்டு விடுவதால் தொழிலாளர்களும் பாதியாகக் குறைக்கப்பட்டு விட்டார்கள்!''

இதற்கு பதில் கூறுவது போல், ''இங்கு உற்பத்தி செய்யப்படும் ரயில்வே பொருள்களுக்கான செலவு ஏராளம். காண்ட்ராக்ட் விடும் போது செலவு மிகவும் குறைகிறது. அப்புறம் காண்ட்ராக்ட் விடாமல் என்ன செய்வார்கள்?'' என்கிறார் அரக்கோணம் நகர காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் வேணுகோபால்.

✱ விமல்சந்த்



✱ என். சந்திரசேகரன்



''இங்கிருப்பவர்களில் பெரும்பாலானோர் வேலை நிமித்தமாகவோ அல்லது வியாபார நிமித்தமாகவோ தினசரி சென்னைக்கு (சுமார் 70 கி.மீ.)ச் சென்று வந்து கொண்டிருப்பவர்கள்தான். ஆனால் போதுமானபடி ரயில் வசதிகள் இல்லை என்பது பெருங்குறை'' என்கிறார் ரயில் உபயோகிப்பாளர் சங்கத்தின் தலைவர் என். சந்திரசேகரன்.

''அதிகாலை ஐந்தரை மணி, ஆறே முக்கால், ஏழு நாற்பது, எட்டு ஐந்து ஆகிய நேரங்களில் புறப்படும் ரயில்கள்தான் வேலைக்குச் செல்வோருக்கும் கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவ, மாணவியருக்கும் உபயோகமாக இருக்கும் ரயில்கள். இவை போதவில்லை. கூடுதல் ரயில் வேண்டும் என்கிறோம். அதோடு எட்டு ஐந்துக்குப் புறப்படும் ரயிலை ஃபாஸ்ட் ரயிலாக விடுங்கள் என்பதும் எங்களது நீண்ட நாள் கோரிக்கை. இதற்காக அரக்கோணம்வாசிகளெல்லாம் சேர்ந்து உண்ணாவிரதம் கூட இருந்து பார்த்து விட்டோம். ரயில்வே நிர்வாகம் மசியவே இல்லை!'' என்கிறார் சந்திரசேகரன்.

''இது மட்டுமா? ஆயிரக்கணக்கான பேர் வந்து ரயிலேறுகிற அரக்கோணம் ஜங்ஷனில், கழிப்பிட வசதி கூட இல்லை என்பது எத்தனை பெரிய வேடிக்கை!'' என்கிறார் அவர்!

''எப்போதும் திறந்திருக்கும் அலிபாபா குகையைப் பார்த்திருக்கிறீர்களா?'' என்று புதிர் போட்டு அழைத்துச் சென்று காண்பித்தார்கள் சம்பத்தும் சத்தியநாராயணனும்.

அதுதான் காந்தி ரோடில் இருக்கும் ரயில்வே பாலம். அது கீழ்ப்பாலம் என்பதால் குகை மாதிரி கும்மிருட்டாகத்தான் இருக்கிறது. புதிதாக வாகனம் ஓட்டிச் செல்பவர்கள் அந்தக் குறுகலான பாலத்தின் சுவர்களில் இடிக்காமல் சென்றால் ஒரு பம்பர் பரிசு கூட அறிவிக்கலாம். ''இதன் நெரிசலைக் குறைப்பதற்குத்தான் கொஞ்சம் தள்ளி மேம்பாலம் ஒன்று கட்ட ஆரம்பித்தார்கள். அதுவும் என்ன காரணத்தாலோ ஆமை வேகத்தில்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!'' என்கிறார்கள்.

''அரக்கோணத்திலிருந்து ஆயிரக்கணக்கான மாணவ - மாணவியர் தினசரி சென்னைக்கோ அல்லது காஞ்சீபுரம், வேலூருக்கோதான் சென்று கல்லூரிப் படிப்பைத் தொடர வேண்டியிருக்கிறது. தூரம் காரணமாகவே இங்குள்ள பல பெண்கள் கல்லூரிப் படிப்புக்கு வழியின்றிப் பள்ளிப் படிப்போடு நின்று விடுகிறார்கள். எனவே, இங்கொரு கல்லூரி இருந்தால் மிகவும் வசதியாக இருக்குமென்று நாங்களும் பகீரதப் பிரயத்தனம் செய்து பார்த்து விட்டோம். பலன்தான் பூஜ்ஜியம்!'' என்கிறார் மதர் இந்தியா அமைப்பைச் சேர்ந்த எஸ். விமல்சந்த். காரணம் கல்லூரி அமைப்பதற்கான இடப் பிரச்னை.

''அது ஒரு பிரச்னையே அல்ல!'' என்கிறார் தொகுதி எம்.எல்.ஏ.வான திருமதி லதா பிரியகுமார். ''அரக்கோணத்திலுள்ள தமிழ்நாடு ஸ்டீல் பிளாண்ட் நஷ்டத்தில்தான் ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் அவர்கள் இன்னும் விரிவாக்கம் செய்து என்ன செய்து விடப் போகிறார்கள்? எனவே, அவர்கள் நினைத்தால் கல்லூரிக்கான இடத்தை நிச்சயம் தர முடியும்!'' என்கிறார் அவர்.

வாக்காளர் பேரவைத் தலைவர் வரதராஜனிடம் கேட்டால், ''அரக்கோணம் என்பது எல்லோராலும் நிராகரிக்கப்பட்ட நகரம்!'' என்று ஒரே போடாகப் போடுகிறார். ''எங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே எங்களுக்கு எதிரிகளாக இருக்கிறபோது நாங்கள் என்ன செய்ய முடியும்?'' என்கிறார் அவர்.

''அரக்கோணம் நிராகரிக்கப்பட்ட நகரம் அல்ல; பராமரிக்கப்படாத நகரம்!'' என்கிறார் எம்.எல்.ஏ. லதா பிரியகுமார்.

இதற்கு என்ன காரணம்?

''மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்தால்தான் தங்கள் ஊருக்கு என்னென்ன தேவை என்பதை உணர்ந்து செயலாற்ற முடியும். வெளியூர்களிலிருந்து வரும் அதிகாரிகளுக்கு உள்ளூர்த் தேவைகள் பற்றி என்ன தெரிந்துவிட

✱ ரவிச்சந்திரன்



✱ வேலுச்சேகரன்



முடியும்? அதுதான் காரணம்!'' என்கிறார் அரக்கோணம் நகராட்சியின் முன்னாள் தலைவர் கன்னையா.

''இது மட்டும் காரணம் என்று சொல்லி விட முடியாது!'' என்று கூறி நம்மையே கேள்வி கேட்க ஆரம்பித்தார் லதா பிரியகுமார்.



● லதா பிரியகுமார்

''நீங்கள் அரக்கோணம் நகராட்சிக் கமிஷனர் திருஞானசம்பந்தத்தைச் சந்தித்தீர்களா?''

''இல்லை. சந்திக்க முடியவில்லை!''

''என்ன காரணம்? அவர் ஊரிலில்லையா?''

''அப்படித்தான் சொன்னார்கள். ஆனால் நாங்கள் அவர் அலுவலகத்துக்குச் சென்ற போது, அவர் அப்போதுதான் வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றதாகச் சொன்னார்கள். வீட்டுக்குச் சென்ற போது அவர் இல்லையென்று சொல்லி விட்டார்கள்!''

''இதற்கு என்ன காரணம் தெரியுமா? பத்திரிகைக்காரர்களான உங்களைச் சந்தித்தால் பல கேள்விகளுக்கும் பதில் சொல்ல வேண்டியிருக்குமே! அதற்காகத்தான் அவர் வேண்டுமென்றே உங்கள் சந்திப்பைத் தவிர்த்திருக்கிறார். இப்படிப்பட்டதொரு கமிஷனரை வைத்துக் கொண்டு என்ன செய்து விட முடியும்?

''உதாரணமாக, இங்குள்ள கடற்படை விமான தளமான ராஜாளியைத் திறப்பதற்காக அப்போதைய குடியரசுத் தலைவர் ஆர்.வி. அவர்கள் வந்தார். அப்போது, இந்த கமிஷனரைக் கூப்பிட்டு, 'குடியரசுத் தலைவர் வரவிருப்பதால் நிதிவசதி தாராளமாகத் தருகிறோம். அதைக் கொண்டு, நீங்கள் அரக்கோணம் நகருக்கு என்னென்ன வசதிகள் செய்து கொள்ள முடியுமோ அதையெல்லாம் செய்து கொள்ளுங்கள்!'' என்று அரசாங்கம் சொன்னது.

''ஒரு நல்ல கமிஷனர் என்ன செய்திருப்பார்? அந்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டிருப்பார். ஆனால் இவரோ எதுவுமே செய்யவில்லை. அதனால் அப்போது வழங்கப்பட்ட நிதி திருப்பி வாங்கிக் கொள்ளப்பட்டு விட்டது!

''அப்படியென்ன இங்கு தேவைகளா இல்லை? தாலுகா அலுவலகத்துக்கு அருகில் கட்டப்பட்டிருக்கும் மேல்நிலை நீர்த்



● சத்தியநாராயணன், சம்பத்

தொட்டி, கட்டி முடிக்கப்பட்டுப் பல ஆண்டுகள் ஆகியும் பயன்படுத்தப்படாமல் தான் கிடக்கிறது! நகருக்குள் சாலை வசதிகள் எதுவுமே சரியில்லை. நகருக்குள் பொருத்துவதற்காக நாற்பது சோடியம் வேப்பர் விளக்குகள் வாங்கித் தரப்பட்டும் இன்னும் பொருத்தப்படவில்லை. நகராட்சிக்குச் சொந்தமான இரண்டு கலர் டெலிவிஷன்கள் அடுத்தடுத்துக் காணாமல் போன அதிசயம் இங்குதான் நடந்திருக்கிறது!''

''தொகுதி எம்.எல்.ஏ. என்கிற முறையில் நீங்கள் எதுவுமே கேட்கவில்லையா?''


''என்ன இப்படிக் கேட்டு விட்டீர்கள்! இந்தக் கமிஷனரைப் பற்றி நோட்டீஸ் அடித்து விநியோகம் செய்து, இவரை மாற்ற வேண்டும்; இவர் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எங்கள் காங்கிரஸ் கட்சி சார்பாக நாங்கள் உண்ணாவிரதம் கூட இருந்து பார்த்து விட்டோம். எதுவுமே நடக்கவில்லை. காரணம், கமிஷனர் திருஞானசம்பந்தம், அமைச்சர் செல்வகணபதிக்கு மிகவும் வேண்டியவர் என்று சொல்லப்படுவதுதான்!'' என்கிறார், லதா பிரியகுமார் இயலாமையோடு.

''எங்கள் எம்.பி. ஜீவரத்தினம் வேலூரில் இருக்கிறார். எம்.எல்.ஏ.வோ சென்னையில் இருக்கிறார். இதுவும் எங்கள் பிரச்னைகள் தீராததற்கு ஒரு காரணம் என்று பொது மக்கள் சொல்கிறார்களே?'' என்ற போது, ''நான் சென்னையிலிருந்தாலும் வாரத்திற்கு மூன்று நான்கு முறை அரக்கோணத்திற்குப் போய் மக்களைச் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறேன் என்பதால் இந்தக் குற்றச்சாட்டு நியாயமானதல்ல!'' என்கிறார் லதா பிரியகுமார்.

''அரக்கோணம் தொகுதி எம்.பி.யும் சரி, எம்.எல்.ஏ.வும் சரி, உங்கள் கட்சிக்காரர்கள்தான் என்கிற முறையில் அவர்களின் செயல்பாடுகள் பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் வேணுகோபாலிடம் கேட்ட போது, ''இந்தக் கேள்விக்கான பதிலைப் பொது மக்கள் உங்களிடம் சொல்லியிருப்பார்களே!'' என்றார் சிரித்துக் கொண்டே!

– இளங்கோவன்

“தொடரும் இனிய உறவுகள்...”



உண்மை நிகழ்ச்சி
எழுதுங்கள்! பரிசு பெறுங்கள்!

நேற்றுதான் போலிருக்கிறது. உங்கள் தந்தை ஸ்ரீராமில் ஒரு சந்தாதாரராகச் சேர்ந்தார். அதன் மூலம் தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் மிகுந்த தன்னம்பிக்கை பெற்றார்.

அவர் மட்டும் அல்ல. கடந்த 20 ஆண்டுகளாக, ஸ்ரீராமின் 6,00,000 சந்தாதாரர்களுமே அப்படித்தான்.

காலம் மாறுகிறது. இன்று உங்களுக்கும் ஸ்ரீராம் துணை நிற்கிறது.

தொடரும் இனிய உறவாக, அன்று உங்கள் தந்தைக்கும் இன்று உங்களுக்கும் ஸ்ரீராம் எந்த வகையில் உதவியுள்ளது என்பதை ஒரு கட்டுரையாக எழுதி **4.9.93** தேதிக்குள் அனுப்புங்கள்.

(உங்கள் உறவு முறை மகன், மகள், மருமகள், மருமகன் என்று எந்த விதமாகவும் இருக்கலாம்).

குறிப்பு: கட்டுரையுடன், பின்புறம் உங்கள் பெயர் எழுதப்பட்ட பாஸ்போர்ட் அளவுள்ள கருப்பு-வெள்ளை புகைப்படம் ஒன்றும் அவசியம் இணைக்கவும்.

உறையின் மீது, ''தொடரும் இனிய உறவுகள்...'' எனக் குறிப்பிடவும்.

கட்டுரைகள் ஸ்ரீராம் சிட்ஸ் நிறுவனம் அமைக்கும் நடுவர் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படும்.

பரிசுபெறும் கட்டுரைகளைத் தவிர மற்ற கட்டுரைகளை, தங்கள் விருப்பப்படி உபயோகித்துக் கொள்ள ஸ்ரீராம் சிட்ஸுக்கு முழு உரிமை உண்டு.

ஏற்கப்படாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்ப இயலாது. ஸ்ரீராம் சிட்ஸ் நிர்வாகத்தினரின் தீர்ப்பே முடிவானது.


1 - முதல் பரிசு:
வாஷிங் மெஷின்

2 - இரண்டாவது பரிசுகள்:
நேஷனல் நிப்போ ரைஸ் குக்கர்


4 - மூன்றாவது பரிசுகள்:
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் டின்னர் செட்

100 - ஆறுதல் பரிசுகள்:
ஸ்ரீபெட் கிஃப்ட் பாக்.

ஸ்ரீராம் சிட்ஸ் &
இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பி. லிமிடெட்.
நிர்வாக அலுவலகம்: ''சுப்பிரமணியம் பில்டிங்'',
1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002.
போன்: 8274451/8275536/8270400/8273932.









சக்கரவர்த்தித் திருமகன்

50. கழுகின் வீரம்

"ஐயோ சீதா, ஐயோ லக்ஷ்மணா!" என்று மாரீசன் கதறியதைக் கேட்ட சீதை, அது ராமன் கதறியதே என்று எண்ணி விட்டாள். பெருஞ்சுழற் காற்றில் அகப்பட்ட வாழை மரத்தைப் போல் நடுங்கிப் பதை பதைத்து, "லக்ஷ்மணா! அதோ அண்ணன் குரல் தெரியவில்லையா? ஓடு, ஓடு" என்றாள்.

தாங்க முடியாத திகிலடைந்து லக்ஷ்மணனைப் பார்த்து, "நாயகனுடைய துயரக் குரல் கேட்கிறதே! ஐயோ, என் உயிர் நிற்காதே!" என்று பொறுக்க முடியாத துயரத்திலும் பயத்திலும் தத்தளித்துக் கதறினாள்.

"காட்டில் ஏதோ அபாயத்தில் சிக்கி விட்டான். பெரும் கூச்சல் போட்டானே, கேட்கவில்லையா? இன்னும் இங்கே நிற்கிறாயே!" என்று அழுதாள்.

"ராக்ஷசர்களிடையில் உன் அண்ணன் அகப்பட்டுக் கொண்டு கதறுகிறான். ஒரே பாய்ச்சலாக ஓடி அவனைக் காப்பாற்ற வேண்டாமா? சும்மா நிற்கிறாயே!" என்று கதறினாள்.

அரக்கர்களுடைய மோசத்தை அறிந்த லக்ஷ்மணன், அண்ணன் இட்ட ஆணையை நினைவில் கொண்டு அசையாமல் நின்றான்.

ஜானகிக்கு உண்டான கோபமே கோபம்! வயிற்றில் இரண்டு கைகளாலும் அடித்துக் கொண்டு, "சுமித்திரையின் மகனே! சத்துருவாகி விட்டாயா? இவ்வளவு நாளும் வேஷம் போட்டாயா? ராமனுடைய மரணத்துக்கா இவ்வளவு நாள் காத்திருந்தாய்? அவன் இறந்தால் அவனுக்குப் பின் என்னை அடைந்து விடலாம் என்று எண்ணி இத்தனை நாள் ஏமாற்றினாயா? துஷ்டனே, ராமன் கதறிக் கூவுவதைக் கேட்டும் போகாமல் இங்கே நிற்கிறாயே? அண்ணனிடம் நீ காட்டிக் கொண்ட பிரியமெல்லாம் பெருஞ் சூழ்ச்சியா? துன்மார்க்கனே!" என்றாள்.

லக்ஷ்மணன் காதுகளை மூடிக் கொண்டான்.

துயரத்தால் துடிதுடித்துக் கொண்டு, உடலெல்லாம் கண்ணீரில் தோய்ந்து, புத்தி முற்றிலும் இழந்து போய் இப்படிப் பேசிய சீதையைப் பார்த்து லக்ஷ்மணன் மெதுவாகச் சொன்னான்:

"வைதேகி! உன் புருஷன் தேவ அசுர மானுட ஜாதிகளில் எவன் எதிர்த்தாலும் அவனுடன் போர் செய்து கொன்று விட்டுத் திரும்பி வருவான், இது நிச்சயம். பயப்படாதே! என் அம்மையே! புத்தியை சுவாதீனப் படுத்திக்கொள். பயப்பட வேண்டாம்! நம் ராமனை எந்த அரக்கனும் எந்த மிருகமும் எந்த பட்சியும் எந்தப் பேயும் எந்த கந்தர்வனும் எந்த தேவனும்




எந்த அசுரனும் தீண்ட முடியாது. நீ இப்படிப் பேசலாகாது, என் அருமைத் தாயே! ராமனுடைய பலம் எனக்குத் தெரியும். மூன்று உலகத்தில் யார் வந்து அவனை எதிர்த்தாலும் ராமனுடைய வெற்றி நிச்சயம். நீ துயரப்பட வேண் டாம். கொஞ்ச நேரத்தில் உன் நாயகன் அந்த மானைக் கொன்றுவிட்டு அதை எடுத்துக் கொண்டே வருவான், நீயே பார்ப்பாய்! இந்தக் குரல் அவனுடைய குரல் அல்ல. இது ராக்ஷசனுடைய மாயை. அதனால் நீ ஏமாந்து துயரப்பட வேண்டாம். உன்னை அண்ணன் என் னிடம் ஒப்புவித்து விட்டுப் போயிருக் கிறான். உன்னைத் தனியாக விட்டு விட்டு என்னைப் போகச் சொல்ல வேண்டாம். அண்ணன் ஆணையை நான் மீறலாகாது. ஜனஸ்தான ராக்ஷசர் களை நாம் கொன்றதனால் பழிவாங்க இப்படி ராக்ஷசர்கள் பல வித மோசம் செய்து வருகிறார்கள். அவர்கள் போடும் வேஷங்களையும் மாற்றுக் குரல்களையும் நம்பலாகாது. இது ராமன் போட்ட கூக்குரல் அல்ல; நீ கொஞ்சமும் பயப்பட வேண்டாம்'' என்றான்.

இப்படி லக்ஷ்மணன் சொன்ன போதிலும் சீதை கண்கள் சிவந்து போய்ப் பெரும் கோபமடைந்து சொல்லத் தகாத வார்த்தைகளைச் சொன்னாள் :

''அண்ணன் ஆணை என்று சமா தானம் சொல்லி, அண்ணன் கதறிக் கூவி னாலும் போகாமல் அவனைச் சாக விடு கிறாயா? ஆகா, உன்னை நம்பி என்ன மோசம் போனோம் ராமனும் நானும்! நீசனே! துஷ்டனே! ராமனுக்குப் பகை யாய் வந்த வஞ்சகனே! ராமனுக்கு ஆபத்து வந்தது என்று மகிழ்ச்சி அடை கிறாயா? ஏமாற்றப் பார்க்கிறாயா? ராம னோடு நீ வனத்துக்கு வந்த நோக்கத்தை இப்போது நான் கண்டு கொண்டேன். அடே பாவி! பரதனுடைய தூண்டுதலா இது? எல்லாரும் என் நாயகனுடைய சத் துருக்கள் ஆகி விட்டீர்களா? நீங்கள் எல் லாரும் சேர்ந்து என்ன செய்ய யோசிக் கிறீர்கள்? ராமனோடு வாழ்ந்த நான் உங்களைக் கண்ணெடுத்தும் பார்ப் பேனா? ராமன் இறந்த பிறகு ஒரு நிமி ஷம் உயிருடன் இருக்க மாட்டேன், அறி வாய்!'' என்றாள்.

மயிர்க் கூச்சலெடுக்கும்படியான இந்த வார்த்தைகளைக் கேட்டு லக்ஷ் மணன் இரண்டு கைகளையும் கூப்பி, ''தாயே! என் தெய்வமே! ஜனகருடைய புத்திரியே! இத்தகைய மொழிகள் உன் வாயிலிருந்து வரலாமா? பழுக்கக் காய்ச்சின இரும்பு போல் காதுகளில் புகுகின்றனவே! நீ எண்ணுவது அநீதி, பொய். பார்த்துக் கொண் டிருக்கும் தேவர்கள் சாக்ஷியாகச் சொல்லுகிறேன். ஆகா! இன்று பெண்களுடைய குணக்குறைவு உன் னிடமும் இருப்பதைக் கண்டேன். எனக்குப் பாப எண்ணம் சூட்டி னாயே, அடடா! இது உன்னுடைய கெட்ட காலம் என்றே எண்ணு கிறேன். பெரிய விநாசம் உன்னைத் தாக்கி விடுவது நிச்சயம்'' என்றான் அப்பாவி லக்ஷ்மணன். பயத்தால் நடுங் கினான்.

''இதோ, உலர்ந்த கட்டை களிருக்கின்றன. நீ மூட்டி அதில் விழப் போகிறேன். கோதாவரியில் விழுந்து உயிர் நீப்பேன். அல்லது தூக்குப் போட்டுக் கொண்டு சாவேன். மலையிலிருந்து கீழே குதித்தோ அல்லது விஷம் குடித்தோ



ராஜாஜி

சாவேன்! என்ன நினைக்கிறாய்? ராமன் கூக்குரலிட்ட இடம் போவாயா, இல்லையா?'' என்றாள் சீதை.

இவ்வாறு சொல்லி சீதை வயிற்றில் அடித்துக் கொண்டு கதறி அழுதாள். இதைக் கண்டு பொறுக்க முடியாமல் லக்ஷ்மணன் கை கூப்பி நமஸ்கரித்து, ''சீதையே! சரி, நீ சொல்லுகிறபடி அண்ணன் ஆணையை மீறி உன்னைத் தனியாக விட்டு விட்டுச் சொல்கிறேன். உனக்கு மங்களம்! வன தேவதைகள் உன்னைக் காப்பார்களாக! நீ சொல்லுகிறபடியே போகிறேன். ஐயோ, கெட்ட நிமித்தங்கள் காண்கிறேன்! பயமாகத் தானிருக்கிறது. நான் வந்து மறுபடி உன்னை ராமனுடன் பார்ப்பேனா! சந்தேகமாக இருக்கிறது. ஆயினும் இதோ போகிறேன்!'' என்று சொல்லி விட்டுச் சென்றான்.

போகும்போது அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே கொஞ்சம்கூட மனமில்லாமல் சென்றான்.

லக்ஷ்மணன் மனத்தைக் கோபமும் துயரமும் சேர்ந்து வாட்டின. சீதை சொன்ன கோரமான மொழிகளை அவன் எப்படிச் சகிப்பான்? அல்லது மறப்பான். அனைத்தையும் விட்டு விட்டு அண்ணனுடன் வனத்துக்கு வந்த ராஜகுமாரன் மனத்தை அந்த மொழிகள் மிகவும் துன்புறுத்தின.

ராமன் போன வழியிலேயே லக்ஷ்மணன் சென்றான். அந்த சமயத்துக் காகக் காத்துக் கொண்டிருந்த ராவணன் சுத்தமான காவித் துணி அணிந்து, இருப்பிடமின்றி பிக்ஷை எடுத்துத் திரியும் சன்யாசியாகத் தன்னை மாற்றிக் கொண்டு, மனத்தில் தீய எண்ணமும் வாயில் வேத மந்திரங்களும் சொல்லிக் கொண்டு ராமனுடைய ஆசிரமத் தண்டை சென்றான்.

குடிசை வாயிலில் வைதேகி தனியாக நின்று கொண்டிருந்தாள். ராமன் வருவானா என்று வனத்தைப் பார்த்த வண்ணமாக நின்றாள். ராவணன் சீதையைப் பார்த்தான்.

பார்த்ததுமே சூர்ப்பணகை எழுப்பிய ஆசை அவன் உள்ளத்தில் ஊர்ஜிதப்பட்டு நன்றாக உருக்கொண்டு விட்டது. எப்படியாவது இவளை அடைய வேண்டுமென்று நீசன் தீர்மானித்து விட்டான்.

காஷாயம் தரித்து, கமண்டலமும் திரிதண்டமுமாக வந்த பரிவ்ராஜ சந்நியாசி ஆசிரமத்தண்டை நின்றபடியால் ஆசார முறைப்படி சீதை அவனுக்கு உபசாரம் செய்தாள். கடமைப்படி ஆசனம் அமைத்து, பழமும் கிழங்கும் அவன் முன் வைத்தாள். அந்தக் காலத்தில் இது தவறக் கூடாத பண்பாடு.

அமைத்த ஆசனத்தில் சந்நியாசி உட்கார்ந்து சீதையைப் பார்த்தான். அவன் ஆசை இன்னும் அதிகரித்து முற்றிப் போயிற்று.

கேவலம் மிருகானுபவத்துக்கு மட்டும் ராக்ஷசேந்திரன் ஆசைப்படவில்லை. பாவியாயிருந்தாலும், பச்சை ஊன் தின்னும் அரக்கர் குலத்தவனாக இருந்தாலும், அவனுடைய எண்ணம் சீதையின் காதலைப் பெற்று, அவளை மனைவியாக்கிக் கொண்டு மேலான இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்பது. லங்கேசனுடைய ஆசை அவளுடைய சம்மதத்தைப் பெறவேண்டும் என்று. வனவாசத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஏழை ராமனை விட்டு விட்டு சம்பத்தும் சக்தியும் வாய்ந்த தன்னிடம் சந்தோஷமாக சீதை வந்து விடுவாள் என்றும் அதுவே ராமனுக்குச் சரியான அவமானமுமாகும் என்றும் ராவணன் எண்ணினான். தான் கண்ட மற்ற ஸ்திரீகளைப் போல் சீதையும் இருப்பாள் என்று எதிர்பார்த்தான்.

(தொடரும்)

குமுறல்

இன்று மக்கள் தண்ணீருக்காகச் சென்னையில் படும்பாடு அனைவரும் அறிவர். இந்தப் பிரச்னையை ஆராயக் கூடியவர்கள் 'Hydrologist' போன்றவர்கள்தான். ஆனால் அரசியல்வாதிகளோ எல்லாம் அறிந்த அறிஞர்களாகக் காலத்தைத் தள்ளி விட்டனர். MFL ஓசைப்படாமல் ரூ. 25 கோடி செலவில் Reverse Osmosis முறையில் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டது. அதுபோல் சென்னைக்கு Desalination plant மிகவும் தேவை. காலங்கடத்தாமல் அரசு இதை நிறுவ வேண்டும்.

- சி. ராமன், சென்னை - 4.



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இரங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 120 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஓர் நாள் உணவளிக்க, உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ. 300/- அல்லது 500/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 3000/- அல்லது 5000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்குகொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய பொருளும் முகவரியும் :

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் - 612 001.

செக் (or) டிராப்ட் முதலியவைகளை A.V.M.S.G.D.P.S. ஸமிதி என்ற பெயருக்கு அனுப்பலாம்.

*****இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு****

வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

I
1. ரிக்வேத ஸம்ஹிதா - நாகராக்ஷரம் - 10 மண்டலங்கள் - ரூ. 265/-
2. யஜுர்வேத தைத்திரீய ஸம்ஹிதா - 7 காண்டங்கள் - விலை ரூ. 165/-
3. ஸாமவேத ஸம்ஹிதா - கிரந்தாக்ஷரம் - 2 பாகங்கள் (முதல் பாகம் - ரூ. 165/-, இரண்டாம் பாகம் - ரூ. 210/-)
4. ஸாமவேத அஷ்டப்ராஹ்மணம் - நாகராக்ஷரம் - 3 பாகங்கள் (முதல் பாகம் - ரூ. 210/- இரண்டாம் பாகம் - ரூ. 110/- மூன்றாம் பாகம் - ரூ. 85/-)
5. ஸாமவேத பூர்வாபர ப்ரயோகம் - கிரந்தாக்ஷரம் - ரூ. 80/-
6. சாந்தி குஸுமாகரம் (2 பாகங்கள்) - விலை ரூ. 170/- (1ம் பாகம் ரூ. 85/- 2ம் பாகம் ரூ. 85) (கிரந்தாக்ஷரம்)

II கிரந்தாக்ஷரத்தில் காரிகையுடன் பிரம்மஸ்ரீ முத்துச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புகள்

1. போதாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 95/-
2. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 90/-
3. ஆபஸ்தம்ப ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 55/-
4. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 85/-
5. ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 50/-
6. கல்ப சித்ராவளி - ரூ. 55/-

III நாகராக்ஷரம்

1. [illegible] - ரூ. 25/- (மூலத்தில் தமிழ் பதவுரை)
2. ஸ்ரீ ராதாகிருஷ்ண பூஜாவிதானம் - ரூ. 25/- (ஸம்ஸ்கிருத மூலம் - தமிழ் பதவுரை)
3. [illegible] - [illegible] - ரூ. 25/- (ஸம்ஸ்கிருத மூலம் - ஆங்கில பதவுரை)
4. வடமொழிச் சொற்கடல் - ஸம்ஸ்க்ருதம் தமிழ் Dictionary 2 முதல் 8 தரங்கங்கள் வரை, முதல் தரங்கம் நீங்கலாக - ரூ. 70/-)
5. வேதபாட வழிமுறை (syllabus) ரிக், யஜுர், ஸாம - ரூ. 25/-
6. [illegible] - நாகராக்ஷரம் - விலை ரூ. 25/-

V.P.P. யில் அனுப்புவதில்லை. முழுத் தொகையையும் M.O. (or) Draft மூலம் மேற்குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம்.

பிரஸிடெண்ட் - டிரஷரர் - A.V.M.S.G.D.P.S. ஸமிதி, D-76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம் - 612 001.

நேரில் வாங்க விரும்புவோர் கண்டிப்பாக - ராஜா வேதகாவ்ய பாடசாலை, [illegible] தெரு, (சக்கரை படித்துறை அருகில்) கும்பகோணம் - 612 001 என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளவும்.

மடிமீது தலைவைத்து

5

"என்ன ரங்கா இது?" என்று குரலில் கோபம், நூறு டிகிரி வெந்நீரின் கொப்பளிப்பாய்த் தெரிய கவிதா கேட்டாள்.

"எது?" என்று மிரண்டு போனான் கஸ்தூரிரங்கன்.

"அந்தப் பையன் பாவம். பசியிலால சாப்ட்டேன்னு சொல்லிக் கெஞ்சினானே. அவனைப் போய் இப்படி இரக்கமே இல்லாம 'ஜெயில்ல போடுங்கடா'ன்னு சொல்லிட்டீங்களே. எப்படி இழுத்துட்டுப் போறானுங்கன்னு பாத்தீங்களா? மனஸ்ல அந்தப் பையன் உழுதுக்கிட்டே போயிருக்கான். உள்ள போட்டு என்ன அடி அடிக்கிறாங்களோ! நீங்க உடனே அந்தப் பையனை விடுதலை செய்ங்க. அவன் சாப்ட்டதுக்கு உண்டான காசை நான் கொடுத்துடறேன்."

படபடவென்று இடைவிடாமல், மூச்சு விடாமல் பேசிய கவிதாவை ஆச்சரியத்தோடு பார்த்தான் கஸ்தூரிரங்கன்.

"முடிச்சாச்சா?"

"அப்படின்னா?"

"என் கூட கொஞ்சம் உள்ள வர முடியுமா?"

"எதுக்கு?"

"காசு கொடுக்கறேன்னு சொன்னீங்களே. நீங்க ஜாமீன்ல எடுக்கப் போற பையன் உள்ள மேல மேல அடி, உதையெல்லாம் வாங்கக் கூடாதில்லையா? உள்ள வந்து பாத்து நீங்களே அவனை விடுதலை பண்ணி விடுங்க."

கவிதா அவனை ஒருமுறை முறைத்து விட்டு சபரியின் உட்புறம் நோக்கி நடந்தாள். நடந்தாள் என்று சொல்ல முடியாது. கிட்டத்தட்ட ஓடினாள் என்று கூடச் சொல்லலாம்.

உள்ளே நுழைந்த கவிதா ஏதோ ஒரு பழங்கால வீட்டின் பெரிய சமையல் கூடத்தில், திசை தெரியாமல் வந்து மாட்டிய மாதிரி உணர்ந்து திகைத்துப் போனாள். சமையல் கட்டா, பூஜை அறையா?

அவள் எதிர்பார்த்தது எதுவுமே இல்லை. முதலில் தரையில் சரம் இல்லை. கடப்பைக்கல் பதிக்கப்பட்டு நடுநடுவே வெண் கோடுகளாய் பளிங்குக்கல் பட்டைகள். பளிங்குப் பட்டைகள் கறுப்புச் செவ்வகக் கற்களுக்கு எல்லைக் கோடுகளாய்த் தெரிந்தன. புள்ளி வைத்த, புள்ளி வைக்கப்படாத மாக்கோலங்கள். சில புழங்க முடியாத மூலைகளில் பூந்தொட்டிகளில் பச்சை இலைகள். காஸ் அடுப்புகள் தழல் பரப்பாது எரிந்தன. ஒரு மூலையில் குடிநீர் வடிகட்டும் கருவி.

"என்னக்கா, ரங்காவைப் பாக்க வந்தீங்களா?" என்றான் ஒரு பையன்.



அவனை முதல் நாள் பார்ட்டியில் பார்த்த ஞாபகம் வந்தது.

கேடயம் போல் இருந்த இட்லிப் பானை மூடியை எடுத்து, ஆவி பறக்க வெந்து கொண்டிருந்த இட்லிகளில் ஒரு இட்லியை எவர்சில்வர் குச்சி ஒன்றால் துளைத்துப் பதம் பார்த்த கிழவி ஒருத்தி திரும்பி, கதீதாவைப் பார்த்தாள்.

''என்னம்மா, என்ன வேணும்? ரங்காவைப் பாக்கணுமா? அவன் வெளில இருக்கானே.''

''இல்ல, பாட்டி. ரங்கா இங்கே இருக்கேன்'' என்று கதீதாவின் பின்னாலேயே கஸ்தூரிரங்கனின் குரல் கேட்டது.

''சரி. இந்தப் பொண்ணு வழி தெரியாம உள்ள வந்திருக்கு பாரு.''

''இல்ல பாட்டி. வழி தெரிஞ்சிதான் வந்திருக்காங்க. ஒரு சின்னப் பையன் சாப்ட்டுக்காக கொடுக்காம ஜூட் விட்டு ஓடப்பாத்தான். நம்ம பசங்க பிடிச்சி உள்ள கொண்டு வந்தாங்க. அவனை நாம அடிச்சி, அவனுக்கு ஏதாவது ஆய்டப் போவுதுன்னு இவங்களுக்குக் கவலை. அதான் உள்ள போய்ப் பாருங்கன்னு சொன்னேன்.''

''என்ன இருந்தாலும் பொட்டச்சி இல்லியா ரங்கா? மனசு கேட்டிருக்காது. நம்ம ரங்கால்லாம் அப்...''

''தேர்லயே பாத்துக்கட்டுமே பாட்டி... எங்கே இருக்கான் அந்தப் பய. ஜெயில்லதானே?''

''ஜெயிலுக்குத்தான் கூட்டிட்டுப் போனாங்க. ஆனா கோர்ட்டு ஆரம்பமாய்டிச்சின்னு நெனக்கிறேன்.''

''ரைட். நீங்க வாங்க கதீதா'' என்று அவன் முன்னால் நடந்து பின்னால் தெரிந்த ஓர் அறைக் கதவைத் தள்ளித் திறந்தான்.



அந்த அறையில் கொஞ்சம் ஓரமாய் ஒரு நாற்காலி போடப்பட்டு விசாலிப்பாட்டி உட்கார்ந்திருந்தாள். பக்கத்தில் நடராஜன் நின்றிருந்தான். மூன்று பையன்கள் கவரோரமாய்ச் சுவரில் சாய்ந்து கவனித்துக் கொண்டிருக்க, காசு கொடுக்காமல் ஏமாற்றி விட்டு ஓடப் பார்த்த பையன் அறை நடுவே ஒரு சின்ன நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். அவன் கையில் முறுக்கு. முகத்தில் அழுகைக்குப் பதில் சந்தோஷம்.

அவர்கள் வருகையை முதலில் விசாலிப்பாட்டிதான் கவனித்தாள். அவள் அசைந்து, வாய் திறப்பதற்குள் கஸ்தூரிரங்கன் உதட்டின் மேல் ஒரு விரல் வைத்தான்.

'நடக்கட்டும்' என்பது போல் பாவனை செய்தான். முன்னால் போகப் போன கதீதாவின் மணிக்கட்டைப் பற்றிப் பின்னால் ஒதுங்குமாறு சைகை செய்தான். வேடிக்கை பார்க்குமாறு சைகையிலேயே தெரிவித்தான்.

கதீதா அவனை ஒட்டி நின்று கொண்டாள்.

''அப்ப, நீ சம்பாதிச்சித்தான் ஒங்கம்மாவைக் காப்பாத்தணும் இல்லியா?'' என்று தான் முன்பு விட்ட இடத்தி லிருந்து தொடர்ந்தாள் விசாலிப் பாட்டி.

''ஆமா. ஆயா! நான் பொய் சொல்லலை. நீ வேணும்னா எங்க வூட்டாண்ட வந்து பாரு. நோவுல இருக்கற எங்கம்மா சொல்லும்.''

''வாராவதியாண்டதான வூடு. வருவேன்.''

''வா ஆயா!''

''இங்க வேலை எதுனா குடுத்தா செய்வியா?''

''செய்றேன். டேபிள் துடைக்கச் சொன்னாலும் சரி. ப்ளேட் கழுவச் சொன்னாலும் சரி! எனக்கு யாரும் வேல கொடுக்கலை ஆயா. பசியாலதான் நான் சாப்ட்டேன். வெறும் இட்லிதான் ஆயா சாப்ட்டேன்.''

''போய்ட்டுப் போவுது. கண்டல், கை முறுக்கு, தட்டை எல்லாம் டின்ல எடுத்துட்டுப் போய் வித்துட்டு வரியா.''

''செய்றேன் ஆயா.''

''ரங்கா அவ்வளவுதான்ப்பா. பையன் பரவால்லை. தேறிடுவான். கொஞ்ச நாளைக்கு கண்டல் விக்கட்டும். அப்புறம் நீ வேல்ல அனுப்பலாம்! பேர் என்னடா சொன்னே?''

''மணிவாசகம்.''

அபா

''பார்ரா. எவ்வளவு அழகான பேர்னு. இங்க இருக்கறவல்லாம் கருக்கி மணி, மணின்னு கூப்புடுவானுங்க. அப்புறம் ஙெறிஙெறுன்னு கூப்புடுவாங்க. வுட்ராதே. அப்புறம் ஒன் அழகான பேர் ஒனக்கே மறந்துடும்! போ. காலைல குளிச்சிட்டு வா. இங்க இவர்தான் மொதலாளி. ஒனக்கு சட்டை, டவுசரு எல்லாம் தச்சிக் குடுப்பாரு. போட்டுக்கினு வேலையைப் பாக்கலாம். பொய், பித்தலாட்டம் எதுவும் இருக்கக் கூடாது.''

''சரி ஆயா. தாங்க்ஸ் சார்'' என்று சற்றும் எதிர்பாராத தருணத்தில் மணிவாசகம் ரங்காவின் காலில் விழுந்து விட்டான்.

''டே... டேய். எழுந்திர்ரா. எழுந்திர்ரான்னா... போ. போய்க் காலைல வா.''

அவன் தென்றலைத் துணைக்குச் சேர்த்துக் கொண்டு ஓடினான். ரங்கா, கவிதாவைத் திரும்பிப் பார்த்தான்.

''தெரிஞ்சிரிச்சா. இதான் ஜெயில். விசாலிப்பாட்டி கைவேலையை விட்டு இங்க வர்ற வரைக்கும் பையன் இங்கதான் முறுக்கோ, சீடையோ சாப்ட்டு அடைஞ்சி கெடப்பான். விசாலிப்பாட்டி வந்துட்டா இந்த எடம் கோர்ட்டாய்டும். இப்ப அவனுக்கு நாங்க கொடுத்திருக்கறது கடுங்காவல் தண்டனை. பீச்ல கத்தணும். நாலு பேர்கிட்டப் போய் கான்வாஸ் பண்ணிப் பண்ணி கண்டல் விக்கணும். அப்புறம் வேன்ல போட்ருவோம். சிட்டில அங்கங்க சுத்தி வந்து இட்லி தோசை வியாபாரம்...''

''நீங்க ரொம்ப ரொம்ப கிரேட்'' என்றாள் கவிதா கண்களில் நீர் மல்க.

''உங்களுக்கு கவிதான்னு பேர் வச்சதுக்குப் பதிலா, நீரும் நெருப்பும்னு வச்சிருக்கணும்.''

''ஏன்?''

''உங்க காரெக்டரே அப்படித்தான் இருக்கு. ஒரு செகண்ட் ஜில்லுனு இருக்கீங்க. அடுத்த செகண்ட் சூடாயிடறீங்க. ஓஹ். மறுபடியும் ஹோட்டல்காரன் புத்தியைக் காமிச்சிட்டேன்ல்ல? ஐ'ம் ஸாரி.''

வெகு இயல்பாக அவள் மணிக்கட்டை அவன் தொட்ட போது, அவளை ஓரமாக நிற்கச் சொல்லி சைகை காட்டியபோதெல்லாம் அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை. கவிதாவுக்கு இப்போது சிலிர்த்தது. மணிக்கட்டைப் பூவால் வருடிய மாதிரி, மின்சாரத்தால் தீண்டிய மாதிரி, தேனால் ஒற்றிய மாதிரி... கவிதா அவன் தொட்ட இடத்தை ரகசியமாகத் தொட்டுப் பார்த்தாள். அவள் கையே அவளுக்கு அன்னியமாய், வெட்கத்தைத் தரக்கூடியதாய் இருந்தது.

''உள்ள வந்ததுதான் வந்தீங்க. எங்க சபரியைச் சுத்திப் பாக்கறீங்களா?''

''ம்'' என்றாள் கவிதா. கஸ்தூரிரங்கனைச் சந்தேகப்பட்ட குற்ற உணர்விலிருந்து அவள் இன்னும் மீளவில்லை.

ஒருவரை ஒருவர் சரியாகப் புரிந்து கொள்ளாததாலும், ஒருவரை மற்றவர் தப்பாகப் புரிந்து கொள்வதாலுமே, இந்த உலகில் நிறைய சங்கிலிப் பிணைப்புகள் தெறித்துப் போய் விடுகின்றன. நட்பு, காதல், உறவு என்று நிறைய பிணைப்புகள் வெவ்வேறு திசையில் அறுத்துக் கொண்டு போய் விடுகின்றன. முதலில் நம்மை நாமே ஒழுங்காகப் புரிந்து கொண்டு விட்டால், மற்றவர்களையும் நாம் சரியானபடி புரிந்து கொண்டு விடுவோம்.

கவிதாவுக்கு அப்படித் தோன்றினாலுங்கூட, உரிமையுள்ளவர்கள் மீது சந்தேகப்படுதலும், கோபப்படுதலும் அப்படி ஒன்றும் தப்பு இல்லையே என்றும் தோன்றியது.

உரிமையுள்ளவர்கள்!

எப்படி கஸ்தூரிரங்கனைப் பற்றி இப்படி நினைக்கத் தோன்றியது? யோசித்துப் பார்த்தாள். அந்த நேரத்தில் அவளுக்கு விடை கிடைக்கவில்லை.

''இவன் பேரு...'' என்று ரங்கா ஒரு சிறுவனைக் காட்டித் தொடங்கினான்.

''தூர்வாசன்'' என்றான் இன்னொரு சிறுவன்.

''உங்களுக்கு ஒரிஜினல் பேரு தெரியணுமா, இல்ல, இந்த மாதிரி பேரே தெரிஞ்சாப் போதுமா. நாங்க கூட தூர்வாசன், நகுலன், சகாதேவன்னுதான் கூப்புடுவோம். அதோ... எலும்புக் கூட்டுக்குத் தோல் போர்த்தின மாதிரி இருக்காங்க பாருங்க.



''எம்ப்பா... திடீர்னு ரொம்ப இளைச்சுட்டே?''

''கவலைதானுங்க எஜமான்...''

''என்ன கவலை....?''

''பணம் போட்ட ஷேரெல்லாம்.. விலை ஏறுவதற்குப் பதில் இறங்குதே!''

- ராஜிராதா.

அவங்கதான் நகுல, சகாதேவங்கள். எப்ப வும் ஒண்ணாச் சுத்துவானுங்க.''

நகுலனும், சகாதேவனும் வெட்கப்பட் டார்கள்.

''என்னைப் பத்திச் சொல்லலியே ரங்கா. இது யாரு? உனக்குத் தெரிஞ்சவங் களா?''

''இவர் நடராஜன். காடரிங் டெக்னா லஜி. ஹெட் குக். இவருக்கு என்னடா பேரு?''

''நளராஜன்'' என்றார்கள் சிறுவர்கள்.

''யெஸ். சமையல்ல எக்ஸ்பர்ட். ஷுகர் காக்டெய்ல் இவருடைய ஸ்பெஷாலிடி தான். டெய்லி புதுசு, புதுசா ஏதாவது பண் ணுவார். சபரியோட முதுகெலும்பு, காலெ லும்பு, கையெலும்பு எல்லாம் இவர்தான்.''

''சபரி, வெஜிடேரியன்தானே?''

கவிதாவின் கேள்வியில் இருந்த குறும் பைப் புரிந்து கொண்டு சுற்றியிருந்தவர்கள் சிரித்தார்கள். ரங்காவும் கலந்து கொண் டான்.

''நளராஜனோட ஒரே வீக்னஸ் என் னன்னா...''

''ரங்கா. போதுமே. இன்னிக்கு பீட்ரூட் ஒய்ன் பண்ணியிருக்கேன். அதை ஒரு கப் குடேன்.''

''அது என்னது பீட்ரூட் ஒய்ன்? போதை சமாசாரமா?''

''புஷ்டி சமாசாரம். ராகிக் கஞ்சி, பீட்ரூட் ஜூஸ், சக்கரை, ரோஸ் எஸன்ஸ், பன்னீர், குல்கந்து எல்லாம் சேத்து ஒரு ஜூஸ். ஒடம்புல புது ரத்தம் சேரும். ராகியி னால பலமும் சேரும். பேர் மாடர்னா இருக் கணுமேன்னு பீட்ரூட் ஒய்ன்னு பேரு. பேருக்கு நான் பொறுப்பில்ல. விசாலிப் பாட்டிதான்.''

''இந்தப் பாட்டியா?''

''பாட்டிங்கள எல்லாம் தப்பா எடை போடாதீங்க. நமக்கு மேல மாடர்ன். ராத் திரி வந்து பாருங்களேன். நைட்டிதான் அத் தனை பேரும். விசாலிப்பாட்டி காஃபிக்கு, இட்லிக்கு காவேரிப்பாட்டி, முறுக்கு கோமதிப் பாட்டியோட ஸ்பெஷல், கும் மோணம் வெங்கடா லாட்ஜுக்கு ஹல்வா மாதிரி இங்கே ஜாங்கிரிக்கு காமுப் பாட்டி.''

கவிதாவிற்குச் சந்தோஷமாய் இருந்தது. இப்படிப்பட்ட ஒரு வித்தியாச உலகத்தை இவ்வளவு நாட்களாய் இழந்து விட்டதை நினைத்து மனது வருத்தப்பட்டது. கஸ்தூரி ரங்கன், அவளைப் பையன்களின் படுக்கை அறைக்குக் கூட்டிப் போனான்.

ஒரு பெரிய விசாலமான அறை. அதில் சுவரோரமாய் ரயிலில் மாதிரி ஒன்றன் மேல் ஒன்றாய்ப் படுக்கைகள். எளிமை இருந்தது. இயேசுவும், இராமனும் இருந்தார்கள்.



''மணமக்களை வாழ்த்த, நடி கையை அழைச்சது ரொம்பவும் தப்பா போச்சு...''

''என்னாச்சு?''

''அவளோடு இருமணம் செஞ்சி வளமோடு வாழ்கன்னு வாழ்த்திட்டுப் போயிட்டாங்க!''

- செங்குன்றம் ரமேஷ்ராம்.

மெக்காவின் படம் ஒன்று இருந்தது.

''ஏன் ரங்கா?'' என்று திரும்பினாள். திரும்பியவுடனேயே நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''என்ன? எதுக்கு நாக்கெல்லாம் கடிச் சிக்கிட்டு.''

''உங்களை நான்... மிஸ்டர் ரங்கான்னு மத்தவங்க மாதிரி கூப்ட்டுட்டேன்.''

''என்னை அப்படிக் கூப்புடறதுதான் ரொம்பப் பிடிக்கும். அதுவும் எனக்குப் புடிச்சவங்க அப்படிக் கூப்ட்டா இன்னும் பிடிக்கும்.''

''அப்படின்னா நான் உங்களுக்கு ரொம் பப் பிடிச்சவளா? கொஞ்சம் பிடிச்சவளா? பிடிக்கவே பிடிக்காதவளா?''

''குறும்பு பிடிச்சவ! என்னவோ கேக்க வந்தீங்களே.''

''இல்ல. இவ்வளவு க்ளீன், க்ளீன் பாட் டிங்கள எல்லாம் நீங்க எங்க பிடிச்சீங்க?''

''நேரலயே ஒருநாள் கூட்டிட்டுப் போய்க் காட்றேன். உங்களுக்கு இஷ்டம் இருந்ததுன்னா!''

''அப்படின்னா?''

அவன் பதில் சொல்வதற்குள் அந்தக் குழந்தைகள் படுக்கை அறைக் கதவு படா ரென்று திறந்தது.

அவர்கள் இருவரும் திடுக்கிட்டுத் திரும்பினார்கள். அறை வாசலில் கொஞ்சம் இருளான, பதற்றமான முகத்துடன் அவன் நின்றிருந்தான்.

''ஸாரி, மிஸ்டர் ரங்கன். அவசரம். அவ சரம்'' என்றான்.

கஸ்தூரிரங்கனின் முகம் இத்தனை நேர சிரிப்பைத் தொலைத்து விட்டுக் கொஞ்சம் அசிங்கமாக மாறியது.

(தொடரும்)

திருமணக் களேபரங்கள் முடிந்து, கட்டுச் சாதக் கூடையுடன் வீட்டுக்கு வந்தாகி விட்டது. நெருங்கிய உறவினர்களைத் தவிர, மற்றவர்கள் அவரவர் வீட்டுக்கும் ஊருக்கும் மெதுவாகக் கிளம்பத் தொடங்கினர். எல்லோரும் வாசுவிடம் சொல்லிக் கொண்டு விடைபெறும் போது கேட்ட ஒரே கேள்வி:

''ஹனிமூனுக்கு எங்கே போகப் போறே?''

வாசு பதில் சொல்லாமல் சிரித்து மழுப்பினான். கொஞ்சம் சந்தடி அடங்கியபின் அப்பா கூப்பிட்டுக் கேட்டார்.

''ஏண்டா எவ்வளவு நாள் லீவ்? எங்கே போகப் போறே...''

''எனக்கு லீவ் இன்னும் பத்து நாள் இருக்கு. அதுக்கு மேலேயும் எடுக்கலாம். ஆனா ரம்யாவுக்கு லீவ் இல்லே. இப்பவே கல்யாணத்திற்கு 'வித் அவுட் பே' தானாம். வேலையிலே சேர்ந்து இன்னும் ஒரு வருஷம் ஆகலே. அதான் ரெண்டு நாள் கழிச்சு வேலையிலே சேர்ந்துடலாம்னு இருக்கா. நானும் ஜாயின் பண்ணிடறேன். ஆறு மாசம் கழிச்சுப் போனா அவளுக்கு லீவ் சேர்ந்துடும். தவிர இப்ப கல்யாணச் செலவே நிறைய ஆயிடுத்து. இப்ப ஹனிமூன்னா குறைஞ்சது மூவாயிரம் ஆகும். அதுவும் பக்கத்திலேயே எங்காவது ஒரு நாலு நாள்தான் போக முடியும். கையிலே கொஞ்சம் பணம் சேர்ந்தா ஸிம்லா, தேபால் எங்கனா போகலாம். அதான் இப்ப ஹனிமூன் வேண்டாம்னு...''

''போடா பைத்தியம். பத்து நாள் லீவ் ஒரு பெரிய விஷயமா. பத்து நாள் சம்பளம் போனா என்ன? அந்த வேலை பத்து நாள் கழிச்சுக் கிடைச்சதா இருக்கட்டுமே. வேலையை விட வாழ்க்கை முக்கியம். பணத்தை விட பாசம் முக்கியம். உங்கிட்ட பணம் இல்லேன்னா நான் தரேன். போயிட்டு வா.''

''எதுக்குப்பா. ஹனிமூன்னு போனாத்தானா... நம்ம வீட்ல என்ன குறை? எல்லாம் மனசுதான் காரணம்.''

''உனக்கு வாழ்க்கையின் அடிப்படையே தெரியலே. புதுசா இப்ப அடி எடுத்து வைக்கையிலே, உங்க இரண்டு பேருக்கும் உள்ள ஒரு அரை குறை நெருக்கம், அந்தத் தேடல், ஒருவரையொருவர் கன்றுமடித்தனமாகக் காதலிக்கும் வேகம், இது ஆறு மாதம் கழித்து இருக்குமா... காதல் இழை யோடி இருந்தாலும் அதில் புதுமை இருக்காது. அந்நியோன்னியம் வந்து விட்டால் இந்த இனிமையான எதிர் பார்ப்பு இருக்காது. இப்ப நீங்க ஒருவரை ஒருவர் பார்க்கும் பார்வையே வேறே. அதில் எந்தக் குற்றத்துக்கும் இடமில்லை. கொஞ்சம் பழகி விட்டால் குற்றம் கண்டுபிடிக்கும் உரிமை வந்து விடும். அப்புறம் என்ன தேனிலவு?''

''இல்லேப்பா. நான் ரம்யாவுக்கு எடுத்துச் சொல்லி விட்டேன். அவளும் என்னைப் புரிந்து கொண்டிருக்கா...''

''பேய் மடையா. பெண்... அதுவும் திருமணமான புதிதில் பேசுவதை மட்டும் நம்பாதே. இன்று உன் மேல் உள்ள அதீத அன்பால, நீ சொல்வதை எல்லாம் வேதவாக்காக ஏற்கும் உன் மனைவி, வாழ்நாள் முழுவதும்

சந்தர்ப்பம்



இதையே குறையாக மனத்தில் வைத்து உன்னைக் கருவுவாள். என் கதையை எடுத்துக் கொள். உன் அம்மாவுக்கு எங்கள் வீட்டில் கல்யாணத்திற்குப் பட்டுப் புடைவை எடுக்கவில்லை. அப்புறம் வசதி வந்து நான் பல தடவை பட்டுப் புடைவை எடுத்துக் கொடுத்தும் அவளுக்கு இன்றைக்கும் அந்தக் குறை மனத்தில் இருக்கிறது. ஏதாவது மனத்தாங்கல் என்றால் அந்த விஷயத்தைக் கிளறுவாள். குமுறி அழுவாள்.''

அம்மாவா இப்படி என்ற வியப்பிலிருந்து வாசு மீள முயன்றான்.

''உனக்குப் புடைவைதானே வேண்டும். இப்போது சொல் பத்துப் புடைவை வரவழைக்கிறேன் என்றால் அதுக்குச் சம்மதிக்க மாட்டாள். 'அன்று நிறைந்த சபையில் என்னை விட்டுக் கொடுத்து விட்டீர்கள். அப்புறம் எவ்வளவு வந்தாத்தான் என்ன' என்று அழுவாள். எதற்குச் சொல்கிறேன் என்றால் வாழ்க்கையில் பணம் வரும், வசதி வரும். அந்த சந்தர்ப்பம் திரும்ப வராது. எதையுமே நாளை, அப்புறம் என்று தள்ளிப் போடாதே. இன்று நடக்க வேண்டியது இன்றே நடந்தால்தான் அது இனிமை, புதுமை... என்ன நான் சொல்றது... புரிஞ்சுதா?''

வாசு தலையாட்டினான். ''என் அப்பா எனக்கு நல்ல சிநேகிதர்...'' அவர் அப்பாவாகக் கிடைத்தது பற்றிப் பெருமையாக உணர்ந்தான்.

பாலகுமார்

● ஆர். ஹரிஹரசுப்பிரமணியன், கல்யாண்.

? ஜனநாயகம் எப்போது வெற்றி பெறும்?

! நாகபுரி அருகே ஒரு கிராமத்தில் ஒரு ''டாக்டர்'' சிறுநீரைக் குடுவையில் சேகரித்து, சாணத்தில் புதைத்து வைத்து, பின்னர் அதை ஊசி மூலம் நோயாளிகளுக்குச் செலுத்தியிருக்கிறார். பலர் மரணமடைந்தும் கூட, அப்பாவி கிராம மக்கள் அவரை நம்பி இன்னும் சிகிச்சைக்குச் செல்கின்றனர்! இம்மாதிரி பாமரத்தனம் நிலவும் வரை ஜனநாயகம் வெற்றி பெறாது. போலி டாக்டர் போல போலி அரசியல்வாதிகள் தாம் மக்களை ஏமாற்றி ஆட்சி நடத்துவார்கள். ஆக, சரியான பாடத் திட்டத்தோடு அனைவருக்கும் கல்வி புகட்டப்படுவது ஒன்றுதான் ஜனநாயகம் வெற்றி பெற வழி.

● மிஸ்டர் தஞ்சை, முத்துப்பேட்டை.

? ஆர்.எஸ்.எஸ். கட்டட குண்டு வெடிப்பு பற்றி...?

! அள்ளித் தெளித்த அவசரக் கோலமாக முதலில் ''ஆர்.டி.எக்ஸ் பயன்படுத்தப்படவில்லை'' என்று போலீஸ் உளறிக் கொட்டியிருக்க வேண்டாம். இப்போது ஆய்வில் ஆர்.டி.எக்ஸ் பயன்படுத்தப்பட்டதாகக் கண்டறிந்து துள்ளிக் குதிக்கவும் வேண்டாம். 'ஸிட்' கார்த்திகேயன் பாணியில் வெகுமதி வேறு அறிவித்திருக்கிறார்கள்! பார்ப்போம்.

● எம். சந்திரசேகர், மேட்டுமகாதானபுரம்.

? சென்னை தொழிலதிபர் மகன் ஸ்ரீராம் கொலை செய்யப்பட்டான் என்ற செய்தி வாசிக்கையில் உங்கள் மனநிலை எப்படி இருந்தது?

! நமது போலீஸின் ஆற்றலின்மை குறித்து விரக்தி ஏற்பட்டது; பிளாக்மெயிலுக்குப் பணிந்தது தவறு என்று தோன்றினாலும் பெற்றோர் மீது பரிதாபம் உண்டானது; கடத்தல் பேர்வழிகளின் அரக்க சிந்தனை கோபத்தை உருவாக்கியது; அனைத்துக்கும் மேல் ஸ்ரீராமின் நிலை ஒரு சோகத்தைச் சுமத்தியது.

● அப்துன் நஸீர், வலங்கைமான்.

? ஒரே நாளில் ஐந்து புதிய சானல்களைத் துவக்கி இந்தியா இமாலய சாதனை புரிந்திருக்கிறதே?

! நிகழ்ச்சியின் தரத்தில் தூர்தர்ஷன் ஒரு பரங்கிமலை சாதனை கூட நிகழ்த்த மாட்டேனென்கிறதே!

● எஸ். பாகீரதி, செகந்திராபாத்.


? சமீபத்தில் நீங்கள் வெட்கப்பட்ட விஷயம்?

! விவேகானந்தருடைய சிகாகோ சொற்பொழிவின் நூற்றாண்டு விழாவை அயல் நாடுகளில் கொண்டாட இந்திய அரசு, போஃபோர்ஸ் புகழ் ஹிந்துஜா சகோதரர்களின் உதவியை நாடியிருக்கிறது; ஒரு கூட்டத்துக்கு ஹிந்துஜா தலைமைதாங்கவும் போகிறார் என்ற செய்தி.

● ஹரிப்ரியன், சென்னை - 52.

? தற்போது நம் ஜனநாயகம் எப்படி இருக்கிறது?

! பிரதமரின் சுதந்திர



சுமையா? களங்கமா?

நரசிம்மராவ்: காங்கிரஸுக்குச் சுமையா? களங்கமா?

உண்ணாவிரதம்...



...ஜலசமாதி



உண்மையில் அழகு



தின சொற்பொழிவு கூட தேர்தல் பிரசாரக் கூட்டமாக மாறிவிடும் அளவுக்குப் பரிதாபமாகக் காட்சி தருகிறது.

● லக்ஷ்மி பாலகிருஷ்ணன், மதுரை.

? தமிழக மின்வாரியத்தை மத்திய அரசு கண்டித்துள்ளதே?

! உள்நாட்டில் நிலக்கரி தட்டுப்பாடு இல்லாதபோது அயல்நாட்டிலிருந்து நிலக்கரி இறக்குமதி செய்வதாகக் கூறும் தமிழக அர

❐ ரூ 25 பரிசு
பெறுபவர் :
கு. இலக்கியன்,
4, சந்திரன் மேஸ்த்திரி
தெரு,
ரெட்ஹில்ஸ்,
சென்னை - 62.



● வழக்கு எங்கே?



● 'கட்-அவுட்'



● மொழிப் புரட்சி!

சின் கொள்கை தவறானது. அதே நேரத்தில் தமிழகத்துக்குத் தட்டுப்பாடின்றி நிலக்கரி கிடைக்க மத்திய அரசு வழிவகுக்க வேண்டியது இன்றியமையாதது. ரயில் மூலம் அனுப்புவது தவிர கரையோரக் கப்பல் போக்குவரத்தும் யோசிக்கலாம். நிலக்கரியின் தரம் சரியில்லை என்று தமிழக அரசு கூறுவது ஏற்க இயலாது. தரத்துக்கு ஏற்ப அனல்மின் நிலைய பாய்லர்களை அமைக்க தொழில் நுணுக்கம் வளர்ந்து விட்ட காலம் இது. தமிழக மின்வாரியம் அப்படியொன்றும் நாம் பெருமைப்படும் அளவுக்குச் செயல்படவில்லை.

● எம். குணசேகரன், வேலாயுதம்பாளையம்.

? பிரதமர் நரசிம்மராவ் காங்கிரஸ் கட்சிக்குச் சுமையாக இருக்கிறாரா? களங்கமாக இருக்கிறாரா?

! நாட்டுக்குச் சுமை; காங்கிரஸுக்குக் களங்கம்.

● சி. சீனிவாசன், திருத்துறைப்பூண்டி.

? ஜெ. உண்ணாவிரதம்; மேதா பட்கர் ஜல சமாதி - ஒப்பிடுக.

! முன்னதில் கொஞ்சம் பொதுநல நோக்கும் தெரிந்தது. பின்னதில் கொஞ்சமும் சுயநலம் இல்லை.

● என். முருகேஷ், பெருஞ்சேரி.

? வாரியார் சுவாமிகளுக்கு தெல்லையில் கட்-அவுட் வைத்தார்களாமே?

! ஒருபுறம் மதம் அரசியலைப் பாதிக்கிறது என்றால் மறுபுறம் அரசியல் மதத்தைப் பாதிக்கிறது. இரண்டுமே நல்லதல்ல.

● ஜே. குத்தூஸ், ஆவூர்.

? காலத்தால் அழியாதது காதலா? காவியமா?

! காதலையும் காவியமாகப் படைக்கும் போதுதானே அது காலத்தைக் கடந்து வாழும் தகுதி பெறுகிறது. எனவே...

● பாலகுரு, மயிலாடுதுறை.

? தமிழகத்தில் மொழிப் புரட்சி நிகழும் என்கிறாரே, கருணாநிதி?

! மொழிப் புரட்சியைக் காட்டிலும் தொழிற் புரட்சிதான் இன்று முக்கியமானது என்பதை நாமாவது புரிந்து கொள்ள வேண்டும்.

● மூத்ஸ், நாரேந்தல்.

? தமிழக அரசு, மத்திய அரசு - ஒப்பிடுக.

! கோடிகளுக்கும் லட்சங்களுக்கும் உள்ள வித்தியாசம்தான்.

● ப்ரியா, பாளையங்கோட்டை.

? ஆட்டோ சங்கர் வழக்கில் இன்னும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லையாமே?

! குழந்தைக்கு விளையாட புதிய பொம்மை வாங்கித் தந்தால் பழைய பொம்மையை மறந்து விடுகிற மாதிரி போலீஸ் துறை மட்டுமல்ல; மக்களும் நடந்து கொள்வதால்தான் இப்படியெல்லாம் நிகழ்கிறது!

● கு. இலக்கியன், சென்னை. ❐

? இந்தியாவில் தெருக்களில் வசிக்கும் அனாதைச் சிறுவர்கள் மூன்றரை லட்சம் பேர் இருக்கிறார்களாமே? இவர்களின் எதிர்காலம்?

! இவர்கள் வளர வளர; சமூக விரோத சக்திகள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும். அவ்வாறின்றி அவர்களைச் சமூகம் பயன்படுத்திக் கொண்டால் அவர்களுடைய எதிர்காலம் மட்டுமின்றி, நாட்டின் எதிர்காலமும் நன்றாயிருக்கும்.

● நா. சிந்துகுமார், திருவட்டார்.

? சமீபத்தில் ரசித்துப் படித்த தமிழ் நாவல்?

! தோப்பில் முகமது மீரானின் ''கூனன் தோப்பு''. உண்மைகளைச் சொல்ல அலங்காரச் சொற்கள் தேவையில்லை. உண்மையிலேயே அழகும் அலங்காரமும் உள்ளது என்பதற்கு மீரானின் எழுத்து எடுத்துக்காட்டு.

● வெட்கம், வெட்கம்!



உங்களைச் சொன்ன தகவல்கள்!

◆ சேஷன் பற்றிய தலையங்கம் நடுநிலையானது. இப்படி ஒவ்வொரு துறைக்கும் ஒரு சேஷன் வந்தால்தான் அரசியல்வாதிகள் திருந்துவார்கள். தேர்தல் கமிஷனரைத் தேர்ந்தெடுக்க பொதுவாக்கெடுப்பு நடத்தினால் மக்கள் சேஷனைத்தான் தேர்ந்தெடுப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.
திருச்சி - 8, ஆர். கே. ராஜப்ரியன்.

◆ எல்லாரும் சேஷன் தேர்தலை ரத்து செய்ததைப் புரிந்து கொள்ளாமல் குறை சொல்லும் போது, நீங்கள் மட்டும்தான் உள்ளதை உள்ளபடியே சேஷன் செய்தது சரி என்று தைரியமாகச் சொன்னீர்கள். சபாஷ் ஸார்.
பெங்களூர் - 38, கே. விஸ்வநாத்.

◆ 'தி.மு.க.வில் பிளவா?' மு.க.வின் பேட்டி படித்தேன். சாணக்கியத்தனமான கேள்விகளுக்குச் சாதுர்யமான பதில்களைப் படித்த போது சபாஷ் என்று சொல்லும்படி இருந்தது.
அண்ணனூர், எஸ்.ஆர். ஹரிஹரன்.

◆ 'நியாயமான விமர்சனங்களை என்றைக்கும் நாங்கள் ஏற்றுக் கொள்வோம்' என்ற கலைஞரின் வார்த்தைகளை என்னால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளும் சகிப்புத் தன்மை இல்லாத காரணத்தால், இவர் ஆட்சிக் காலத்தில் தினமலர் அச்சகம் தாக்கப்பட்டதும் தராசு பத்திரிகை நிருபர் கொல்லப்பட்டதும் இன்னும் மறந்து போய் விடவில்லை. ஒருவேளை கலைஞருக்குத் தெரியாமல் நடந்திருந்தாலும், தெரிந்த பிறகு பெரிதாக என்ன நடவடிக்கை எடுத்தார்? தவறு செய்தவன் மகனாக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் என்ற நீதியில் பேசும் கலைஞர் மனநிலையில், அநீதிமான் அண்ணனாக இருந்தாலும், அவனை விட்டு அகன்று, நீதியின் பக்கம் சார்ந்த விபீஷணன் எப்படிக் குற்றவாளியாகத் தெரிகிறான்?
இராஜாக்கமங்கலம், கே. மணிகண்டன்.

◆ சந்தடி சாக்கில் கருணாநிதி, இராஜாஜி மீது சேற்றை வாரி இறைத்துள்ளார். ராஜாஜியின் மகன் காங்கிரசில் நின்று வென்று எம்.பியானார். ராஜாஜியோ சுதந்திராக் கட்சியின் தலைவர். நரசிம்மனுக்கெதிராக வேட்பாளரை நிறுத்துதல், பிரசாரம் செய்தல் குறித்த சர்ச்சை எழுந்த போது, "அரசியலில் அப்பாவாவது? பிள்ளையாவது?" என்றாராம். அப்படியிருக்க ராஜாஜி தம் மகனைத் தாமே எம்.பி ஆக்கியது போல் கருணாநிதி அபாண்டமாகத் திரித்துக் கூறியுள்ளார்.
திருவண்ணாமலை,
முக.தி.க. பாலசுப்பிரமணியன்.

◆ பெண்கள் எந்தத் துறையில் முழு மூச்சோடு ஈடுபட்டாலும், அது வெற்றிதான் என்பதற்கு ஆடை ஏற்றுமதியே சிறந்த உதாரணம்!
கும்பகோணம், புலவர். எஸ். கே. மூர்த்தி.

◆ ஆடை ஏற்றுமதியில் பெண்கள் முதுகெலும்பாய் இருந்து செயல்படுவது பெண் இனத்திற்கே பெருமை சேர்ப்பதாகும். குடும்பத்தையும் ஒரு நிலைப்படுத்தி, தொழிலகத்திலும் நல்ல பெயர் எடுத்து, ஏறும் விலைவாசிக்கேற்பத் தங்கள் குடும்பச் சூழ்நிலையையும் மாற்றிக் கொண்டு வாழும் அவர்கள் வாழ்க்கை, நெஞ்சை ஈரமாக்கியது.
தோழகிரிப்பட்டி, ஆர். முத்துக்குமரன்.

◆ போஃபர்ஸ் பேரத்தில் கமிஷன் வாங்கியவர்களைத் தப்ப விட்டு விட்டு... சி.பி.ஐ.யினர் வெற்றுச் சவால் விடுவதாகக் கூறும் கார்ட்டூன் அருமை.
சேலம் - 9, மு. இரவிச்சந்திரன்.

◆ இன்றைய லஞ்ச - லாவண்யத்தை நன்கு படம் பிடித்துக் காட்டியிருக்கிறது ச(ா)த்யம் என்ற சிறுகதை.
பரமக்குடி, என். ஆறுமுகம்.

◆ தனி மனிதர்களின் சாதனைகள் பல அழிந்து கொண்டிருப்பதற்கு இந்த அரசியல்வாதிகளும் ஒரு காரணம் என்பதைக் 'காவேரி-10' சிறுகதை மூலம் யதார்த்தமாகக் காட்டி விட்டார் எட்டையபுரம் ராஜன்.
திருச்சி - 17, தென்னூர் எம். யாதவன்.

◆ 'பூரண சுதந்திரம் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?' என நீங்கள் கேட்டதில் எல்லாத் தரப்பு வாசகர்களும் பதில் சொன்னவிதம் நகைச்சுவையாக இருந்தது. அதில், 'பிரதமரை கிச்சு, கிச்சு மூட்டிச் சிரிக்க வைக்கணும்' என்ற முரளி கிருஷ்ணனின் எண்ணம், முதல் பக்க சூட்கேஸ் ஜோக்கினை பிரதமரிடம் காட்டினால் ஒரு வேளை நிறைவேறலாம்!
மதுரை - 14, ரெ. பழநி.

◆ ஸ்ரீவில்லிபுத்தூர் ராஜகோபுரம்தான், தமிழகத்திலேயே உயர்ந்த கோபுரம் என்கிற பெருமையை, ஆண்டாளின் உள்ளங்கவர்ந்த அரங்கன் அல்லவா இப்போது தட்டிச் சென்று விட்டார்! இப்போது ஸ்ரீரங்கம் கோபுரம்தான் அதிக உயரமானது.
பாண்டிச்சேரி - 1, கல்வே. எஸ். சதாசிவம்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka